# ஞானரதம்

ஆசிரியர்
ஜெயகாந்தன்

1

551



# முன்னோட்டம்

தமிழ் இலக்கிய உலகில் படைப்புக்களை விடவும் படைப்புக்களைப் பற்றிய சிந்தனைகளும் விவாதங்களும் பெருகி மண்டி வருகிற ஒரு சூழ்நிலையில் இந்த 'ஞான ரதம்' வெளிவருகிறது.

இப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பது விரும்பத் தகுந்ததா இல்லையா என்கிற விவாதத்தில் இறங்குவதை விடவும் இந்தச் சூழ்நிலையைச் சமாளித்துத் தீரவேண்டியது—இந்தச் சவாலை ஏற்றுக் கொள்ளுவது—ஒரு சில படைப்பாளிகளுக்கு ஒரு நிர்ப்பந்தமாக மாறிவிட்ட சூழ்நிலையில் இந்த 'ஞானரதம்' வெளிவருகிறது.

இந்த 'ஞானரதம்' எனது சொந்த முயற்சியோ சுயமுயற்சியோ மட்டுமல்ல. இந்தப் பெயரை நானும்—அல்லது எனது பெயரை இந்த ரதமும்—தாங்கியிருக்கலாம். ஆனால் இந்த ரதமே நானல்ல. என்னைப் போலவே இலக்கிய தாகமும் படைப்புக்கு அடிப்படை

யான தினவும் உள்ள நண்பர்கள் பலர் இதிலே பங்கு பெற்று இருக்கிருர்கள்; பெறவும் இருக்கிருர்கள்.

சொந்தத்தில் ஓர் இலக்கியப் பத்திரிகை ஆரம்பிப்பது என்கின்ற எண்ணத்தை வெகு நாட்களுக்கு முன்னலேயே கைவிட்டுவிட்டவன் நான். என்னுடைய சரக்குக்கு எங்கெங்கோ கிராக்கி இருக்கும்பொழுது சொந்தக் கடை போடுவதின் மூலம் எனது உற்பத்தி பாதிக்கப் படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் என்ற அச்சத்தாலேயே நான் கைவிட்டவன். ஆனல் இப்போது எனது சரக்குக்கு மார்க்கெட்டிலே அதிக கிராக்கி இருந்தபோதிலும் கூட அங்கே விலை போக முடியாத, மார்க்கெட்டில் திரிகிறவரின் பார்வைக்கு மிரட்சி தரக்கூடிய இன்னும் தெளிவாகச் சொல்லப்போனல் மார்க்கெட்டிலே வைக்கக் கூடாத சில சரக்குகளை வினியோகம் செய்ய தனிப்பட்ட முறையில் தனிப்பட்ட வாடிக்கைக்காரர்களைச் சந்தித்து வரவு செலவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு நேர்ந்திருக்கிறது.

'சரஸ்வதி' பத்திரிகை நின்று போன காலத்திலிருந்தே எனக்கு இப்படியொரு பத்திரிகையின் தேவை இருந்திருக்கிறது.

ஆனலும் அப்படியொரு பத்திரிகை இல்லாது போனதின் காரணமாகவே சில நன்மையும் எனக்கு ஏற்பட்டது.

என்னை எழுத அழைத்த பத்திரிகைகளில் அவர்கள் தேவைக்கு மட்டுமல்லாது என்னுடைய தேவைகளுக்காகவும் நான் எழுதினேன். என்னுடைய கருத்துக்களை வலிந்து நான் சுமத்தினேன் என்று இதற்கு அர்த்தமில்லை. அவர்களின் நிர்ப்பந்தத்திற்கு நான் பணிந்து போனேன் என்றும் இதற்குப் பொருள் இல்லை. ஆனலும் சில துணிகரமான, இலக்கிய மனம் போகிற போக்கில் எழுதிப் பார்க்கிற, எந்த விதமான பயத்திற்கும் இடமில்லாத, சுதந்திரக் கனவுகளைத் தீட்டிப் பார்க்கும் சுவைக்காக ஒரு சுவர் அல்லது ஒரு திரை அல்லது ஒரு கையகலத் தளம், வளர்கின்ற கலைஞனுக்குத் தவிர்க்க முடியாத தேவையாகிறது.

இந்தத் தேவை எனக்கு மட்டுமல்ல; எழுதுகிற—என்னைப் போல் எழுதுகிற—அதாவது என்னை மாதிரியே

எழுதுகிற அல்ல-பலருக்கு இப்படியொரு தேவை இருக்கிறது என்பதையும் என்னுல் உணர முடிந்தது.

எழுதுகிறவர்களுக்கு மட்டுமல்ல, படிக்கிறவர்களுக்கும்-அதாவது, இன்றைய பத்திரிகைக் குவியல்களிலே கூட இலக்கியத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தாகம் தீர்த்துக் கொள்வதற்காகப் படிக்கிறவர்களுக்கும்-இந்தத் தேவை எழுதுபவர்களைவிட அதிகமாக இருப்பதையும் என்னுல் அறிய முடிந்தது.

எனவேதான் ஓர் இலக்கியவாதி என்கிற முறையில் தனித்தும் ஒதுங்கியும்—ஒரு பக்கம் ஒடுங்கியும்—இருப்பதிலே பயனும் சுவையும் கண்டுவிட்ட நான் இந்தப் பந்தத்திற்கு உட்பட்டிருக்கிறேன்.

தன்னை உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருப்பதனை விடவும் பந்தம் வேருென்றில்லை. தன் அறிவுக்கும் புலனுக்கும் எட்டாத தூரத்திலிருக்கின்ற யார் யாருடனெல்லாமோ—தன்னை அடிக்கடி பகிரங்கப் படுத்திக் கொண்டிருப்பதனுல்—பந்தமும் சொந்தமும் கொண்டிருக்கிருன் அறிவியல் மனிதன்.

தன்னை வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம்—அதனைச் சிறப்பாக வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம்—மனிதன் காலத்தை வென்று நிற்கிருன்.

இல்லாவிட்டால் காளிதாசனுக்கும் நமக்கும் என்ன பிராப்தி? சாக்ரடிஸுக்கும் உங்களுக்கும் என்ன சொந்தம்? இன்றைக்கு மவுண்ட் ரோட்டிலே நடந்து போகிறவனை அன்றைய மார்க்ஸ் ஏன் மடியைப் பிடித்து இழுக்கிருர்?

இதெல்லாம் மனிதன் தன்னை வெளிப்படுத்திக் கொண்டதன் விளைவு. சிறப்பாக வெளிப்படுத்திக் கொண்டதின் சிறப்பான விளைவு.

ஞானவான்கள் ஒதுங்குவதும் ஒடுங்குவதும் ஒதுக்கத்துக்காகவும் ஒடுக்கத்துக்காகவும் அல்ல. இந்தத் தன்மைதான் அவர்களைப் பொதுமைப் படுத்துகிறது.

'ஞானரதம்' எந்தப் படைப்பாளியின் தன்மையையும் தனித்துவத்தையும் குலைக்காது.

ஒரே மாதிரி சிந்திக்கிறவர்கள் ஊர்கோலம் போகத்தான் லாயக்கு. கருத்துலகில் காரியங்கள் சாதிப்பதற்

குப் பலதரப்பட்ட கருத்தோட்டங்களும் சிந்தனைகளும் வேண்டும். என்னோடு உடன்பாடு கொண்டவர்கள் அல்ல, என்னிடம் மாறுபட்டவர்களே என்னை வளர்த்திருக்கிறார்கள். என்னோடு உடன்பாடு உள்ளவர்கள் கூட என்னோடு மாறுபடும்போதெல்லாம் என்னை வளர்த்திருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் உடன்பாடு கொள்வது என்பது ஒருவர் ஒரு புத்தகத்தைப் பார்த்துத் தன்னுடைய கருத்தை Refer செய்து கொள்வது மாதிரி. அறிவுலக வாழ்க்கை என்பது Reference-ஸோடு நின்று விடுவதில்லை.

மாறுபாடான கருத்துக்களை அறிவின் முனைப்பிலே நிற்கிறவர்கள் முடிவற்று தர்க்கம் செய்து கொண்டிருப்பதில்லை. அது வெளிப்படும் பொழுதே, அது வெளிப்படுகின்ற முறையிலேயே இன்னொருவருக்கு உடனே வெளிச்சம் ஏற்பட்டு விடுகிறது. அந்த வெளிச்சத்தில் மாறுபாடு மறைந்து போகிறது. அந்தச் சிந்தனைச் சங்கிலி மேலும் தொடர்வதற்கு முடிச்சு விழாமல் அவர்களால் சம்பாஷிக்க முடிகிறது. இப்படிப்பட்ட அறிவு நேயம் கொண்டவர்கள்தான் இங்கே ஆசிரியர் குழுவிலே அங்கம் வகிக்கிறார்கள். எங்களுக்குள்ளே உடன்பாடுகளும் உண்டு; மாறுபாடுகளும் உண்டு. அந்த மாறுபாடுகளை நாங்கள் மதிக்கிறோம். ஏனென்றால் அவை அடிக்கடி மறைகின்றன. எனவே புதிது புதிதாகவும் தோன்றுகின்றன.

பிற எழுத்தாள நண்பர்களுக்கு 'ஞானரதம்' தருகின்ற செய்தி இதுதான்: வேறு பத்திரிகைகளிலே நீங்கள் எழுதமுடியாதனவற்றை இங்கே எழுதுங்கள்.

அதே மாதிரி வாசகர்களுக்கு நாம் தருகின்ற சலுகை இதுதான்: வேறு பத்திரிகைகளில் எதையோ தேடி அடிக்கடி இல்லை என்று ஏமாந்து தவிக்கிறீர்களே— அதை 'ஞானரதம்' தர முயலும்.

த. ஜெயகாந்தன்

# ரசனை

நம்மில் ரொம்பப் பேருக்கு ரசிக்கத் தெரியவில்லை. அறிவு பூர்வமான ரசனைக்கு ஒரு பயிற்சி அவசியம். ரசனை யில்லாதவர்களே படைக்கவும், படிக்கவும், விமர்சிக்கவும் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை மிகவும் மூர்க்கமானது—கொடியது.

“எனக்குப் பிடிக்கவில்லை—என் அபிப்பிராயம் இது” என்கிற குறுகிய எல்லையினுள்ளே உலகத்தையே கொண்டு வந்து நிறுத்தி, சகட்டு மேனிக்கு எல்லாவற்றையும் சிரச்சேதம் செய்து விடுவது மூடத்தனத்தின் சர்வாதிகாரமாகும்.

கலையும் இலக்கியமும் இந்த சர்வாதிகாரத்தினுல் எல்லாக் காலங்களிலும், எல்லா தேசங்களிலும் எவ்வளவோ கொடுமைகளை அனுபவித்திருக்கின்றன.

அந்தக் கொடுமைக்கு ஆட்படும்போது கூட, அந்தக் கலைஞர்கள் ஏசுபிரான் போல ‘தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே இவர்கள் இந்தத் தவறைச் செய்கிறுர்கள்; கர்த்தரே, இவர்களை மன்னித்தருளும்’ என்றுதான் கலங்கியிருக்கிறுர்கள்.

இந்தப் பகுதியில், இந்தக் கொடுமையும் இந்தக்காரியமும் நீக்கப்படுவதற்காக அல்ல—குறைந்த பட்சம் குறைக்கப்படுவதற்காக—ரசனைக்கு அடிப்படையான சில ஆரம்பப் பயிற்சிகளே விளக்கப்படுகின்றன.

நண்பர் வெ. சாமிநாதன் நல்ல ரசிகர். ரசனையின்பாற் பட்ட நல்ல விமர்சகர்.

—ஆசிரியர்.

## அனுபவம்
### EXPERIENCE

**முகவுரை**

‘‘ஒருவருடைய முகச்சாயலை அப்படியே படம் பிடித்தாற்போல் கொண்டு வருவது எல்லோருக்கும் வந்த கலையல்ல. கார்ட்டுன் மாலிக்கு அது ஒரு இயற்கை வரம். வர்ண ஓவியங்களிலும், சிலையிலும் தத்ரூபமாக வடிப்பவர்கள் உண்டு. ‘‘சுத்த கலைஞர்கள்’’ என்று தங்களைச் சொல்லிக் கொள்கிற சில ஆத்மாக்கள் இதைப் பார்த்துக் கேலி செய்வதுண்டு. ‘‘அது கலையில்லை. புகைப் பட வித்தை’’ ரொம்ப சாதாரணமான வித்தை’ என்று அவர்கள் சொல்லி ஒதுக்கு கிறார்கள். ஆனால் இப்படி ஒதுக்குகிற கலைஞர்களில் பெரும்பாலோருக்கு ஒரு முகத்தின் முக்கியமான சாயலையும் குணத்தையும் வடிக்கும் ஆற்றல் சித்தியாகவில்லை என்பது நமக்கு எளிதில் புரிந்துவிடும். அந்தத் தோல்வியை மறைப்பதற்காக, அவர்கள் ‘அது கலையில்லை’ என்று மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து பேசுகிற வழக்கம்.

ராமனையும் கிருஷ்ணனையும் நாம் பார்க்காத முகங்களையும் ‘‘குணங்களை’, மட்டும் காட்டி வரையலாம். ஆனால் பார்த்துப் பழகிய ஒரு முகத்தின் சாயலைக் கொண்டுவர முடியாமல், கைவந்தவர்களைக் ‘‘கீழ்த்தரக் கலைஞர்கள்’’ என்று சொல்வது விதண்டாவாதம். மகாத்மா காந்தியை நாம் நேரிலும் திரைப் படத்திலும் பார்த்திருக்கிறோம். ஆனால் அவரைச் சிலையில் வடிப்பதாகச் சொல்லி, அவருடைய அப்பாவையும், தாத்தாவையும் போல வடிக்கிற முதல்தரக் கலைஞர்கள் சிலர் நம் நாட்டில் இருக்கிறார்கள். ‘‘சாயல் வரவில்லையே’’ என்றால் நம்மைக் கோபித்துக் கொண்டு உதட்டோரமாக முறுவலிக்கிறார்கள்.

## வெளிப்பாடு
### EXPRESSION

அந்த ஜப்பான்காரன் காகிதத்தைக் கத்தரித்து முப்பது வினாடிக்குள் தத்ரூபமாக முகச்சாயலைக் கொண்டு வரும் வித்தையைப் பார்த்ததும் இது ஞாபகம் வருகிறது. அவன் உயர்ந்த கலைஞன் அல்ல. ஒண்ணேகால் ரூபாய்க் கலைஞன் தான். சாதாரணத்தாளைக் கொண்டு நம்மைப் போல அரை நிமிடத்தில் நிழற்படம் கத்தரிப்பவன் தான். அப்பியாசமும் பண்பாடும் இல்லாமல் கையில் வந்ததைக் கிறுக்கி ‘எக்ஸிபிஷன்’ வைத்து கழுத்தை

அறுக்கிற 'நவீனக் கலைஞன்' இல்லை...... (ப. 81-83.)

ஒரு பெரிய ஹாலில் நூற்றுக்கணக்கில் வர்ண ஓவியங்கள் மாட்டியிருந்தன. விசாரித்ததில் ரேடியோ ஸ்தாபனத்தில் வேலை செய்யும் அதிகாரிகளும் ஊழியர்களும் தீட்டிய ஓவியக் கண்காட்சி என்று சொன்னார்கள். அதையும் போய்ப் பார்த்தோம். ஜப்பானின் ஓவிய மரபுகள் அத்தனையையும் அங்கே காண முடிந்தது. அதோடு, மகானுபாவன் பிகாசோவின் ஏகலைவர்களும் கலைவழித் தோன்றல்களும் தீட்டிய பயங்கரங்களும் புதிர்களும் இடம் பெற்றிருந்தன.''

(......142)

# நவீன ஓவியம்
## MODERN ART

''உதய சூரியன்''ல் தி. ஜானகிராமன்.

இம்மாதிரியான அபிப்ராயங்களை ஒரு சாதாரண மனிதன் சொல்லியிருந்தால் நான் கவலைப்பட்டிருக்கப் போவதில்லை. சாதாரண மனிதர்கள், சந்தர்ப்பங்கள் எழும் போதெல்லாம் சொல்லும் அபிப்ராயங்கள்தாம் இவை என்பது நாம் கேட்டுக் கேட்டுச் சலித்த அநுபவம் சொல்கிறது.

ஒரு சாதாரண மனிதனோ, அல்லது வேறு துறைகளில் ஒரு சாதனை காட்டிய ஜானகிராமன் போன்றவர்களோ என்ன சொல்கிறார்களோ அவ்வபிப்ராயங்களைப்பொருத்துத்தான் ஓவியத்துறை பாதிக்கப்பட இருக்கிறது என்ற நோக்கில் நான் கவலைப்படவில்லை.

என் கவலைகள் இரண்டு வகைப்பட்டவை. ஏதும் அறியாத சாதாரண மனிதனும் சரி, விஷயம் தெரிந்திருக்க வேண்டிய ஜானகிராமன் போன்றவர்களும் சரி, தாம் அறிந்திராத-சம்பந்தப்படாத, தம்மைத் தகுதிப் படுத்திக் கொள்ளாத விஷயங்களைப் பற்றியெல்லாம் அபிப்ராயம் சொல்ல தமக்குத் தகுதி கிடைத்திருப்பதாக நினைத்து விடுவதுதான். எந்தத் துறையானாலும் சரி, முதலில் அதனுள் நுழைய, பின் அது பற்றித் தெரிந்து கொள்ள, பின் அபிப்ராயம் கூறத் தகுதி வேண்டும், தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ள

வெ. சாமிநாதன்

வேண்டும் என்ற ஒரு ஆரம்பப் பாடம் கூட, சாதாரண மனிதனும் சரி, வேறு துறைகளில் தலையிடும் ஒரு துறை பிரமுகர்களும் சரி கற்றுக் கொள்ளவே இல்லை.

எனது இரண்டாவது கவலை இந்த அபிப்ராயங்களை ஜானகிராமன் பல இடங்களில் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார். டெல்லியில் நடக்கும் கணையாழி வாசகர் அரங்கில் பல முறை இவ்வபிப்ராயங்களைக் கூறியிருக்கிறார்.

"இந்த மகானுபாவன் பிகாஸோ இருக்கிறானே, அவனுடைய Guernica-வில் ஏதேதோ பிரமாதமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். நமக்கு அதில் ஒன்றும் தெரிவதில்லை. இவர்களுக்கும் அதில் ஏதும் தெரிவதில்லை. தெரியாவிட்டாலும் எதையெதையோ கண்டு விட்டதாகச் சொல்லும் snobs தான் அதிகம்", என்றெல்லாம் ஜானகிராமன் அபிப்ராயங்கள் வெளியிட்டிருக்கிறார். எனக்கு மிகவும் ஆச்சர்யமும், வருத்தமும் அளிக்கும் விஷயம், இலக்கியத்தில் நல்ல சிறப்பான சாதனை காட்டியுள்ள ஒரு கலைஞனுக்கு சங்கீதம் போன்ற ஒரு abstract art-ல் ஈடுபாடு உள்ள ஒரு ரசிகருக்கு, குறிப்பாக சங்கீதத்தில் அவர் ஒப்புக்கொள்ளும் ஒரு வளர்ச்சியை, ஒரு கலை நோக்கை, ஒரு பார்வையை, சாதனைப் படைப்புக்களை எதிர்காணும் ஆற்றலை, மனச் சாய்வை, ஏன் ஓவியத்திலும் சிற்பத்திலும் காண மறுக்கிறார்? அவர் கலை உள்ளத்தை அவை பாதிக்காதது எவ்வாறு என்பது ஆச்சர்யமாக இருக்கிறது. ஒரு ஆழ்ந்த கலை உள்ளம் இத்தகைய பட்டை போட்ட பார்வை கொண்டதாக இருக்க முடியாது என்பது என் வெகு கால நம்பிக்கை. இது ஜானகிராமனைப் பற்றிய விவாதம் இல்லை.

நம்மவர்களிடையே உள்ள பார்வைக் குறுகலையே இது காட்டுகிறது. இதற்குக் காரணம் நம்மிடையே நம் நாட்டில் சங்கீதம், நாட்டியம் ஆகிய இரண்டு கலைகளுக்குத்தான் ஒரு மரபு, பாரம்பரியம் உள்ளது. ஆகவே இவ்விரண்டு துறைகளில் மாத்திரம் கலை எது, mass showmanship எது என்று நாம் சுலபமாகத் தரம் பிரித்துவிடுகிறோம். இரண்டையும் குழப்பிக் கொள்வதில்லை. ஏனெனில் இவ்விரண்டிற்கும் ஒவ்வொரு காலத்திலும், பயிற்சி பெற்ற, ரசிக மனம் படைத்த ஒரு minority audience காலம் காலமாக நமக்கு இருந்து வருகிறது. ஓவியம், சிற்பம் ஆகிய

இந்த நூற்றுண்டில் வாழ நேர்ந்து விட்ட ஒரு மனிதன் என்கின்ற முறையில் நவீன ஓவியம், நவீன சிற்பம், நவீன சங்கீதம் என்பனவற்ரேடு ஒருவனுக்கு நேரடித் தொடர்பு இருந்தாலும் இல்லாவிட்டாலும் நவீன சிந்தனைகள் என்ப தோடு அவன் தொடர்பு கொண்டுதானே இருக்கவேண்டும்.

பாரிசுக்குப் போ

வேறு எத்துறைக்கும் இத்த கைய பயிற்சி பெற்ற minority audience கிடையாது. ஏனெனில் தொடர்ந்த பாரம்பரியம் கிடையாது.

இரண்டாவதாக மிகப் பெரிய ஒரு களங்கம்: நம்மிடையே நமக்கு ஒரு சிந்தனை மரபு, ஒரு அறிவார்த்த பாரம்பரியம் என்றுமே இருந்ததில்லை. இதனுல் எது பற்றியும் நாம் திறந்த மனத்துடன் ஆராய எதிர்கொள்ள இயலாது போய்விடுகிறது.

மூன்ருவதாக ஒரு அடிப்படையான விஷயம். இது என்னுடைய வெகுநாளைய நம்பிக்கை. இப்போதைய முடிவும் கூட. பல்வேறு கலைத் துறைகளாகவும், பல்வேறு சிந்தனைத் துறைகளாகவும் நாம் பிரிப்பன எல்லாம் ஒரு ஆழ்ந்த அடித்தளத்தில் ஒன்ருனவை. ஒரே லட்சியத்தை நோக்கிச் செல்பவை. ஒரே ஒரு நமக்குத் தெரியாத பேருண்மையின் திரையை ஒவ்வொரு புறமாக ஒவ்வொரு விதமாக வெவ்வேறு இடங்களில் அகற்றி அவ்வுண்மையுடன் நம்மை எதிர்கொள்ள வைப்பவை. இலக்கியமும் தத்துவமும் பல்வேறு விஞ்ஞானப் பிரிவுகளும் பல்வேறு கலைகளும், சிந்தனைத் துறைகளும் எல்லாமே அந்த Unknown Quantity-யைக் காணும் explorations. உதாரணமாக நாம் இருப்பது ஓர் இருட்டு அறை. இத்துறைகள் எல்லாம் இவ்விருட்டறையிலிருந்து வெளியுலகை நமக்குக் காட்டும் பல்வேறு தரத்த, பல்வேறு நிலைகளிலுள்ள ஜன்னல்கள். இந்த எல்லா ஜன்னல்களையும் திறந்து நாம் பெறக்கூடிய காட்சி தான் அவ்வெளியுலகத்தின் ஒரு

சாத்தியமாகக் கூடிய அளவுக்கு முழுமொத்தமான அறிவை நமக்குத் தரும். இத்துறைகளெல்லாம் ஒரு ஆழ்ந்த அடிப்படையில் ஒன்ருனவை யாதலால்தான் ஏதோ பார்வைக்கு இப்போதைய நம் அறிவின் அளவிற்குச் சம்பந்தமற்றுத் தோன்றும் ஒரு துறையில் பெற்ற அறிவு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பல மற்ற துறைகளையும் பாதிக்கிறது. எந்த ஒரு துறையிலும் மற்ற துறைகளின் பரிச்சயம் அற்று ஏதும் தனித்துத்தெரிந்துகொள்வது என்பது இயலாததாகிறது. எனவே நாம் எந்த ஒரு துறையளவில் மட்டும் நம் ஈடுபாட்டைச் சிறைப்படுத்துவோமானுல் அந்த Unknown Reality–யைப் பற்றிய நம் அறிவு நம் ஈடுபாட்டின், துறைகளின் குறுகலைப்

---

மாடர்ன் ஆர்ட் பற்றி அபிப்ராயம் சொல்ல வருகிறவர்கள், அதைத் தூக்கி எறிந்து பேசுகிறவர்கள் எல்லோருமே ஒரு விஷயத்தை மறந்து விடுகிறீர்கள். நீங்கள் இப்போதுதான் உங்களுக்குப் புரியாத, பிடிக்காத—இந்த மாடர்ன் ஆர்ட் பெயிண்டிங்கைப் பற்றிச் சிந்திக்கவே ஆரம்பித்தீர்கள். உடனே உங்கள் முடிவை அவசர அவசரமாக வெளியிடவும் செய்து விட்டீர்கள் என்பதை மறந்து விடுகிறீர்கள். அது போலவே, நாங்கள் எங்கள் வாழ்க்கை முழுவதையும் இதற்கு அர்ப்பணித்திருக்கிறேமே அதை மறந்து-எங்களையும் உங்களின் அபிப்ராயத்திற்கு உடன்படச் சொல்லுகிறீர்கள். இந்தக் கலை புரியாதிருந்தாலும் இது சம்பந்தப்பட்ட கலைஞனையாவது கௌரவியுங்கள். உங்களை விட இதிலே நாங்கள் முழுக்கவும் ஈடுபட்டிருக்கிறவர்கள் என்பதால் சித்திரங்கள் பற்றியும் சிற்பங்கள் பற்றியும் எங்களுக்குக் கொஞ்சம் அதிகம் தெரியும் என்பதால் எங்களுக்கு மதிப்புக் கொடுங்கள். ஒருவன் ஏமாற்றலாம்—ஒருவன் ஏமாறலாம். உலகமே ஏமாற்றுமா—உலகமே ஏமாறுமா. அது சாத்தியமெனில் அந்த அர்த்தமுள்ள ஏமாற்றம்தான் கலை.

பாரிசுக்குப் போ

பொறுத்துப் பின்னப்பட்ட தாகவே இருக்கும். இன்னும் ஒன்று எந்த ஒரு துறையிலும் ஒருவனுக்கு உள்ள ஈடுபாடு உண்மையானதாயின் மற்ற ஒரு துறையின் சாதனையை அவன் எதிர்கொள்ள நேரிட்டால் அந்த எதிர்கொள்ளலை அவன் தன் துறையில் உள்ள தன் ஈடுபாட்டின் ஆழம், பரிமாணம் விரிவதை உணரவேண்டும். அவ்வாறில்லாது தான் எதிர்கொள்ளும் சாதனை தன் துறை ஈடுபாட்டுக்குச் சம்பந்தம் இல்லாதது என்று நினைப்பானுனால் அவன் துறையில் அவனுக்குள்ள ஈடுபாடு பொய்யானது என்று எனக்குத் தோன்றுகிறது.

இதுபற்றி யெல்லாம் விரிவாகச் சொல்லவேண்டும்; இப்போதைக்கு எனக்கு இது பற்றியெல்லாம் தெரிய சாத்தியமாகியுள்ளவரை, என்று எனக்குத் திட்டம் உண்டு. அத்திட்டத்தின் பரவலான முதல் படி இது.

இதில் "அநுபவமும், வெளிப்பாடும்" என்பது பற்றியே சொல்லியுள்ளேன். அதுவும் ஒருசில துறைகளைப் பற்றி மட்டுமே; அதிலும் மிகவும் sketchy ஆகத்தான். இந்த sketchiness-க்குக் காரணம்: இந்தக் கட்டுரை எழுத இருந்த தூண்டுதல், ஒரு குறிப்பிட்ட தேதியில் படிக்க நேர்ந்த நிர்பந்தத்தால் கிடைத்த நேரம், இவை வகுத்த வரையறை தான் காரணம். இவைபற்றி இன்னும் விரிவாகச் சொல்லவேண்டும். அனுபவமும் வெளிப்பாடும் என்ற அளவிலேயேகூட சினிமா, நாடகம், சிற்பம், தத்துவம் ஆக இன்னும் பல துறைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும்.

பின்னும் இவ்வெளிப்பாடுகள் (i) எவ்வாறு சிந்தனைத் துறைகளாக ஒருபுறமும், கலை இலக்கியத் துறைகளாக மறுபுறமும் பிரிகின்றன; (ii) பல்வேறு சிந்தனைத் துறைகள் ஒவ்வொன்றும், பல்வேறு கலைத்துறைகள் ஒவ்வொன்றும் அவற்றின் படிப்படியான காலவளர்ச்சியில் ஒன்றை ஒன்று எவ்வாறு பாதித்துள்ளன, வளப்படுத்தியுள்ளன; (iii) இப்பாதிப்புகளின் நியாயம், காரணம் என்ன; (iv) இவற்றின் அடிப்படை ஒற்றுமை என்ன, (v) இப் பல்வேறு துறைகளின் ஒருமித்த தொகுப்பான அறிவு எவ்வாறு இவை நமக்குப் பரிச்சயமாக்கும், நம்மை எதிர் கொள்ள வைக்கும், Unknown Reality-ன் பூரண அறிவை விஸ்தரிக்கின்றன, என்பன பற்றியெல்லாம் இத்துறைகள் ஒவ்வொன்றின் ஆரம்ப காலத்தி

விருந்து இன்றுவரை சொல்லப்பட வேண்டும். இதெற்கெல்லாம் நான் காலத்தையும், சந்தர்ப்பங்களையும் எதிர்நோக்கவேண்டும்.

x x x

"I can't describe her beauty in words. But I can play it on a violin".

இது எங்கோ படித்த ஞாபகம். ஆனால் யார் சொன்னது என்று ஞாபகம் இல்லை. அது இப்போது நமக்கு அவசியமும் இல்லை. ஆனால், தான் சொல்வது என்ன என்று அர்த்தம் அறிந்து சொன்னவனின் வார்த்தைகள் இவை என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. சம்பிரதாயமான நமது நினைவுப் பழக்கங்களைத் தகர்க்கின்றன இவ்வார்த்தைகள். வயலின் சப்தங்களை எழுப்ப உதவும் ஒரு வாத்யம். ஆனால் எழுப்ப நினைத்ததாக இவ் வார்த்தைகளிலிருந்து நமக்குப்படுவதோ ஒரு பெண்ணின் அழகு, அதாவது உடற் கூற்று ஒழுங்கு. இவ் வாக்கில், இருவேறு உறவற்ற அநுபவங்கள், இவ்வார்த்தைகளில் பிணைக்கப்படுவதாகத் தோன்றுகிறது. பார்க்கலாம்.

பெண்ணின் அழகு,-வார்த்தைகளில், கவிதையில்—வர்ணிக்கப்படுவது நமக்குப் பழக்கமான ஒன்று. பழக்கமான ஒன்று என்றேன். சாத்தியமான ஒன்று என்றோ நியாயமான ஒன்று என்றோ நான் சொல்லவில்லை. அழகு என்பது காட்சி அனுபவம் (visual experience). வார்த்தை என்பது கேள்வி அநுபவம் (auditory experience) இவ் வேறுபட்ட அநுபவங்கள் வெற்றிகரமாக ஒன்றிணைவதாக நாம் யோசனையின்றி ஒப்புக்கொள்வதும், மனம் அங்கீகரிப்பதும், வெறும் பழக்கத்தின் காரணமாக ஏற்படும் விளைவுகள். உண்மையில், நமது அனேக நம்பிக்கைகளில், தீர்மானங்களில், முடிவுகளில், நாம் வெறும் அடிமைகள்; பழக்கத்தின் அடிமைகள். பழக்கம் சிந்தனையின் இடத்தைப் பறித்துக் கொள்கிறது.

வார்த்தைகள் வெறும் குறியீடுகள் (symbols). நாமாக, நம் சௌகர்யத்திற்காக, நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் குறியீடுகள். இந்த குறிப்பிட்ட சிந்தனைக்கு, அநுபவத்திற்கு இன்ன சப்தம் என்ற சுயவரையறுப்பு தாம் வார்த்தைகள். ஆனால் சிந்தனைகளோ, அநுபவங்களோ, அல்லது இவற்றில் நிகழ் அரங்கமாக இருக்கும் நாமோ, கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டிருக்கிறோம். 'நான்', நான் என்ற

உணர்வு என்னுள் பிறந்த கணத்திலிருந்து இக்கணம் வரை நிகழ்ந்த எல்லா அநுபவங்களின், சிந்தனைகளின் தொகுப்பு. இந்த 'நான்' ஆகிக்கொண்டிருக்கும், எனவே மாறிக்கொண்டிருக்கும் ஒரு உணர்வுத் தொகுப்பு. நேற்று பார்த்த உங்களை, ஏன், கடந்த கணம் பார்த்த உங்களை, இக்கணம் நான் பார்க்கவில்லை. நானும் மாறியிருக்கிறேன். நீங்களும் மாறியிருக்கிறீர்கள். ஆனால், நம்மைக் குறிக்க நாம் ஒருவருக்கொருவர் !வழங்கிக் கொள்ளும் குறியீடுகள் (அதாவது நம் பெயர்கள்) மாறுதவை.

உங்களில் ஒருவரைப் பற்றிய என் சிந்தனையோடு, உங்கள் பெயரை இன்னொருவரிடம் நான் வழங்கும்போது, உங்களைப் பற்றிய என் சிந்தனையிலிருந்து உங்களைப் பற்றிய கேட்பவரது சிந்தனை மாறுபடுகிறது. இம் மாறுபாடு இப்போதைக்கு மட்டுமல்ல, இன்றோடு மட்டுமல்ல, நம் சிலரோடு மட்டுமல்ல, எத்தனை பேருடைய அனுபவங்களில் நான் நுழைகின்றேனோ, அவ்வளவு வேறுபட்ட தனித்தனி சாமிநாதன்கள்; உங்கள் ஒவ்வொருவருக்கென்று ஒவ்வொரு சாமிநாதன்; எனக்கென ஒன்று, என் மனைவிக்கென ஒன்று; என்னுடைய நினைப்பிலேயே கூட போன கணத்திற்கென ஒன்று; இக்கணத்திற்கென ஒன்று; இனி வரும் கணம் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சாமிநாதன். ஆனால் சப்தக் குறியீடான 'சாமிநாதன்' என்ற பெயரோ, நான் பிறந்த கணத்திலிருந்து, மற்றவர் ஞாபகத்திலிருந்து நான் மறையும் வரை, உங்களுக்கும், எனக்கும், எல்லோருக்கும் ஒன்றுதான்: 'சாமிநாதன்'.

---

*நீங்கள் ஏன் அதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அவஸ்தைப் படுகிறீர்கள். அதை உணர்ந்து கொள்ள முயலுங்கள். கலையின் மகத்துவமே அதுதான். அறிந்து கொள்ள முடியாத விஷயங்களை அது உணர்த்திச் செல்லும்.*

பாரிசுக்குப் போ

பழமைக்கும் பழமையான ஒன்றுக்கும் புதுமைக்கும் புது மையான ஒன்றுக்கும் இடையே கலையின் ஆத்மா எவ்விதம் பின்ன முருமல் புறவளர்ச்சியின் மாற்றம் காட்டி அக அழகை இழக்காமல் பாலம் கட்டிப் பாதுகாத்து வருகிறது.

பாரிசுக்குப் போ

இவ்வேறுபாடு, சிந்தனை உணர்வைப் பொருத்தது மட்டுமல்ல. காட்சி அநுபவமும் இவ்வாருக வேறுபடுகிறது. This consciousness of 'I' is a point in space. This point emerged the moment I was born. Every conscious, perceiving subject occupies a point of its own in space. The world is perceived from this point. There are, hence, as many differing worlds as there are perceiving points.

இந்த புள்ளி என்பது மிக மூலாதாரமான ஒன்று. இதிலிருந்து தான், இந்தப் புள்ளி வகிக்கும் இடத்தைப் பொருத்துத்தான், நம் உணர்ச்சிகள், காட்சி அநுபவங்கள் எழுகின்றன, மாறுபடுகின்றன. இந்தச் சிறு அறைக்குள் அடைபட்டுக் கிடக்கும் நாம், நம் பரஸ்பர பரிவர்த்தனையைப் பொருத்த வரையில், பிரம்மாண்டமான பிரபஞ்சத்தில் பல மில்லியன் ஒளி வருடங்கள் (light years) தூர இடைவெளியில் சுழன்றுழலும் வெவ்வேறு கிரஹங்கள்.

நாம், நம் ஒவ்வொருவரைப் பற்றி, ஏதும் நிச்சயமாக, உண்மை ஸ்வரூபத்தில் தெரிந்து கொள்வதில்லை. முடிவதில்லை. நம் பரிமாறல்கள் எல்லாம் குறியீடுகள். வெறும் குறியீடுகள். நாம் கூட, நம்மைப்பற்றி நாம் நினைத்துக் கொண்டிருக்கும் நாம் கூட, வேறு ஒரு உண்மை நாமின் குறியீடுகள். நம் பரஸ்பர அறிவு வெறும் அநுமானங்கள் தாம்.—approximations that are pragmatic.

இவ்வளவும் நான் சொல்வதற்குக் காரணம், வார்த்தைகள் என்பன அர்த்தங்கள்

அல்ல, அவை அனுமானத்திற்கு உதவும் குறியீடுகள் தாம் என்பதை வலியுறுத்தத் தான்.

இதற்கு அடுத்தபடி, (step) கேள்விக்குறியிட்டு நம் முன் நிற்கிறது. இன்னதைச் சொல்ல இன்ன குறியீடு என்பது செயல்முறை சௌகர்யங்களுக்காக, பழக்க தோஷத்தினுல் நாம் சட்டமாக ஏற்றுக்கொண்டிருப்பதுதான். நாம் பழக்கப்படுத்தப் பட்டிருக்கிருேமே தவிர, நாம் சிந்தனையற்று ஏற்றுக்கொண்டிருக்கிருேமே தவிர, ஏதும் ஒரு சிந்தனை யோட்டத்திற்கோ, அநுபவத்திற்கோ இந்தக் குறியீடுதான் என்று ஏதும் வரையரை, சட்டம் கிடையாது. அநுபவங்களின், சிந்தனையின், பொருட்களின் உள்ளிருந்து பிறந்தன அல்ல, அவற்றைக்குறிக்க நாம் அவற்றுடன் துணைப்படுத்தும் குறியீடுகள். சிந்தனை அல்லது அநுபவம் இவற்றின் இயல்பிலோ, அல்லது குறியீட்டின் இயல்பிலோ உள்ளார்ந்த இன்றியமையாமையினுல் பிறந்தனவல்ல இவ்வரையறைகளும் சட்டங்களும். பழக்கம்தான் காரணம்; பழக்கம்தான், சட்டமாக, வரையறையாக மாறியிருக்கிறது. நாமெல்லோரும் பழக்கத்திற் கடிமைகளாதலால், நாளடைவில் இப்பழக்கங்களே நாமாக மாறிவிட்டதால், இச்சட்டங்களின் இறுக்கத்தைத் தகர்க்க, புதுமுறைக் குறியீடுகள் காண மேதை தேவைப்படுகிறது. அடுத்து, அப் புதுமுறைக் குறியீடுகளை உணர்ந்து அங்கீகரிக்கவும், மேதையும், அறிவு சார்ந்த வீரமும் தேவைப்படுகின்றன.

(தொடரும்)

---

*தீயகாற்று வீட்டை விட்டு வெளியே போகவேண்டுமானுல் நல்ல காற்று வீட்டுக்குள் நுழைதல் வேண்டும். அதுபோல தீய எண்ணங்கள் நம் உள்ளத்தை விட்டு அகலவேண்டுமானுல் தூய கருத்துக்கள் உள்ளே புகுதல் வேண்டும்.*

—காந்திஜி

# ஜெயகாந்தன் நூல்கள்

## நாவல்

| | | |
|---|---|---|
| பாரீஸுக்குப் போ | 6 | 25 |
| ரிஷிமூலம் | 3 | 25 |
| உன்னைப்போல் ஒருவன் | 3 | 50 |
| கோகிலா என்ன செய்துவிட்டாள் ? | 3 | 25 |
| வாழ்க்கை அழைக்கிறது | 3 | 00 |
| பிரளயம் | 2 | 75 |
| யாருக்காக அழுதான்? | 2 | 00 |
| பிரம்மோபதேசம் | 1 | 75 |
| கைவிலங்கு | 1 | 75 |
| கருணையினால் அல்ல | 1 | 50 |

## சிறுகதைத் தொகுதி

| | | |
|---|---|---|
| யுகசந்தி | 5 | 00 |
| இறந்த காலங்கள் | 3 | 50 |
| உண்மை சுடும் | 3 | 00 |
| தேவன் வருவாரா | 3 | 00 |
| சுய தரிசனம் | 2 | 75 |
| புதிய வார்ப்புகள் | 2 | 75 |
| சுமைதாங்கி | 2 | 50 |
| மாலை மயக்கம் | 2 | 50 |
| இனிப்பும் கரிப்பும் | 2 | 50 |
| ஒரு பிடி சோறு | 2 | 50 |

மீனாட்சி புத்தக நிலையம்

60, மேலக்கோபுர வாசல், மதுரை-1

# ஆக்கம்

இலக்கியம் சம்பந்தப்பட்டவர்களில் புதிதாகப் படைப்புக்களை ஆக்கித் தருவோர்களே இலக்கிய மூலவர்கள். மற்றவர்கள் அனைவரும் இலக்கியத் துணைவர்களே. இது படைப்பாளிகளுக்கு 'ஞானரதம்' அளிக்கும் தனிமரியாதை. வாசகன் முதல் விமர்சகன் வரையுள்ள இலக்கியத் துணைவர்கள் எவரும் ஞானரதத்தில் ஏறும்போது படைப்பாளிகளுக்கு அளிக்க வேண்டிய இந்த முதல் மரியாதையைச் செய்யப் பழகிக்கொண்டுதான் ஏறவேண்டியிருக்கும். இந்த இதழில் தமிழுக்கு ஆக்கம் தந்துள்ள அறுவர் ஜி. நாகராஜன், எஸ். வைதீஸ்வரன், சார்வாகன், ந. முத்துசாமி, ஞானக்கூத்தன், வே. மாலி ஆகியோர்— ஞானரதத்தின் 'ஆக்கம்' வரிசையைத் துவக்கி வைத்திருக்கிறார்கள்.

—ஆசிரியர் குழு

# இழைந்த சாதி

மைலு ஒரு ரோசனைக் காரன்; ஆனா ரொம்பப்பேர் இதை ஏத்துக்கிடமாட்டாங்க. 'மைலுவா? அவன் ஒரு எத்து வாளி' 'மைலுவா ? அவன் ஒரு ஆபீஸ் பியூன்' எம்பாங்க. எந்த ரோசனைக் காரன் எத்துவாளியில்லே ? இதைக் கேட்டிட்டா எல்லா ருக்கும் கோவம். "கம்முக் கட்ல எதுக்கு மசிரு" னும் மைலு கேப்பான்; "மனுசங் களுக்கு சாவத் தவிர எது உருதீ"ன்னும் கேப்பான். யாரும் பதில் சொல்ல மாட் டாங்க, ஆனாலும் அவன் தப் பாக் கேட்டிட்ட மாருதி மொகத்தை வச்சுக்குவாங்க. மைலுக்கு பொம்பளேனா ஒரே குசி. ரொம்பத் தெளிவாப் பேசுவான். "மொகத்தைப் பாத்துப் போரேும், மொகந் தான் எப்படி அளகா இருக்கு. அந்தச் சிரிப்பெல்லாம் என்ன செய்யறது? அள்ளிக் குடிக்க முடியலேயே! கடிச்சித்தின்ன முடியலேயே! அந்தப் பார் வயெ என்ன செய்யறது? காலடிலே வுளுந்து அளலாம் போல இருக்கு. ஆனா ரவிக் கையை எடுத்த பெறவு பாடீ சைப் பாத்தா எத்தனெ ஏமாத் தமா இருக்கு? இப்படி அளுக்கா இருக்கணுமா ? கையும், ஒடம்பும் ஒண்ணு சேர வேணுமா? சின்னச் சின்ன பர்சு போல ரெண்டும் தொங்கனுமா? ஆனா இதெல் லாம் பத்திப் பேசக்கூடாது. மொகத்தைப் பாத்துக்கிட்டே உதட்ல முத்தமிடனும். கண் நெறைய மையிருக்கு. போதா துக்கு நெறைய பவுடர் வாசனெ இருக்கு. ஆமாம், ஆமாம். இந்த மல்லிகையும், பவுடரும் இந்த ரெண்டுந் தானே காதலயே வளக் குது!"

"ஆனா, அப்படி ஒண்ணும் எப்போதும் இல்லே"னிட்டும் மைலு சொன்னான். "பேச்சி, பவுடரும் போட்டதில்லே; மல்லிகையும் வச்சதில்லே. வாட்ட சாட்டமா கையும் காலும், தலெயத் தவர ஒடம் புலே ஒரு ரோமம் இல்லே. ரெண்டு பெரிய டர்னிப்புக. டர்னிப்பு தெரியுமிலே, டர் னிப்பு. கொய்யாப் பளம் வித்துக்கிட்டு வருவா. கொய்யா வெளியே பச்சையா இருந்தா, உள்ளே செவப்பா இருக்கும்; வெளியே மஞ்சளா

இருந்தா, உள்ளே வெள்ளையா இருக்கும். ஆனா, எல்லாமே இனிச்சுக் கெடக்கும். ரெர்ம்ப ராங்கித்தனம் பண்ணுவா. பணம் அவளுக்குப் பெரிசில்லே. எல்லாம் முடிஞ்சதும் முதுகிலே ஒரு அடி, மொகத்துலே ஒரு அடின்னு போட்டுட்டுப் போவா!'' பேச்சிக்கும் மைலுக்கும் ரொம்பக் கனெக்சன்.

மைலு கெட்டசாதிப் பயல். ஒரு நா ஆபீசர் சேட்டை பண்ணினாரு. அவர் ஒரு வாட்டி தோட்டிச்சிய கண்ணடிச்சதெ நெனப்புல வச்சிக்கிட்டு, தோட்டிச்சி புருசனெக் கூட்டியாந்து ஆபீஸ் முன்னால கலாட்டா பண்ண வச்சான். ''எம் பொண்டாட்டிய நீ வச்சுக்க; உம் பொண்டாட்டிய நா வச்சுக்கட்டுமா?'' னு தோட்டி 'கலக்க முட்டி' போட்டுட்டு கூச்சப் போட்டான். ஆபீசர் மைலுவெக் கூப்ட்டு தோட்டியெ வெரட்டச் சொன்னாரு. தோட்டி சொல்றது நாயந்தசன்ட்டான் மைலு. மைலு அபினி திம்பான்; மணிக்கணக்கா கும்னு இருப்பான்.

**ஜி. நாகராஜன்**

மாத்துக்கு ஒரு வாட்டி மைலு ஒரு பிக்பாக்கெட். என்னவோ மாருதி இருப்பான். யார்கிட்டேயும் பேசமாட்டான். டேசன் எங்கிருக்கு, பஸ் ஸ்டாண்டு எங்கிருக்கு, எங்கே பாம்பு வித்தே காட்ருங்னு அலவான். அவன் யார் பக்கல்லே நின்னாலும், அவருக்கு ரெண்டு நிமிசம் ஒண்ணும் வெளங்காது. அவர் பாக்கட்லேஇருக்கறது அவன் கைக்கு வந்துடும். அது அம்பதாகவும் இருக்கும்; அஞ்சாவும் இருக்கும். சமயத்துலே வெறும் சிகரெட்டுப் பாக்கட்டும், பஸ் டிக்கட்டும் தான் மிஞ்சும்.

என்னாலும் மைலு ஒரு ரோசனெக்காரந்தான்.

ஒருத்தன் ஊரெக் கொள்ளெயடிச்சிட்டிருந்தான். ஒங்களுக்கும் தெரியும். இப்பத்தான் நடந்திச்சு. சைடிலே பாத்தா முடில்லாம் காலண்டர்ல இருக்கற யேசுநாதர் மாருதி இருக்கும். கண்ணு, மூக்குக் கெடயாது. கண்ணுக்குப் பதிலா சீவின நொங்குக் கண்ணு மாருதி தெரியும். ஆனா ரெண்டுதான்; மூணு இல்லே. அதெப்பாத்தா ஏதோ பளிங்குச் செலெ கண்ணு மாருதி—சம்முகா தியேட்டர்ல வச்சிருக்காங்

களே—அது மாருதி தெரியும், மூக்குக் கெடயாது. வாய்னு ஒண்ணுமில்லே. அதுக்குப் பதிலா ஒரு ஓட்டை. ஒரு பென்சக்குச்சி நொளையற மாருதி ஒரு ஓட்டை. அவன் நடந்து போவான். அவங்கூட ஒரு பொண்ணு போவா. நல்லாதான் டிரஸ் பண்ணி யிருப்பா. அவன் கைலே ஒரு தட்டு. அவ கைலே ஒரு வெளக்கு. அவன் தட்டிலே யும் ஒரு மெளுகு வத்தி வெளக்கு. மணிச் சத்தம் கேக் கும். ரவெ ஆறு ஆறரை மணி லேந்துதான் ஊரெச் சுத்து வாங்க, பத்து மணி வரெக்கும் தட்ல எக்கச் சக்கமா சில் லரை சேர்ந்திடும்.

அன்னெக்கு மைலு அவ னைப் பார்த்தான். எல்லாரும் ஏகமா காசெ வீசியெறிஞ் சிட்டு ஓடினுங்க. மைலு நின்னு நிதானமாப் பார்த் தான். கண்ணில்லே, மூக் கில்லே, வாயில்லே. அதுக் குப் பதிலா மொகத்துலே ஒரே ஒரு ஓட்டை. அரை நிமி சம் ஆகலே, மைலு தலெ வெடிச்சிட்டது மாருதி ஓடி ஞன்.

'செயா மெடிக்க'வில் ஒண் ணுங் கெடக்கலே.

'லச்சுமிலே' அஞ்சு அவுன்சு அடிச்சான். கரண் டுப் போதலே. சைக்கிள் ரிக் சாவுலே கிருஸ்ணுபொரம் காலனி தென்னந் தோப்புக்கு ஓடிஞன். ரெண்டு கிளாசு குடிச்சான். கிருஸ்ணுபொரத் துலே தான் குண்டு ராவுத்தர் கடெ இருக்கு, பரோட்டாவும் கறியும் தின்ஞன். என்ஞலும் தலை சுத்திச்சு. கண்ணில் லாம, மூக்கில்லாம, வாயில் லாம, மொகத்துல ஒரு ஓட் டையோட, ஒருத்தன் அவன் முன்ஞலே வந்து வந்து நின் ஞன். கண்ணுக்குப் பதிலா சீவின நொங்கு மாருதி ஏதோ தெஞ்சிச்சு. ஆஞ ரெண்டு தான்; மூணு இல்லே.

மைலு பைத்தியம் பிடிச்ச மாருதி ஓடருன்.

அகலி பொரத்துலே சரளா இருந்திச்சு; ஆஞ கூடவே புருசன்காரனும் இருந்தான்.

கலெநிவாசிலே பத்மினி இருந்திச்சு; ஆஞ கூடவே வாத்தியாரும் இருந்தாரு.

செய்கிந்து புரத்திலே சரஸ் வதி இருந்திச்சு; மைலு வர வும் அவளுக்கு ஒரே குசி.

"ஒன்னே எனக்குத் தெரி யாதே"ன்ஞன்.

"பரவாலே; எனக்கு ஒங்க ளெத் தெரியும்."

"உள்ளே வாங்க."

"அப்படியா, நான் என்ன சாதி?"

"ஆண் சாதி."

"இல்லெ."

"பின்னே என்ன சாதி? உள்ளே வாங்க."

"இளிந்த சாதி."

"பரவாலே, நானும் இளிந்த சாதி தான். உள்ளே வாங்க."

"நீ என்ன சாதி?"

"மனிதச் சாதி. சீக்கிரம் வாங்க"

"இளிந்த சாதி தானே?"

"ஆமா, ரொம்ப இளிந்த சாதி. பேச்சுப் போதும்; வாங்க."

"நா சாக வந்திருக்கேன்"

"பரவாலே, நேரமாகுது. உள்ளே வாங்க."

"நான் சாகவந்திருக்கேன் னேன்."

"அய்யோ, இங்க வர வங்க எல்லாமே நாலுமொளக் கயித்தோட தான் வராங்க. உள்ளற வாங்களேன்."

"நா ஒங்கூட ரொம்பநேரம் தனியா இருக்கணும். ஒங் கண்ணையும், மூக்கையும் பாத் துப் பாத்து தான் சந்தோசப் படணும். யாரும் வருவாங் களா?"

"யாரும் வரமாட்டாங்க. நீங்க இருக்கற மட்டும் யாருமே வரமாட்டாங்க."

"அப்படியா?"

ரெண்டு பேரும் சேந்து இருந்தாங்க.

"நல்லா இருக்கு; சொகமா இருக்கு"ன்னுன்.

"இப்படியே இருந்திக்கிட்டு இருப்போமா"ன்னு அவ.

ஆனு, கண்ணில்லாம, மூக் கில்லாம, மொகத்துல ஒரு ஓட்டையோட ஒருத்தன் அவன் முன்னுலே வந்து வந்து நின்னுன்.

"நான் இளிந்த சாதி. இளிந்த சாதி"ன்ட்டுக் கத்தி னுன் மைலு. அவள் அவ னெப் பிடிச்சு இளுத்தா. அவன் மீறிக்கிட்டு ஓடினுன்.

ஆகாசத்துலே ஒரே நச்சத் திரமா இருந்திச்சு, அவன் ஓடு ஓடுன்டு ஓடினுன். ரெண்டு பக்கமும், முன்னுக்கும் பின் னுக்கும், எங்க பாத்தாலும் இருட்டு. இருட்டுலே திமு திமுன்ட்டு மைலு ஓடினுன் ஒங்களுக்குத் தெரியாது; செய்கிந்துபொரத்துலே எப்ப வுமே ரொம்ப இருட்டு.

———

அவளுடைய எழிலை என்னுல் வார்த்தைகளினுல் விவரிக்க முடியாது. ஒரு வயலின் இருந்தால் அதனில் அவள் அழகை என்னுல் வாசித்துக் காட்டமுடியும்.

—மாக்ஸிம் கார்க்கி.

# 'மை-லாய்' வீதி

இன்று
தெருவில் நடக்காதே,
திரு. மனிதா !
இருபதாம் நூற்றாண்டு.
தெரியுமா உனக்கு?
திரும்பி வா உள்ளே !
வீட்டின் இருட்டு மூலையில்
குருட்டுப் பறவையாய் பதுங்கு.
இருதயத்தைப் பிடித்துக் கொள்
இருபதாம் நூற்றாண்டு.

வெடிபட்டு சாகாமல்
வெகுளியாய்
விஷக்காற்றைக் குடித்துப் பின்
நலிவுற்ற முடமாய்த் துடிக்காமல்
முழு உடம்பாய்,
இயற்கையாய் சாவது
அரிது, அரிது......
இன்று மிக அரிது !
இருபதாம் நூற்றாண்டு.
திரும்பி வா உள்ளே !

வெளியில் பலகிளிகள்
மிதிபட்டுக் கிடக்குதங்கே !
குப்பைத் தொட்டியில்
குழந்தைத் தலைகளும்...
மலத்தோடு பிணங்கள்
கலந்து நாறும் கோரங்கள்.

பச்சை வயல்களெங்கும்
செங்குருதி பாயக் கண்டேன்,
நம்பிக்கையோடு
அறுவடைக்குப் போனமக்கள்
அறுபட்டு, உயிரற்று
ஊதிப்போய்,
வயற்காட்டுப் பொம்மைகளாய்
வழியெங்கும் நிற்கக் கண்டேன்.

உலகப் பருந்துகள்
பறந்தோடிக் கூடிவந்து,
நிலமெங்கும் சதை!
சதை யென்று
இறகடித்துக் கொத்தும்
விருந்து கண்டேன்.

மண்ணில் சதை பரப்பி
தெருவெங்கும் ரத்தம் பூசி
பிணமாலை சாற்றிப்
பேய்களுக்கு வரவேற்பு.
வெற்றி, வீரம், என்று
வெறும் சத்தம்... 'போர்'

வேண்டாம் நில்!
நானும் நீயும்
நாதியற்றுப் போக வேண்டாம்!
தற்கொலைக் கனவு வேண்டாம்.
கற்கால இருட்டுக்குள்
கண் புதைத்து
இருதயத்தைப் பிடித்துக் கொள்.
உலகத்தை வெறுத்து
உயிர் வாழப் பழகிக் கொள்.
இருபதாம் நூற்றாண்டு.

நாகரிக எல்லையிலே
நரகங்கள் தெருக்களில் தான்
வானிலில்லை.
குன்றுகள் எறிந்து
கூரைகள் எரித்து
பெண்டுபிள்ளை வயோதிகரைக்
கொன்று குதிப்பது
அன்றாடப் பொழுதுபோக்கு
அமெரிக்க மை-லாய்
விளையாட்டு.

அங்கு
இறவாத குழந்தைகள்
இறந்துவிட்ட அன்னைகளை
முலைகேட்டுக் கதறும்
(இது சகஜம்)

சாகாத பிணங்கள்
செத்துவிட்ட பிணங்கண்டு
பொறுமையால் துடித்து முனகும்,

மிருகங்கள் வளர்ப்பதற்கே
மனிதர்கள் மடிகிறார்கள்,

அங்கு,
டாங்கிகள் இழுத்து
பீரங்கி வெடிப்பதும்,
எலும்புகள் உராய்விலே
மெல்லிசை ரஸிப்பதும்
வாடிக்கை நிகழ்ச்சிகள்.

ஐயோ ! நீ திரும்பு.
கண்களை அழுத்தி மூடி
உயிரை இறுக்கி
உடம்பில் பூட்டு.
நிறமற்ற இருளில்
பயமற்ற மூலையில்
பதுங்கிக் கொள்.

உயிர் காக்கும் நிச்சயம்
உலகத்தில் குறைகிறது

வானுக்குத் தாவி
பகுத்தறிவற்ற உயிர்க் கூட்டம்
வாழுகின்ற கிரகங்கள்
ஏதேனும் உண்டானால்
உடனே தேடு.

திரு. மனிதா !
தெருவில் சாவோலம்
மிக நெருங்கி ஒலிக்கிறது.

ஓடு......
இருட்டுக்கு, காட்டுக்கு,
மூலைக்கு, வானுக்கு
எங்காகிலும் ஓடு
உலகத்தை விட்டு !

---

எஸ். வைதீஸ்வரன்

குறிப்பு :—அமெரிக்கர்கள் வியட்நாம் மைலாய் கிராமத்தில் புரிந்த அட்டூழியங்களைக் கேட்கும்போது, மனிதனுடைய அரக்கத்தனம், உலக முழுவதையும் அழித்துச் சாம்பலாக்கும் வரை ஒழியாது என்று பயப்படுகிறேன். அந்த பயத்திலிருந்து பிறந்தது நீங்கள் படித்த கவிதை.

---

# சூழ்நிலை

முதல் நாள் சனிக் கிழமை இவன் அலுவலகம் செல்லவில்லை. தான் போகாத அன்று ஆபீஸில் என்ன விசேஷம் என்று கேட்டு வர சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினான். அலுவலகம் போவதைத் தவிர மற்ற இடங்களுக்கு இவன் சைக்கிளில் போவது கிடையாது. ஆபீஸ் போக சைக்கிள், மற்ற இடங்களுக்கு பஸ் என்று ஒரு பழக்கம் இவனுக்கு ஏற்பட்டிருந்தது. சைக்கிளில் ஏறியவுடன் யார் வீட்டுக்குப் போவது என்று யோசனை தோன்றிற்று. யோசனையோடேயே சைக்கிளில் ஏறிக் கிளம்பிவிட்டான். சைக்கிள் ஆபீஸ் போகும் பாதையிலேயே சென்றது. அதுவும் நல்லதுதான். ஆபீஸ் போகும் வழியில் உள்ள வைத்தியநாதன் வீட்டுக்குப் போய் வந்து விடலாம் என்று சைக்கிளை மிதித்தான்.

வழியில் சைக்கிள் ஒரு குப்பத்திற்குள் நுழைந்தது. குப்பத்தின் அந்தச் சந்தைத் திரும்பினால் சந்துத் திருப்பத்தில் தெருவில் வலப்புறத்தில் முதல் வீடு வைத்தியநாதனுடையது. சந்து மூத்திரச்சந்து. சந்து முனையின் இருபுறச் சுவர்களும் தெருவில் உள்ள வீடுகளின் சுவர்கள். இந்தச் சுவர்களின் முடிவில் இருந்தே சந்தில் வீடுகள் ஆரம்பமாகின்றன. சுவர்களில் உள்ள ஜன்னல்கள் எப்பொழுதும் மூடப்பட்டுக் கிடக்கும். சுவரோரத்தில் மலக்கழிவு. பெரியவர்கள் இரவிலும் சிறுவர்கள் பகலின் எந்த நேரத்திலும் மலம் கழிக்குமிடம் அது. ஜன்னல்கள் சாத்தப்பட்டதால் அந்த இடம் அப்படியாயிற்று; அந்த இடம் அப்படி ஆனதால் ஜன்னல்களைச் சாத்தினார்களா என்பது தெரியவில்லை.

தெரு நடுத்தர வகுப்பினர் வாழுமிடம். அலுவலகம் செல்பவர்களின் ஒண்டிக் குடித்தனங்கள் நிறைந்த தெரு அது. சில வீடுகளின் முன்புறங்களில் வீட்டோடு திட்டமிடப்படாது பின்னால் தேவைப்பட்டுத் தடுத்து விட்ட பெட்டிக் கடைகள் இருக்கும்.

சந்து ஏழைகளின் குடியிருப்பு. ஓலைக் குடிசைகளுக்கு இடையில் சில ஓட்டு வீடுகளும் ஒன்றிரண்டு மொட்டை மாடி வீடுகளும் அங்கு உண்டு. மொட்டை மாடிகளில் வீட்டுக்காரன் குடி

யிருக்க ஓலைக் கூரைக் கொட்டகைகள் இருக்கும். அவைகளைத் தரையில் இருப்பதற்குப் பதிலாக மாடியில் இருக்கும் குடிசைகள் என்று சொல்ல வேண்டும். தெருவின் வாடகைக்குப் பயந்து ஒதுங்கிய சில நடுத்தர வகுப்பு அலுவலகம் செல்வோர் சந்தின் மொட்டை மாடி வீடுகளில் குடிபுகுந்து வீட்டுக்காரர்களை மொட்டை மாடிக் குடிசைகளுக்கு ஒதுக்கி இருந்தார்கள். ஆக, ஏழைக் குடியிருப்பு என்ற இலக்கணம் கெடாமல் காப்பாற்றப்பட்டிருந்தது.

குப்பத்துக்காரர்கள் தினக் கூலியில் அன்றாடம் சாமான்கள் வாங்குபவர்கள் ஆதலால், அவர்கள் தேவையை நிறைவேற்றும் கடைகள் எல்லாம் தெருவிலேயே இருந்தன. அவர்கள் குழந்தைகளின் தேவையை நிறைவேற்றும் நடைபாதை அங்காடிகளும் தெருவிலேயே. அவைகளில், வேக வைத்து பித்த வெடிப்புப் போலப் பிளந்த மரவல்லிக் கிழங்குகள், வெல்லத்தில் செய்த கமர்கட்டு முதலிய மிட்டாய்கள், மற்றும் வேர்க்கடலை உருண்டைகள், முந்திரிப் பருப்புகள் உடல் முழுதும் பதித்த ரவாலாடு போன்ற வெள்ளை உருண்டைகள் முதலியவை விற்பனையாகும். முந்திரிகள் அலங்காரமாக இருப்பதுபோல அலங்காரமாக உட்கார்ந்து அடிக்கடி இடம் மாறி இடம் மாறி அமர்ந்து புதுப் புதுத் தோற்றங்களைக் கலைத்துக் கலைத்து உண்டாக்கிக் கொண்டிருக்கும் ஈக்கள். இந்த நடைபாதைக்கடைகளில் ஈக்களைப் போல குப்பத்துக் குழந்தைகள் மொய்த்துக் கொண்டிருப்பார்கள் என்று கொஞ்சம் மிகைப்படுத்திய உவமையாகச் சொல்லலாம். இவ்வகையில் அச்சந்து அதிக நடமாட்டமுள்ளதாகையால் என்னேரமும் மூத்திரத்தால் நனைந்திருக்கும்.

வைத்தியநாதன் வீட்டிற்கு வருவதற்கு குப்பத்துச் சந்து குறுக்கு வழி. சந்து வழியாக சைக்கிளில் வந்து வீட்டு வாசலில் சைக்கிளை நிறுத்தினான் அவன். தெருவைச் செப்பனிட வீட்டு வாசலில் கருங்கல் சல்லி கொட்டிவைக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் விளையாடி சல்லி முட்டுக் கலைந்திருந்தது. முட்டுக்கு அப்பால் சைக்கிளை நிறுத்தினால் தெருவின் போக்குவரத்திற்கு இடைஞ்சலாய் இருக்கும் என்று, சல்லி இறைந்தி

ந. முத்துசாமி

ருக்கும் நடைபாதையையும் நடப்பதற்கு ஒதுக்கிவிட்டு நடைபாதை இறக்கத்தில்—அதுவும் சல்லியால் நிரம்பியிருந்தது-சல்லியின் மேலேயே சைக்கிளை நிறுத்தினன். சைக்கிள் ஆடி விழுந்துவிடக் கூடாது என்று ஆட்டி ஆட்டி சல்லியில் முன் சக்கரமும் ஸ்டாண்டும் கொஞ்சம் புதைந்து இருக்கும்படியாகவே நிறுத்தினன். காற்றடித்தால், நடைபாதையில் போவோர் அசைப்பில் தவறி இடித்துவிட்டால், சைக்கிள் விழுந்துவிடாமல் இருக்குமா என்றும் ஆட்டிப் பார்த்துக்கொண்டு வீட்டுப் படிகளில் ஏறினன்.

நகரின் புதிய கட்டிடக்கலை தெருவை இன்னும் பாதிக்கவில்லை. நகரப் பாதிப்பு வீட்டு வாயிலில் பெட்டிக் கடைக்குத் தடுத்துக் கொடுக்கும் அளவே இருந்தது. ஆனல், அதுவும் வைத்தியநாதன் வீட்டைப் பாதிக்கவில்லை. வீட்டுக்கு வாசலில் கம்பி அடைப்பு. உள்ளே திண்ணைகள். திண்ணைகளை அவன் கடைகளாகத் தடுத்து விட்டிருக்கலாம். அவன் தந்தையே கூட அதைச் செய்திருக்கலாம். அவரும் செய்யவில்லை. அவன் தந்தையைப் பின்பற்றுபவன் போலும்; வீட்டு வாசலில் கடைக் கூட்டத்தைத் தவிர்க்க நினைத்திருக்க வேண்டும். அல்லது பிறர் இவர்களுக்கு முந்திக்கொண்டு கடை கட்டிவிட்டிருக்க வேண்டும். இனி கடை கட்டினல் விற்பனை இருக்காது என எண்ணி இருக்கலாம். அதனல் யாரும் வாடகைக்கு எடுக்க முன்வர மாட்டார்கள். முன் வந்தாலும் விற்பனை இன்றி குடி பெயர்ந்து கொண்டேயிருப்பார்கள். இது ஒரு காரணமாகி வாடகையில் சலுகை கேட்பார்கள். மேலும் கடையும் காரணங்களில் ஒன்ருகி உள்ளே குடி வருகிறவர்களும் குடிக்கூலியில் சலுகை எதிர்பார்ப்பார்கள். பக்கத்தில் மூத்திரச் சந்து மற்ருெரு காரணம். ஆக, அடுத்த நல்ல வீடு கிடைக்கிற வரையில் இது இடையில் ஒரு தங்குமிடமாகிவிடும், என்றெல்லாம் எண்ணியிருக்க வேண்டும். மூத்திரச் சந்து என்ற தடையோடு மட்டும் இருக்கட்டுமென்று வாசலில் கடை கட்டிவிடாமல் அப்பனும் மகனும் இருந்து விட்டார்கள் போலிருக்கிறது.

வாசல் கதவு சாத்தி இருந்தது. தெரு ஜன சந்தடியிலிருந்து விலகியிருக்கத்தான் வாசற் கதவுகளைச் சாத்தி வைத்திருக்கிருர்கள் என்று நினைத்துக்கொண்டே வாசல் கதவுகளைத் தட்டினன். ஒரு சிறுவன் கதவைத் திறந்தான்.

குடித்தனக்காரப் பையனு வைத்தியநாதன் பையனு என்பது இவனுக்குத் தெரியாது. அப்பா இருக்காரா? வைத்திய நாதன் இருக்கானு? என்று இதில் எதைச் சிறுவனிடம் கேட்பது என்று சற்று யோசித்தான். எப்படி இருந்தாலும் வைத்தியநாதன் இருக்கானு என்றே கேட்கலாம் என்று முடிவு கட்டிக் கொள்வதற்குள் சிறுவன் உள்ளே ஓடி விட்டான். தட்டப்படும் கதவைத் திறப்பது சிறுவனின் வேலை போலிருக்கிறது. முன் கட்டில் குடியிருப்பவனுகை இருக்கலாம். தன் கடமையைச் செய்துவிட்டுப் பையன் ஓடி இருக்கிருன். பெற்ருேருக்கு அடங்கிய பையன் என்று யோசித்துக்கொண்டே ''வைத்தியநாதன், வைத்திய நாதன்'' என்று வாயிற்படியில் ஒரு காலை எடுத்து வைத்துக்கொண்டு, சாத்தி இருக்கும் ஒற்றைக் கதவில் கையை ஊன்றிக் கொண்டு தலையை மட்டும் உள்ளே நீட்டிக் குரல் கொடுத்தான். கூப்பிட்டு முடித்தவுடன் தலையை வெளியில் இழுத்துக் கொண்டான். இன்னும் அவன் வராததைக் கண்டு மீண்டும் தலையை உள்ளே நீட்டிக் குரல் கொடுத்தான். தலையை உள்ளே நீட்டி வெளியில் இழுத்து என்று கூப்பிட்டுக் கொண்டிருந்தது அவனுக்கே வேடிக்கையாக இருந்தது. வாயிற்படியில் இருந்த காலையும் கதவில் இருந்த கையையும் எடுத்துக்கொண்டு நேராக நின்று மீண்டும் கூப்பிட்டான். ''உள்ளே போங்கோ'' என்று ஒரு ஆண் குரல்மட்டும் கேட்டது. ஆளைக் காணவில்லை. குடித்தனக்காரர் போலிருக்கிறது. பையனின் அப்பாவாக இருக்கலாம். 'உள்ளே போங்கோ' என்று சில குரல்களுக்குப் பிறகு பதில் சொல்வது இவர் கடமை போலிருக்கிறது என்று நினைத்தான். கடமையாக உணரும் அளவு அங்கு தங்கியிருக்கும் நீண்ட காலக் குடித்தனக்காரராக இருக்கலாம். அவர் சொல்வதுபோலச் செய்யக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டான். சிரிப்பு வந்தது. ''அவர் என்ன அதிகாரி. அவர் பேச்சுக்குப் பணிவதில்லை என்பது என்ன விடுதலை வேட்கை, உள்ளே போகலாம்'' என்றும் பிறகு நினைத்தான். உள்ளே எத்தனை ஒண்டுக் குடிகளோ? அதில் எது வைத்தியநாதன் பகுதி என்று முடிவு கட்டிப் போவது? உள்ளே போகவில்லை. வெளியிலேயே நிமிர்ந்து நின்று 'வைத்தியநாதன்' என்று நாதனை இழுத்துச்சொன்னுன். 'உள்ளே போங்கோ' என்று குரல் கொஞ்சம் கோபமாக வந்தது. இவன் பதில் பேச

வில்லை. இவனுக்கு, குரல் கொடுத்தவர் மேல் கோபம் வந்தது. வைத்தியநாதன் வீடு வைத்துக் கொண்டு என்ன பயன்? அவனும் ஒரு ஒண்டுக் குடிக் காரனுகத் தானே வாழ்கிருன். வாடகை கொடுப்பவன் வாடகை வாங்குபவன் என்ற வித்தியாசத்தைத் தவிர வேறு என்ன வித்யாசம் இருவருக்குள். சொந்தக்காரன் என்ற அதிகாரம் ஒன்று அவனுக்குக் கூடுதலாக இருக்கலாம். அப்படியென்ருல் வாடகை கொடுக்கிறவன் என்ற அதிகாரம் குடியிருப்பவனுக்கு இருக்கிறது. மொத்தத்தில் வைத்தியநாதனுக்கு மூத்திரச் சந்தின் ஞாபகத்தால் இந்த அதிகாரம் பலவீனப்பட்டும் ஒண்டுக் குடிக்காரனுக்குப் பலப்பட்டும் மிஞ்சும். மேலும், 'உள்ளே போங்கோ' என்று கடமை உணரும் அளவு நீண்டு தங்கியவனுக்கு இன்னும் பலப் பட்டிருக்கும். என்ன வீட்டுச் சொந்தக்காரன் வேண்டிக் கிடக்கிறது? தன் குரல் வைத்தியநாதன் காதில் விழும் அளவுக்கு வேகமாக இல்லை போலிருக்கிறது என்று இம்முறை வேகமாகக் கூப்பிட்டான். குரல் 'உள்ளே போங்கோ' என்று சொல்லும் என்று எதிர்பார்த்தான். சொல்லவில்லை. அலுப்பு வந்துவிட்டது போலிருக்கிறது. அதோடு தன் கடமை முடிந்துவிட்டது என்று நினைத்து விட்டிருக்கலாம். அவர் கடமைக்குப் பலனின்றித் தான் தாண்டிப்போய்விட்டோம் என்று தோன்றிற்று. இதுவே குரலில் கோபப்பட்டவருக்கு ஏற்ற தண்டனை. இத்தனை நேரம் தன் குரல் வைத்தியநாதன் காதுக்குப் போய்ச் சேர்ந்திருக்கும். அவன் வரவில்லை. உள்ளே போகலாமே என்று நினைத்தான். தன்னுடைய சிறுவயதில் கிராமத்தில் தன் வீட்டின் இரண்டாம் கட்டிற்குப் போகும்போது முற்றத்தில் சாக்கடை ஓரத்தில் ஆடும் ஆனையடிக் கல்லில் கால் வைத்ததும் சாக்கடைத் தண்ணீர் பீச்சி அடிப்பதைப் போல இங்கும் ஒண்டுக் குடிகளைத் தாண்டும் போது ஏற்படும் என்று தோன்றிற்று. ஒண்டுக்குடி வீடுகளின் தோற்றம் அப்படித் தான் இருக்கும் என்று இவன் மனதில் அதற்கு ஒரு வடிவம் ஏற்பட்டிருந்தது. உள்ளே போவதில்லை என்று முடிவு கட்டிக் கொண்டான். சிறுவன் 'உள்ளே போங்கோ' என்ற முன் கட்டுக்காரரின் பையன் தான். வைத்தியநாதனின் பையனுக இருக்க முடியாது. அவன் பையனுக இருந்திருந்தால் இத்தனை நேரம் அப்பனை வரச்சொல்லி இருக்கமாட்டானு? வாசலில் சைக்கிள் அப்படியே இருக்

கிறதா என்று திரும்பிப் பார்த்துக்கொண்டான். இன்னொரு முறை அவனைக் கூப்பிட்டு பார்ப்பது என்று கூபிப்ட்ப் டான். இறைந்தே கூப்பிட் டான். ''வரேன்'' என்று பதில் வந்தது. இதற்கு முன்பு இறைந்து கூப்பிட்டதும் அவன் காதுக்கு எட்டி இருக்கும். இரண்டாம் முறை கூப்பிட்டது எட்டியதும் முதல் முறை கூப்பிட்டதை அவன் தன்னைத்தான் கூப்பிடுவதாக நிச்சயப்படுத்திக் கொண்டு பதில் கொடுத்திருக்கிருன். இது முதல் முறையாக இருந்தால் அடுத்த குரலில் இதை நிச்சயப்படுத்திக் கொண்டு தான் ''வரேன்'' என்று சொல்லியிருப்பான். அதாவது அவன் காதில் விழும் இரண்டாம் குரலுக்குத்தான் ''வரேன்'' என்ற அவன் பதில் வரும். நல்ல ஏற்பாடு தான். வந்து பார்க்கும் ஏமாற்றத்தைத் தடுப்பதற்கு இது நல்ல ஏற்பாடுதான்.

வைத்தியநாதன் வந்தான். ''வா .. வா .. உள்ளே வா' என்று சொல்லிக் கொண்டே வேட்டி முனையைக் கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு மார்பை முன்தள்ளி வந்தான். வேகமாக வர எண்ணியவனின் தோற்றம் அது என்று இவனுக்குத் தெரிய வருகிருன் என்று இவன் நினைத்துக் கொண்டான்.

''உள்ளே வாயேன்''

''இருக்கட்டும்'' என்ருன் இவன்.

''வெளியிலேயே நிக்கறயே. உள்ளே வாயேன்''

''இருக்கட்டும். இருக்கட்டும்'' தன் குரலே மூன்ரும் மனிதக் குரலாக இவனுக்குக் கேட்டது. தொனி மிக உயர்ந்த ரகம் என்று தோன்றிற்று. பெரிய மனுஷத் தோரணை தனக்கு வந்திருக்கிறது என்று தோன்றிற்று. ஆக, இனி உள்ளே போவதில்லை என்று முடிவு பண்ணிக் கொண்டு ''அதான் திண்ணை இருக்கே. இதுவே ரொம்ப வசதியா இருக்கு. உட்காரு'' என்ருன். அவனும் உட்கார்ந்து கொண்டான். சொன்னவுடனே இப்படி பள்ளிக்கூடப் பிள்ளை மாதிரி உட்கார்ந்து கொண்டு விட்டானே என்றும் நினைத்துக் கொண்டான். ''எத்தனை தரம் கூப்பிடறது. பொண்டாட்டிண்டே வெளையாடிண்டு இருந்தியா?'' என்று சிரித்தான். அவனும் சிரித்தான். பிறர் சிரிக்கும்படி தனக்கும் பேச வருகிறது. வெகு அபூர்வமாகவே அப்படி நேர்கிறது என்று தோன்றிற்று.

''நேரே உள்ளே வரக் கூடாதா? வாசல்லேயே நின்னுண்டு இருப்பானேன்'' என்ருன் அவன்.

என்ன பதில் சொல்வது என்று உடனே தெரியவில்லை இவனுக்கு. சைக்கிள் பார் வைக்கு எதிரே இருந்தது. அதையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான். அதைப் பார்ப்பதில் தான் சொன்னதை இவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை என்று அவன் நினைத்துக் கொள்ளட்டுமே. தான் போனபிறகு முன் குடித் தனக்காரரிடம் 'யாரோ உங் களே கூப்பிடறுர்னு கொஞ் சம் உள்ளே வந்து சொல்லக் கூடாதா?' என்று இவன் கோபித்துக் கொள்வானு? 'அதான் என் வேலையாங்கா ணும் ஓய்' என்று அவர் கிராம பாஷையில் கேட்டு விட்டால் என்ன செய்வது? முதலில் அவர் குரல்கொடுத்த தோரணையிலிருந்து, இவர் இப்படித்தான் 'ஓய்' போட் டுப் பேசக் கூடியவர் என்று அவரைப் பற்றி ஒரு தோற்றம் இவனுக்கு மனதில் ஏற்பட்டிருந்தது.

''நேரே உள்ளே வரக் கூடாதா? வாசல்லேயே நின் னுண்டு இருப்பானேன்?'' என்ருன் மீண்டும் அவன். உடனே அவனை அசடு என்று நினைக்கத் தோன்றிற்று இவ னுக்கு. தான் எண்ணிய படியே அவன் சொன்னதைத் தான் காதில் வாங்கிக் கொள் ளவில்லை என்று எண்ணிவிட் டான். இவ்வளவு பக்கத்தில் இருப்பவனுக்கு காது கேட்கா மலா போகும் என்பது தெரிய வேண்டாமா அவனுக்கு. அவனுக்குச் சொல்ல இப்பொ ழுது ஒரு பதில் இவனுக்குத் தோன்றிற்று.

'என்ன? என்ன சொல்றே' என்ருன். இதுவே நல்ல பதில்தான் என்று நினைத் தான். ஆனல், உண்மையில் சொல்ல நினைத்தது வேறு. அதைவிட நல்ல பதிலாகவே சொல்லி விட்டோம் என்று தோன்றிற்று.

''நேரே உள்ளே வரக் கூடாதா? வாசல்லேயே நின் னுண்டு இருப்பானேன்?''

அசட்டுப் பயல், சொன்ன தைச் சொன்னதை வார்த்தை பிசகாமல் திருப்பிச் சொல்வா னேன்? கொஞ்சம் மாற்றித் தான் சொல்வது என்று எண் ணினுன். ''இம்'' என்ருன்.

''நேரே உள்ளே வரது''

தன் மனதில் உள்ளதை உணர்ந்து மாற்றிச் சொல்லி விட்டான் போலிருந்தது. 'எப் படி வரது? இதுக்கு முன்னுடி ஒருதரமானும் வந்திருக்கலா மோணும். எத்தனை தடவை ஒன்ருேடே வாசல்லேயே நின்னுண்டு பேசி இருக்கேன். ஒரு தரமானும் உள்ளே வந்தி ருக்கலா மோணும். இப்போ மட்டும் உள்ளே வரதா என்ன?'' என்ருன்.

அவனுக்கு முகத்தில் அசடு வழிந்தது. வாசலில் நின்று பேசிய நாட்கள் ஒன்றிலேனும் தான் இவனை வீட்டுக்குள் கூப்பிடவில்லையோ என்னவோ என்று அவன் யோசிக்க ஆரம்பித்து விட்டான்.

'இப்போதான் வாயேன்' என்ருன்.

"பரவாயில்லே ... இங்கேயே இருக்கட்டும். திண்ணை வசதியா இருக்கு. அப்பா கட்டி வைச்சிருக்கார்" என்ருன் இவன்.

'அப்பா இல்லே...தாத்தா' என்ருன் அவன்.

'தாத்தா இல்லே தாத்தாவுக்குத் தாத்தா யாரோ ஒருத்தர். ஆனு நீயில்லே' என்று இவன் சிரித்தான். இடி இடியென்று சிரித்தான். வெகு அபூர்வமாகவே சிரிப்பு வரும்படி பேசத் தனக்கு நேர்ந்திருப்பது இன்று இது இரண்டாவது தடவை என்று தோன்றிற்று.

'அப்பா' என்று கூப்பிட்டுக் கொண்டு அவனுடைய மூன்று வயதுப் பெண் குழந்தை ஓடி வந்து அவனுடைய மடியில் விழுந்தது. தான் வந்த காரியம் கெட்டுவிட்டது என்று தோன்ற ஆரம்பித்து விட்டது இவனுக்கு. பெண் குழந்தைகளை இவனுக்குப் பிடிக்காது. சைக்கிளைப் பார்த்துத் திரும்பிக் கொண்டான்.

வைத்தியநாதன் குழந்தையைப் பார்த்து "யார் வந்திருக்கா பாரு...மாமா...மாமா" என்ருன்.

இது ஏதடா தொல்லையாப் போச்சு என்று நினைத்துக் கொண்டு இவன் திரும்பினுன். சிரித்தான்.

"மாமா" என்றது குழந்தை.

"இம்" என்ருன். குழந்தைக்குச் சொல்லும் பதில் இது அல்ல என்பது இவனுக்குத் தெரியும். குழந்தைகளுக்கு உரித்தான பதில்களைத் தனக்குச் சொல்லத் தெரியாது என்பதும் தெரியும். குழந்தைகளோடு விளையாடத் தெரியாது. அதிகபட்சம் குழந்தைகளின் முன் இவனுக்கு விரலைச் சொடுக்கத்தான் தெரியும். விரலைச் சொடுக்கினுன். திரும்பத் திரும்பச் சொடுக்கினுன். ஆண் குழந்தையாய் இருந்தாலாவது தூக்கிக் கொள்ளலாம். இதுவோ பெண் குழந்தை. ஆணுக இருந்தால் கூட அதன் உறுப்புகள் வலுப்பட்டிருக்க வேண்டும். ஒரு முறை தூக்கி-தலைக்கு மேல் தூக்கி-கீழே விட்டுவிடலாம். அத்துடன் விளையாட்டு முடிந்துவிட வேண்டும். அதற்குமேல் விளையாடத் தெரியாது. அது தலைக்குமேல் தூக்கிய விளையாட்டில் மகிழ்ந்து மீண்டும் மீண்டும் அப்படிச் செய்வதை விரும்பினுல் தொலைந்தது. தலைக்கு

மேல் தூக்கித் தூக்கி விட்டுக் கொண்டிருக்க வேண்டும். கை வலிக்க வலிக்க தூக்கி விட்டுக் கொண்டிருக்க வேண்டும். அதற்கே அலுப்புத் தோன்றி ஓடி விடுகிறவரை அதையே திரும்பத் திரும்பச் செய்து கொண்டிருக்க வேண்டும். குழந்தை அவ்வளவு விரைவில் அலுத்து விடுமா என்ன? தனக்கு அலுத்து விட்ட பிறகும் கூட இயந்திரம்போல அதை தலைக்கு மேல் தூக்கித் தூக்கி விட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

'மாமா' என்றது குழந்தை.

'இம்' என்ருன்.

'மாமா' என்றது மீண்டும்.

மீண்டும் இவன் 'இம்' என்ருன்.

குழந்தை வாயில் விரலைப் போட்டுக்கொண்டு தலையைச் சாய்த்துக்கொண்டு சிரித்தது. இவனும் சிரித்தான். அசட்டுச் சிரிப்பு சிரிக்கிருேம் என்று தோன்றிற்று. சிரித்த முகமூடி போல சிரித்த இவன் முகம் இவன் மனதில் தோன்றிற்று. பெண் குழந்தைகளை எல்லாம் முழுப்பெண்களாகவே மதிப்பவன் இவன். அம்மணமான பெண் குழந்தைகளைப் போட்டு கவர்ச்சிகரமான விளம்பரங்களை வெளியிட முடியும் என்றும் நினைத்ததுண்டு. பெண் குழந்தைகளைக் கண்டு விலகுவதற்கு அதுதான் காரணமா? பெண் குழந்தைகளின்மேல் சற்று வெறுப்பு இருப்பதாகவும் தோன்றிற்று. ஞானோதயம் போலத் திடீரென்று ஒரு யோசனை வந்தது. இதற்கு முன் இதைச் சிந்தித்துப் பார்த்ததில்லை. நேருக்கு நேராக பெண் குழந்தைகளின் முன் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பம் இதற்கு முன் வாய்க்கவில்லை யாதலால் தான் இந்தச் சிந்தனை தோன்றவில்லை போலிருக்கிறது. சந்தர்ப்பம் நேராமல் இத்தனை தூரம் தப்பித்துக்கொண்டு வந்த தன் திறமையைப் பாராட்டியும் கொள்ளலாம். அப்பா செத்த ஒரு மாதத்திற்குப் பின் இவன் தங்கை பிறந்தாள். இவனுக்கு வயது ஏழு. 'பொறக்கறத்துக்கு முன்னயே அப்பனே முழுங்கிட்டுப் பொறந்திருக்கு' என்று எத்தனை பேர் அவளைப் பார்த்துச் சொல்லி இருக்கக் கூடும். அவளால்தான் அப்பா இறந்தார் என்றும் இவன் ஏற்றுக் கொண்டிருக்கக் கூடும். பிரசவ அறையின் நாற்றமும் இவனுக்குப் பிடிப்பதில்லை. வெறும் நாற்றமாக வெறுக்கும் வெறுப்பல்ல இது என்றும் யோசித்து முடிவு கட்டினுன். அப்பா இறந்த ஒரு மாதத்திலும் பிரசவ அறைக்குள்ளும் தனக்கு இவ்வெறுப்புத் தோன்ற ஏதேனும் நேர்ந்திருக்க வேண்டும். 'அப்பா இதானும் பெண்ணுப் பிறந்

தடே' என்று குழந்தை பிறந்தவுடன் அம்மா சொன்னதாக திடீரென்று ஞாபகம் வந்தது. அன்று கேட்டதற்குப் பிறகு இத்தனை வருஷங்களுக்குப் பிறகு இன்றுதான் அது நினைவுக்கு வந்தது. கிராமத்தில் இரண்டு மூன்று வயது வரையில் இவன் தங்கை இடுப்பில் துணி இல்லாமல் சுற்றிக் கொண்டிருந்தாள். அம்மாவின் அன்பைத் தன்னிடமிருந்து தனக்குப் பின் பிறந்து கவர்ந்தவள் என்பதுடன் இன்னும் பல வெறுப்புக் கலந்து அவளை அப்பொழுது தான் பார்த்திருக்கக் கூடும். அதெல்லாம் நினைவுக்கு வரவில்லை. அந்தப் பருவத்தில் உள்ள எந்தப் பெண் குழந்தையிடமும் தனக்கு அதனால் தான் வெறுப்பு வருகிறது போலும் என்று நினைத்தான். இன்னும் கூட இவனுக்குத் தங்கையிடம் அபிமானம் இல்லாததையும் நினைத்துக்கொண்டான்.

'மாமா' என்றது குழந்தை.

'இம்' என்றான்.

'மாமா' என்று இவன் முழங்காலைத் தொட்டு விட்டு ஓடித் திண்ணையில் தொங்கும் அப்பாவின் கால்களுக்குள் புகுந்து கொண்டது. சிரித்தது. வாயில் விரலைப் போட்டுக் கொண்டது. தலையைச் சாய்த்து காக்காயைப் போல இவனைப் பார்த்தது. அது இவன் முழங்காலைத் தொட்ட போது அதன் முதுகில் இவன் தட்டிக் கொடுத்திருக்கலாம். 'என்னடி கண்ணு' என்று கேட்டிருக்கலாம். 'ஓ போகலாமா?' என்று கேட்டிருக்கலாம்.

'மாமா' என்றது குழந்தை.

'ஓண்டி கண்ணு...அம்மு சாப்பிட்டியா? ஆ குடிச்சியா? காப்பி குடிச்சியா? ங்கா குடிச்சியா? ஓண்டி கண்ணு...ஜட்டி போட்டுக்கோ. அம்மா கிட்டே போயி ஜட்டி போட்டுண்டு வா...ஓடு. இப்பிடி ஆய் காட்டிண்டு நிக்கலாமா? ஓடு' என்றெல்லாம் அதனிடம் சொல்லலாம் என்று தோன்றிற்று. ஆனால், வார்த்தை வெளியில் வரவில்லை. பிரும்மா மாட்டுக்காரன் 'அய்யாவுக்கு நல்லகாலம் வருதா? பொதயல் கெடக்கப் போவுதா? அம்மாவுக்கு மணியப் போல ஆண் கொழந்தே பொறக்கப் போவுதா? அய்யா பழந்துணி கொடுக்கப் போருரா? கிழிசல் சட்டை கொடுக்கப் போராரு? ஒனக்குப் புண்ணாக்குக் கொடுப்பாருன்னு பார்க்கிறியா?' என்று மாட்டிடம் கேட்பது போலத் தான் இதுவும் என்று தோன்றிற்று.

'மாமா' என்று ஓடிவந்து இவனைக் கிள்ளி விட்டுப் போயிற்று அது.

'இம்' என்ருன். கையையும் காலையும் ஆட்டாமல் நேரே உட்கார்ந்திருந்தான். அது அப்பாவின் வேட்டியைத் தூக்கித் தலையில் போட்டுக் கொண்டது. நூல் இடுக்கு வழியாகப் பார்த்தது. வேட்டியைத் தூக்கி உதறிவிட்டுச் சிரித்தது. மீண்டும் எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டது. கண்ணுக்கு வழி செய்து கொண்டு பார்த்தது. சிரித்தது. மூடிக் கொண்டது. திறந்து பார்த்தது. மூடிக்கொண்டது.

'மாமாவுக்கு இட்டாச்சு காட்டறயாடி கண்ணு' என்ருன் வைத்தியநாதன்.

'மாமா' என்றது அது.

'இம்' என்ருன் இவன். ஓடி வந்து இவன் தொடையில் அடித்துவிட்டு அப்பாவிடம் ஓடிற்று. அதைப் பிடிக்க இவன் கையை நீட்டி இருக்கலாம். கையை நீட்டவில்லை. வாசல் சைக்கிளைப் பார்த்துத் திரும்பினுன். குப்பத்துப் பையன் ஒருவன் சைக்கிள் மணியை அடித்துக் கொண்டிருந்தான். 'டேய்' என்ருன் இவன். பையன் ஓடிவிட்டான்.

'மாமா' என்றது குழந்தை.

'இம்' என்ருன்.

'நகந்துக்கோ...வேட்டியே அவுத்துடாதே ... அம்மா கிட்டே போய் மாமாவுக்கு காப்பி போடச் சொல்லு' என்ருன் வைத்தியநாதன்.

நல்ல வேளை! குழந்தை உள்ளே போய்விடும் என்று எதிர்பார்த்தான். அது நகராமல் அப்பாவின் கால் இடுக்கிலேயே திண்ணையில் சாய்ந்து கொண்டு நின்றது. 'மாமா' என்றது.

'நகந்துக்கோ...மாமாவுக்கு காப்பி கொண்டு வரலாம்' என்று எழுந்து உள்ளே போனுன் வைத்தியநாதன். குழந்தை திண்ணையில் தங்கி விட்டது. 'இது ஏதடாது. இது இங்கேயே தங்கிடுத்தே' என்று நினைத்துக் கொண்டான். அதன் பார்வையைக் கவராமல் இருக்க வாசலில் சைக்கிளைப் பார்த்துக் கொண்டிருந்தான். முன்பு மணி அடித்து விட்டுப் போன பையன் மீண்டும் சைக்கிளிடம் வந்து கொண்டிருந்தான். இவன் 'டேய்' என்ருன். அவன் ஓடிவந்து மணியை அடித்து விட்டு ஓடினுன். கையில் மரவல்லிக் கிழங்கை வைத்துக் கடித்துக் கொண்டிருந்தான். இடுப்பில் துணியில்லை. வைத்தியநாதனின் குழந்தை படியிறங்கி சைக்கிளின் பக்கம் போயிற்று. மணி அடிக்க எட்டிப் பார்த்தது. பிறகு சைக்கிளில் என்ன செய்யலாம் என்று யோசித்தது. சக்கரத்தைச் சுற்றிப் பார்த்தது. இவன் சைக்கிளைப் பூட்டியிருந்தான், கம்பிகள் பூட்டில் இப்படியும் அப்படியும் மோதிக் கொண்

டன. அது திரும்பத் திரும்ப சக்கரத்தைச் சுற்ற முயன்றது. அதை என்ன சொல்ல முடியும்? வைத்தியநாதனின் குழந்தை. தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் மரவல்லிக் கிழங்கைக் கடித்துக் கொண்டே சைக்கிளிடம் வந்தான். 'டேய்' என்ருன் இவன். சிறுவன் தயங்கினுன். நின்ருன். பிறகு சைக்கிளை நோக்கி வந்தான். இவன் 'டேய்' என்ருன். சிறுவன் சைக்கிளை நோக்கி வேகமாக ஓடி வந்தான். மணியை அடித்தான். 'டேய்' என்ருன் இவன். அவன் திரும்பிப் பார்த்தான். மீண்டும் மணியை அடித்தான். இவன் உட்கார்ந்த இடத்திலிருந்தபடியே 'டேய்'என்ருன். சிறுவன் ஓடவில்லை. துணிச்சல் வந்துவிட்டது போலிருக்கிறது. திரும்பிப் பார்த்துக் கொண்டே மணியை அடித்தான். 'டேய்' என்ருன் இவன். அவன் ஓடவில்லை. 'வந்தேன்ஞ ஒதைப்பேன் பாரு' என்ருன் இருந்த இடத்திலிருந்தே. அவசர அவசரமாக மணியை அடித்துவிட்டு ஓடினுன் அவன். வைத்தியநாதனின் குழந்தை கையைத் தட்டிச் சிரித்தது. மணி அடிக்க எம்பிப் பார்த்தது. இவனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டு சிரித்தது. எம்பிப் பார்த்தது. எதிர் நடைபாதையில் போய் நின்றுகொண்டிருந்த சிறுவன் இவனையே பார்த்துக் கொண்டிருந்தான். மரவல்லிக்கிழங்கை ஒருமுறை கடித்துக்கொண்டான். சைக்கிளை நோக்கி நகர்ந்து வர ஆரம்பித்தான். அங்காடிக்காரியின் கூடையைச் சுற்றி உட்கார்ந்து கொண்டிருந்த நாலைந்து சிறுவர்கள் இந்தப் பக்கம் திரும்பினுர்கள். மரவல்லிக் கிழங்குச் சிறுவன் சைக்கிளிடம் வந்துவிட்டான். 'டேய் வந்தேன்ஞ ஒதைப்பேன் பாரு' என்ருன் இவன். பையனுக்கு பயம் தெளிந்துவிட்டது. மணியை அடித்தான். 'டேய்' என்ருன் இவன். கூடையிடம் உட்கார்ந்து கொண்டிருந்த கால் சட்டைப் போட்டுக் கொண்டும் போட்டுக் கொள்ளாமலும் இருந்த சிறுவர்கள் எழுந்து நின்று கொண்டார்கள். தனியே நின்று இந்தப் பக்கம் பார்த்துக்கொண்டு எதையோ தின்று கொண்டிருந்த் ஒருவன் மிச்சத்தை வாயில்கொட்டிக்கொண்டு கையை கால் சட்டையில் துடைத்துக் கொண்டான். சிறுவன் மணியை அடித்துக் கொண்டிருந்தான். 'டேய். வந்தேன்ஞ தொலைச்சுக் கட்டிடுவேன் பாரு' என்ருன் இவன். மற்ற சிறுவர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுவன் மணியை அடித்துக் கொண்டிருந்தான். இவன் எழுந்து போனுன். அவன்

ஓட ஆரம்பித்தான். நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிறுவர்களும் தெருவில் ஓடினார்கள். வைத்தியநாதனின் பெண் கை கொட்டிச் சிரித்துக்கொண்டே சைக்கிளடியில் நின்று கொண்டிருந்தாள். இவன் திரும்பி வந்து உட்கார்ந்து கொண்டான். வைத்தியநாதன் திரும்பி வந்தான். 'கிளம்பட்டுமா?' என்றான் இவன். 'இரு...இரு போகலாம். காப்பி போட்டிண்டிருக்கா குடிச்சுட்டுப் போகலாம்' என்றான் வைத்தியநாதன். இருப்புக் கொள்ளாமல் உட்கார்ந்து கொண்டிருந்தான் இவன். அதற்குள் பையன்கள் சைக்கிளடியில் கூடி விட்டார்கள். ஒருவனுக்குப் பதில் இப்பொழுது பலர். மாற்றி மாற்றி மணி அடித்தார்கள். 'டேய் பசங்களா?' என்றான் இவன். எல்லோரும் ஓட ஆரம்பித்தார்கள். சற்றுத் தூரத்தில் போய் நின்றார்கள். தயங்கித் தயங்கித் திரும்பினார்கள். மணி அடித்து விட்டுத்தான் தொலைந்து போகட்டுமே என்று எண்ணினான் இவன். பேசாமல் இருந்து விடுவது என்று முடிவு கட்டிக் கொண்டான். சிறுவர்கள் திரும்பி விட்டார்கள். வரட்டும் என்று இருந்தான். மணி அடித்தார்கள். அடிக்கட்டும் என்று இருந்தான். திரும்பத் திரும்ப அடித்தார்கள். சும்மா இருக்க முடியவில்லை இவனால். 'டேய் பசங்களா வந்தேன் கொன்னுடுவேன் தெரிஞ்சுதா?' என்றான். சிறுவர்கள் ஓடவில்லை. 'மைதிலி இப்பிடி வாடி கண்ணு. சைக்கிள்ளே விஷமம் பண்ணாதே' என்றான் வைத்தியநாதன். அவள் சைக்கிளை விட்டுத் திரும்பவில்லை. ஃபெடலைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்தாள். இவன் எழுந்து போனான் 'டேய் பங்களா ஒதை கேக்குதா?' என்று கையை ஓங்கிக்கொண்டே போனான். பையன்கள் 'டோய்' என்று சப்தம் போட்டுக் கொண்டு ஓடினார்கள். திரும்பி வந்து உட்கார்ந்தான் இவன். "கிளம்பறேன்' என்றான். 'இரு காப்பி குடிச்சுட்டுப் போகலாம்' என்று உள்ளே கிளம்பி போனான் வைத்தியநாதன். பையன்கள் சைக்கிளடிக்குத் திரும்பிவிட்டார்கள். மணி அடித்தார்கள். இவன் சும்மா உட்கார்ந்து கொண்டிருந்தான். ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டிருந்தான். 'டேய்' என்று திடீரென்று எழுந்து ஓடினான். பையன்கள் ஓடிவிட்டார்கள். சப்தம் போட்டுக்கொண்டு ஓடினார்கள். திரும்பி வந்து உட்கார்ந்தான் இவன். ஆபீஸ் போவதைத் தவிர சைக்கிளை இனிமேல் வெளியில் எடுப்ப

தில்லே என்று முடிவு கட்டிக் கொண்டான். மணி அடிப்பதால் என்ன ஆகிவிடப்போகிறது? சைக்கிள் உருகிப்போய் விடுமா என்ன? அடித்துத் தொலேத்து விட்டுப் போகட்டும் என்று நினைத்துக் கொண்டான். ஆனல் மனதில் என்னவோ செய்தது. சும்மா இருக்கமுடியவில்லே. பையன்கள் திரும்பிக் கொண்டிருந்தார்கள். முன்னதாகவே மிரட்டலாம் என்று 'டேய்' என்று எழுந்து ஓடினன். பையன்கள் பாதிவழியில் திரும்பி சப்தம் போட்டுக் கொண்டு ஓடினர்கள். அவள் சைக்கிள் அடியிலேயே கை தடடிச்சிரித்துக் கொண்டு நின்ருள். 'ராமா கிருஷ்ணு கோவிந்தா:. கிருஷ்ணு ராமா கோவிந்தா'' என்று குழந்தைகளுக்கு கைதட்டச் சொல்லிக் கொடுப்பதெல்லாம் இதற்குத் தான் பயன்படுகிறது. கை தட்டிச் சிரிக்கக் கற்றுக் கொண்டு விடுகிறது. என்ன குழந்தை வளர்க்கிருர்கள்! தன்னே வளர்த்த விதமும் சரியில்லே என்று தோன்றிற்று. 'அதைத் தொடாதே. இதைத் தொடாதே. கீழே குனியாதே. மேலே நிமிராதே' என்று கணவனே இழந்ததால் சாதாரணத் தாயைவிடக் கொஞ்சம் அதிகமாகவே பொறுமையிழந்து வளர்த்திருப்பாள். தண்ணீர்த் தொட்டியில் கை விட்டால் அடி. வெளியில் சென்று கால் கழுவாமல் உள்ளே திரும்பினல் உதை. காலி காபி டம்ளரை பொத்துன்னு வைக்காதே மெதுவா வை என்று குட்டு. என்ன வளர்ப்பு வேண்டிக் கிடக்கிறது. இது போதாதென்று பிள்ளே வளக்கருளாம் பிள்ளை ...அணிப்பிள்ளே...தென்னம் பிள்ளே. பிள்ளே வளக்கருளாம் பிள்ளே. வாலேயும் தலேயையும் கிள்ளிப்பிட்டு' என்று பெண் விமர்சகர்கள் வேறு. இவர்களுக்கு எல்லாம் 'அடி உதை, குட்டை எல்லாம் விட்டு விட்டு மற்றவற்றைச் சொல்லிக் குழந்தை வளருங்கள் என்று வயதான இன்று உதை கொடுத்தால் தேவலே. பையன்கள் சைக்கிள் அடியில் கூடிவிட்டார்கள். மணி அடித்தார்கள். இவன் சற்றுச் சும்மா இருந்தான். எழுந்து போவதில்லே என்று புஞ்சை அய்யனர் கோயிலில் முன்னடியான் சிலேயைப் போல உட்கார்ந்து கொண்டிருந்தான். அவர்கள் மணி அடித்துக்கொண்டே இருந்தார்கள். அடிப்பது ஒரு மணியே ஆனலும் ஆளுக்கொரு மணியாக தன் காதருகில் வந்து அடிப்பது போலத் தோன்றிற்று. பயல்களே ஒருகை பார்த்து விடுவது என்று எழுந்து கொண்டு 'டேய்' என்று ஓடினன். பையன்கள் சப்தம்

போட்டுக்கொண்டு ஓடினுர்கள். இவன் திரும்பினுன். சைக்கிள் பக்கத்திலேயே நின்று கொண்டான். பையன்கள் மெல்லத் திரும்பி வந்தார்கள். சற்றுத் தூரத்தில் வந்து நின்று கொண்டார்கள். 'வந்தேன்னு கொன்னுடுவேன்' என்றுன் இவன். 'கொல்லுவேல்லே ... கொல்லுவே கொல்லுவே' என்றுன் ஒருவன். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு இரு தரப்பினரும் நின்றுர்கள். பிறகு பையன்கள் இவனை நோக்கி முன்னேறினுர்கள். 'கொன்னுடுவேன்' என்றுன் இவன். 'கொல்லுவேல்லே .. கொல்லுவே கொல்லுவே' என்று பையன்கள் இன்னும் முன்னேறினுர்கள். இவன் கீழே குனிந்து சல்லியைக் கையில் அள்ளிக் கொண்டான். உடனே பையன்களில் சிலர் சந்தில் ஓடினுர்கள். சிலர் தெருவில் ஓடினுர்கள். இவன் நின்றுகொண்டே இருந்தான். தெருவில் ஓடியவர்கள் திரும்பி சந்தில் தொகை அதிகம் இருந்ததால் அங்கு போய்ச் சேர்ந்து கொண்டார்கள். பிறகு எல்லோரும் நகர்ந்து சந்து முனைக்கு வந்தார்கள். 'டோய்' என்று சப்தமிட்டார்கள். வைத்தியநாதனின் பெண் இவன் முழங்காலுக்குப் பின் 'மாமா .. மாமா' என்று கிச்சுக் கிச்சு மூட்டிவிட்டு ஓடினுள். இவன் திரும்பிப் பார்த்துவிட்டுச் சும்மா இருந்தான். அவளுக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. 'மாமா மாமா என்னைப் புடி மாமா' என்றுள் அவள். பையன்கள் சந்து முனையிலிருந்து முன்னேறி வந்தார்கள். 'வந்தேன்னு தொலைச்சுக் கட்டிடுவேன் தொலைச்சு' என்று இவன் முன்னேறினுன். பையன்கள் சந்தில் மொத்தமாக சப்தமிட்டுக் கொண்டு ஓடினுர்கள். அவர்களைப் பாதி தூரம் வரையில் விரட்டியடித்து விட்டுத்தான் திரும்புவது என்று இவனும் ஓடினுன். பின் நின்றுன். அவர்கள் சந்தில் பாதிதூரம் ஓடி விட்டார்கள். இவன் திரும்பினுன். அவர்களும் திரும்பினுர்கள். இவன் திடீரென்று திரும்பி ஓடினுன். அவர்களும் திரும்பி ஓடினுர்கள். இவன் சட்டென்று நின்றுன். அவர்களும் நின்றுர்கள். இவன் திரும்பினுன். அவர்களும் திரும்பினுர்கள். இவன் நின்று திரும்பி கையிலிருந்த ஒரு கல்லை விட்டெறிந்தான். கல் ஒரு பையனின் காலில் பட்டு விட்டது. வலிக்கும் படியாகப் பட்டிருக்க முடியாது. இருந்தாலும் பையன் 'ஐயோ அம்மாடி காலே ஒடிச்சுட்டானே. கல்லாலே அடிச்சுட்டானே..கல்லாலே அடிச்சுட்டானே' என்று காலைப்

பிடித்துக் கொண்டு உட்கார்ந்துவிட்டான். நாய்ப்பயல். விட்ட கல்நாயின் மேல்படாது சுவரில்பட பயந்து சுவரில் ஒட்டிக் கொண்டோடும் நாய் காலைத் தூக்கிக் கொண்டு ஊளையிட்டு ஓடுவதைப்போல இது. முன்பு எப்பொழுதோ பட்ட அடியின் நினைவில் இப்பொழுதும் பட்டிருக்க வேண்டும் என்று நாய் ஊளையிடும் போலிருக்கிறது. அல்லது கல்லின் வேகத்தில் இடையில் பட்ட இடம் தெரியாது முடிவில் பட்ட இடமான சுவர்மட்டும் தெரிய இடையில் அடியை வாங்கிக் கொண்டுதான் ஊளையிட்டு ஓடும் போலிருக்கிறது. யோசனைக்கு நேரமில்லை அது. இனிமேல் அங்கு தங்கினால் ஆபத்து. சண்டைக்குக் குப்பமே கூடிவிடும் என்று திரும்பி விட்டான். வைத்தியநாதன் காபியோடு திண்ணையில் காத்துக் கொண்டிருந்தான். காபியை வாங்கிக் குடித்தான். பையன்கள் சைக்கிளடிக்குத் திரும்பி விட்டார்கள். மணி அடித்தார்கள். காலில் அடி பட்டவனும் சிரித்துக் கொண்டு நின்றான். கண்கள் ஈரமாகி இருந்தன. 'வரட்டுமா?' என்று கிளம்பினான் இவன்.

''என்ன விசேஷம். வந்தே உடனே கிளம்பறே'' என்றான் வைத்தியநாதன்.

''சும்மாத்தான்'...வரேன்...

# ஒட்டகம்

ஆயிரம் முறைகள் எண்ணிப்
பார்த்தபின் முடிவு கண்டேன்
ஒட்டகம் குரூபி யில்லை.

குரூபிதானென்றால் மோவாய்
மடிப்புகள் மூன்று கொண்ட
அத்தையும் குரூபி தானே?

அத்தையைக் குரூபி என்றே
ஒருவரும் சொல்வதில்லை
சண்டைகள் வந்தா லன்றி !

சண்டைகள் வந்த போது
மற்றவர் அழகில் குற்றம்
பார்ப்பது உலக நீதி.

ஒட்டகம் குரூபி என்றால்
அதனுடன் உலகுக் கேதும்
நிரந்தரச் சண்டை உண்டோ!

ஞானக்கூத்தன்

என்று கிளம்பினான். பையன்கள் ஓடினார்கள். ''மாமா... மாமா என்னையும் புடி மாமா'' என்றாள் மைதிலி. இவன் பதில் சொல்லவில்லை. சைக்கிள் பூட்டைத்திறந்து வெளியில் எடுத்துக்கொண்டு வந்தான். ''வரேன்'' என்று சைக்கிளில் ஏறிப் புறப்பட்டான். சந்தில் திரும்பவில்லை. நேரே தெருவோடு போகக் கிளம்பினான். பையன்கள் இவனிடம் ஓடி வந்தார்கள். சைக்கிளை வேகமாக மிதிக்க ஆரம்பித்தான். பையன்கள் சப்தமிட்டுக் கொண்டே உடன் ஓடிவந்தார்கள். ஒருவன் சைக்கிளை பின்னால் தள்ளிக் கொண்டே ஓடி வந்தான். சைக்கிளின் வேகம் அதிகரித்தது. பிறகு அவன் உந்தித் தள்ளிவிட்டு நின்றான். பையன்கள் பின் தங்கி விட்டார்கள். சப்தமிட்டார்கள். இவன் அடுத்த தெருவில் திரும்பி வேகமாகப் போனான். 'ரொம்ப சுயப்பிரக்ஞையுள்ள தனக்கு நேர்ந்தது ரொம்ப நன்னாருக்கு' என்று சைக்கிளில் போகும் போதே மோவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் கொண்டான். 'சீ' என்ன அசட்டுத்தனம். பிறருக்கு எதிரில் இப்படிப் பெண்களைப் போல தோளில் மோவாயை இடித்துக் கொண்டோமே' என்று தோன்றிற்று. ●

---


# ஞானரதம்

சந்தா விபரம் ·

ஆயுள் சந்தா ரூ. 50/-
ஆண்டுச் சந்தா ரூ. 5/-
தனிப்பிரதி 50 பைசா

ஒரு ஆண்டுக்குக் குறைந்த சந்தா ஏற்கப்படுவதில்லை.

மணியார்டர்
அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி,
ஞானரதம்
சக்தி இல்லம், சென்னை-36

மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

# குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர் :
ப. நெடுமாறன்

48, மேலமாசி வீதி,
மதுரை-1

சென்னை நகருக்கும் ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை

நான் ரொம்ப ஜாக்கிரதை யானவன். வெறும் பெருச்சாளி தானே என்று மட்டமாக நினைத்துவிடப் போகிறீர்கள். நான் மற்றப் பெருச்சாளிகளைப் போல ஏமாளியல்ல. எங்களுக்கு எத்தனை விரோதிகள். எத்தனை பேர் எங்களை அழிக்கக் காத்திருக்கிறார்கள் தெரியுமா? ஆனாலும் நான் இது வரை ஒருத்தருக்கும் அகப்பட்டதில்லை. அவ்வளவு முன்னேற்பாடுகளுடன் இருந்திருக்கிறேன். விசித்திர விசித்திரமான ஏற்பாடுகள். யாரும் என்னை அண்ட முடியாதபடி. நான் குடியிருக்கும் காலி மனைக்குப் பக்கத்திலுள்ள வீடுகளிலிருக்கும் மனிதர்கள், இந்தத் தெருவில் இருக்கும் நாய்கள், பூனைகள், கீரிப்பிள்ளைகள், தென்னந் தோட்டத்து மரநாய்கள், பக்கத்துக் காட்டிலிருக்கும் செந்நாய்கள், நரிகள் முதலிய பலருக்கும் இங்கே இருப்பது ஒன்றா அல்லது பல பெருச்சாளிகளா என்று கூடத் தெரியாது. ஏன், நான் இருக்கிறேன் என்பது கூட யாருக்காவது தெரியுமா என்பதே சந்தேகந்தான். எனக்குக்கூட எப்படி நிச்சயமாக அவர்கள் எல்லாம் இருக்கிறார்கள் என்று தெரியும்? ஆனால் முட்டாள்தனமாகத் தலையை வெளியே நீட்டி அவர்கள் இருப்பார்களேயானால் அவர்களிடம் மாட்டிக்கொள்ள நான் அவ்வளவு புத்தியில்லாதவனல்ல. அப்படி ஒருவரும் என்னைக் கொல்லக் காத்திருக்கவில்லையென்றாலும்—நான் என்னமோ அவ்வாறு நம்பவில்லை—நான் செய்துள்ள ஏற்பாடுகள் அவசியமே. இப்போது யாரும் இல்லையென்றாலும் எப்பவும் இப்படியே இருக்கும் என்பது என்ன நிச்சயம்? இப்போது



என்னை அசட்டையாக இருக்கச் செய்து நான் தற்காப்பில்லாமல் இருக்கும்போது என்னை யாராவது பிடித்துவிட்டால் பின் யார் சங்கடப்படுவது? அப்போது யார் என் உதவிக்கு வருவார்கள்? நான் இருப்பது காலி மனையா இல்லையா என்பதுகூட எனக்கு நிச்சயமாகத் தெரியாதுதான். அதைத் தெரிந்து என்ன ஆக வேண்டும்? நான் அவசியமில்லாத விஷயத்தில் தலையை விட்டுக் கொண்டு பிறகு அவஸ்தைப்பட மாட்டேன். இது காலி மனையில்லை, மனையே இல்லை என்றே வைத்துக் கொள்ளுங்கள். அதனால் என்ன? மனிதர் குடியிருக்கும் வீடென்றால்

எனக்கு இன்னும் ஆபத்து அதிகந்தானே. அநாவசிய மாக, வெறுமனே விஷயம் தெரிவதற்காக, இது காலி மனையா அல்லது குடியிருப்பு மனையா என்ற உபயோகமல் லாத, சொல்லப் போனால் ஆபத்தான விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக வெளியே வந்து வம்பில் மாட் டிக்கொள்ள நான் தயாரில்லை. நான் செய்திருக்கும் ஏற்பாடு கள் அனைத்தும் தப்பிக்கத் தானே யொழிய வெறும் பொழுது போக்குக்காக அல்ல. பொழுதுதான் நாம் போக்க வேண்டிய அவசியம் ஒன்று மில்லாமல் அதுவே போய்க் கொண்டிருக்கிறதே. அது வீணாகப் போய் நான் எச்சரிக் கையில்லாமல் இருந்து விடப் போகிறேனே என்றுதான் எனக்கு எப்போதும் பயம். நான் பயங்காளிதான். ஒப்புக் கொள்கிறேன்: அதில் எனக்கு அவமானம் ஒன்றுமில்லை. ஆபத்துக்களை எதிர்நோக்கிப் பயந்து எச்சரிக்கையோடு இல்லாமல் இருப்பவன் முட் டாள் என்பது என் தாழ்மை யான அபிப்பிராயம். ஆபத் துக்களின் அறிகுறிகள் தோன்றுத முன்னரே அதை எதிர்பார்த்து எச்சரிக்கை யோடு இருப்பவன்தான் புத்தி சாலி. நானே இதைச் சொல் லிக் கொண்டாலும் இந்த விதத்தில் நான் ஒரு புத்திசா லியே. நான் அடக்கமுடைய வன் என்றாலும் உண்மையை எடுத்துச் சொல்லத்தானே வேண்டும். இதற்காகப் பொய் சொல்லுவதா? இதென்ன, உலகத்தில் இல்லாத அதிசய மாக இவன் மாத்திரம் சர்கா மல் இருந்து விடப்போகிறானு என்று நீங்கள் நினைக்கலாம். நானொன்றும் அப்படி நினைக்க வில்லை. எல்லாரும் என்றாவது ஒரு நாள் சாகத்தான் போகி ரோம். ஆனாலும், சாவதற்கா கவா நாம் வாழ்கிறோம். நீங் களே சொல்லுங்கள், யாருக்கு இந்த நிமிஷத்திலேயே உயி ரைத் துறக்க ஆசையென்று. எனக்கும் கிழடு தட்டி விட் டது. இருப்பினும் இத்தனை நாள் நான் உயிரோடிருந்த தற்கு நான் முன்யோசனை யுடன் செய்து வைத்திருந்த ஏற்பாடுகள்தான் காரணம். அதில் சந்தேகமில்லை. என் னைப்போலவே மற்றவர்களும் நீண்ட நாள் வாழவேண்டும் என்ற ஆசையே இதையெல் லாம் எழுதி வைக்கத் தூண்டி யது. மற்றவர்கள் மேல் எனக்கு அப்படி ஒன்றும் பிர மாதமாக நம்பிக்கை இல்லை தான். அவர்களிடமிருந்து என்னைக் காத்துக்கொள்ளத் தானே இவ்வளவு காலம் சிர மப்பட்டிருக்கிறேன். இருந்தா லும் நான் வெறும் சுய நலமே உருவானவனல்ல. வளைகளுக் குள் அடைந்து கிடக்கும் என்

ளைப்பற்றி யாருக்கும் தெரியாமல் போய் என்னுடைய யோசனையை மற்றவர்கள் அறிந்து கொள்ளாமல் போய் விட்டால் உலகத்துக்கு எவ்வளவு நஷ்டம். அதற்காகத்தான் இதை எழுதுகிறேன். ஆனால் பரோபகாரத்துக்கும் ஒரு எல்லை உண்டு. ஆகவே இதை எழுதி முடித்த பின் நான் வெளியேபோய் என்னை விளம்பரப்படுத்திக் கொண்டு அகப்பட்டுக் கொள்ளப்போகிறேன் என்று யாரும் எதிர்பார்க்க வேண்டாம். நான் பெருச்சாளிதான். ஆனால் முட்டாள் பெருச்சாளியல்ல. அப்படி மாட்டிக்கொள்ளவா ஆயுள் பூராவும் உழைத்திருக்கிறேன்?

நான் இப்போதிருக்கும் வளை கொஞ்சம் பெரியதுதான். ஆனாலும் இதிலிருந்தும் தப்பித்துப் போக இன்னும் ஒரு வளை தொடங்கப் போகிறேன். இது என் முதல் வளையல்ல. நினைவு தெரிந்த நாள் முதலாக எத்தனை வளைகள் தோண்டியிருக்கிறேன். இதனால் எனக்கே இப்போது கணக்குத் தட்டுக் கெட்டுப் போகிறது. வழிகூட தப்பிப் போகிறது. நான் ஆரம்பிக்கும் வளைகள் முதலில் பெரிசாக இருக்கும். உள்ளே போனால் திடீரென முடிந்து விடும். உண்மையில் எல்லா வளைகளும் அப்படி முடியும் என்று சொல்லிவிட முடியாது. ஓரத்தில், மூலையில், இருட்டில் எங்கோ ஒரு வழி இருக்கும். ரொம்பக் கஷ்டப் பட்டுத் தேடிப் பார்த்தால் தான் கிடைக்கும். சில சமயம் எவ்வளவு தேடினாலும் கண்டு பிடிக்கவே முடியாதபடி இருந்தாலும் இருக்கும். எல்லா வளையும் இப்படி இருக்கும் என்றும் சொல்ல முடியாது. எனக்கே திட்டமாக எந்த வளை எப்படிப் போகும் எப்படி முடியும் என்று சொல்ல முடியாது. வளையைத் தோண்டியவனுக்கே இப்படியென்றால் உள்ளே

**சார்வாகன்**

புகுந்து என்னைத் தேடுபவனுக்கு எவ்வளவு சிரமமாக இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். என் வளைகள் எல்லாம் இந்த மாதிரிப் பெரிதாக இருக்கும் என்று நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. பல வளைகளை இருக்கும் இடமே தெரியாமல் கல்லும் மண்ணும் போட்டு வெகு திறமையாக மறைத்து வைத்திருக்கிறேன். நானே வளைப் பள்ளம் இருக்கிறது தெரியாமல் அதில் விழுந்து அடிபட்டுக் கொண்டதுண்டு என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வளவு இயற்கையாக நான் அவற்றை

மறைத்து வைத்திருக்கிறேன். மேடு மாதிரி இருக்கும். அது நிஜமான மேடுதானு அல்லது அதில் வளை மறைந்திருக்கிறதா என்று யாராலும், என்னுலும் கூடத்தான், சொல்ல முடியாது. நானே நிறைய தரங்கள் மேட்டை வளையென்று நினைத்து ஒளிந்து கொள்ள முயன்று ஏமாந்து காயம்பட்டுக் கொண்டிருக்கிறேன். எத்தனையோ முறை மேட்டில் புது வளை தோண்டுவோம் என்று தொடங்கித் தோண்டிய வளையையே மீண்டும் மீண்டும் தோண்டியிருக்கிறேன். அதுகூட நிச்சயமாகச் சொல்ல முடியாது, நான் தோண்டுவது, தோண்டியது, தோண்டப் போவது எல்லாம் புது வளையா அல்லது மண் மூடிப்போன பழைய வளையையேதானு என்று. பல முறை தப்பிக்க வேறு வழியில்லை என்று நினைத்துக் குறுக்கு வளைகள் தோண்டியிருக்கிறேன். அதை முடிக்கும்போதோ முடித்த பின்னே தான் நான் ஏற்கனவே வழி செய்திருப்பது தெரியும். அதனுலென்ன? பரவாயில்லை. ஒன்றுக்கு இரண்டு வழிகள் இருப்பதும் லாபந்தானே? சில சமயங்களில் நாம் ஏன் இப்படி நகம் தேயக் கால் தேய முகத்திலிருந்தும் கைகளிலிருந்தும் ரத்தம் வழிய இருட்டில் கிடந்து கஷ்டப்பட வேண்டும். பேசாமல் வெளியே வந்து விடுவோம், இத்தனை வருஷம் பாராதிருந்த சூரியனைப் பார்த்துக்கொண்டு, இத்தனை வருஷம் அநுபவிக்காமலிருந்த காற்றின் ஸ்பரிசத்தை அநுபவித்துக்கொண்டு சிறிது நேரமாவது வாழ்க்கைப் போரினின்று விடுபட்டு இளைப்பாறுவோம், பாம்போ கழுகோ நாயோ நரியோ கொன்று போட்டாலும் பரவாயில்லை—என்று சலிப்புத் தட்டியதுண்டு. நான் என்ன சாதாரண மிருகந்தானே. ஆனுல் இந்தச் சோர்வு மனப்பான்மையில் நான் அமிழ்ந்து முழுகிப் போனதில்லை என்பதையும் பெருமையுடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப் போயிருந்தால் இந்த மாதிரிச் சுகமாகப் பயமின்றி எழுதிக் கொண்டிருக்க முடியுமா என்ன ?

நான் வெறுமனே வளைகளால் மட்டும் நிலத்தைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டுச் சுகமாக உட்கார்ந்திருக்கிறேன் என்று நீங்கள் நினைத்தால் அது பெருந்தவருகும். பெரிய மிருகங்கள் இந்த வளைகளால் தடைப்பட்டுப் போகலாம். ஆனுல் சின்ன பிராணிகளும் இப்படித் தடுக்கப்பட்டு விடுமா? இப்போது என்னைக் கண்டு இந்தச் சிறுபிராணிகள் பயப்படலாம். அதுவே எனக்குச் சந்தேகந்

# இண்டலக்ட்ஸ்

பிரச்சனைகள் தோன்றுவது எதன் காரணமாக என்று அறிந்துகொள்ள தனி அறிவு வேண்டும். அது மட்டுமல்ல. அந்த அறிவுக்கு அறிந்ததை அச்சமற்றுச் சொல்வதற்கு ஒரு தைரியமும் வேண்டும். இவ்விரண்டும் மட்டும் இருந்தால் கூடப் போதாது. தன் தேவைகள், தன் வசதிகள், தன் சுகங்கள், இலாபங்கள், நலன்கள் என்ற சுய கண்ணோட்டங்களிலிருந்து விலகி நிற்கவும் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் தன் தேவைகள், வசதிகள், நலன்களுக்கு ஏற்ப, அந்தப் பிரச்னையை வைத்தே எப்படிக் கூதல் காயலாம் என்று தான் சுயநலமி ஒருவனின் அறிவு கணக்குப் போடுமே தவிர, உண்மைகளைக்காண நிச்சயமாக அந்த அறிவு பயன்படாது.

அப்படிப்பட்ட அறிவு ஜீவிகள் எண்ணிக்கையில் அதிகமாக இருக்க முடியாதுதான். இருக்கத் தேவையும் இல்லை. ஓராயிரம் கூடி உளப்பிக் கொண்டிருக்கும் பிரச்சனையை தன்னலமற்ற—அக்கறையுடன்கூடிய—அச்சமற்ற ஒரே ஒரு அறிவாளியே விடுவிக்கப் போதுமானவன்.

அத்தகைய வலிமை மிக்க அறிவாளிகள் எங்கெங்கு இருக்கிறார்கள் என்பதைத் தேடிக் கண்டுபிடித்து, இணைப்பதற்கான ஒரு முயற்சியே இந்த 'இண்ட்லக்ட்ஸ்' அரங்கின் நோக்கம்.

இப்பகுதிக்கான விவாதத்தை "சிந்தனைச் சிதறல்கள்" என்ற தலைப்பில் வல்லிக் கண்ணன் துவக்கி வைத்திருக்கிறார். இப்பகுதிக்கென்று அவர் எழுதவில்லை என்றாலும், ஆசிரியர் குழு இக்கட்டுரையே இப்பகுதியைத் துவக்குவதற்கான நல்ல ஆரம்பம் என்று முடிவு செய்தது.

இப்பிரச்சனை பற்றிய தங்களின் எண்ணங்களை அறிவுலகத்திடம் எதிர்பார்க்கிறோம். இது கடிதப் பகுதியோ, கருத்தரங்கப் பகுதியோ அல்ல. சுருக்கமாகவும் இருக்கலாம். காரண காரியத்துடன் எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதலாம். வெளியிடத் தக்கவைகளை அதனதன் அறிவாழத்தை அளவாகக் கொண்டு ஆசிரியர் குழு முடிவு செய்யும்.

—நிர்வாக ஆசிரியர்

'இன்றைய தமிழ் இலக்கியத்தின் தேவைகள்' என்று யாரோ எங்கோ பேசினார்கள் என ஒரு நண்பர் எனக்குத் தெரிவித்தார். தேவைகள் என்ன என்ன என்று பட்டியல் தீட்டப்பட்டதோ, நான் அறியேன். ஆயினும், இ. த. இ. தேவைகள் என்று நான் ஒரு பட்டியல் தயாரித்தேன். அதில் கண்டுள்ளது:

## சிந்தனைச் சிதறல்

1. தரமறிந்து படிக்கக் கூடிய நல்ல வாசகர்கள். இவர்கள் எண்ணிக்கை இப்போது வளர்ந்து வருகிறது. ஆனாலும், போதாது. இன்னும் ரொம்ப நிறைய வாசகர்கள் தேவை.

2. தரமான எழுத்துக்களை-சோதனைகளை, புது முயற்சிகளை—இன்னார் நம்மவர், ஜாதி, மதம் (நாஸ்திக, ஆஸ்திக வேறுபாடுகள்), அரசியல் நோக்கு முதலியவைகளை கவனியாது பிரசுரிக்கக்கூடிய பத்திரிகைகள்.

ஒவ்வொரு பத்திரிகையும் தனக்கெனத் தனித் தனி வரம்புகள் (லிமிட்டேஷன்ஸ்) வகுத்துக் கொண்டுள்ளது. அந்த எல்லைக்கு அப்பால் உள்ள நல்ல விஷயங்களை கவனிக்க மறுத்து வருகிறது; புறக்கணிக்கிறது. இதனால் புது முயற்சிகள், தரமான எழுத்துக்கள் வகையறு உரிய கவனிப்பைப் பெற முடியாமலே போகின்றன. இந்நிலை மாற வேண்டும்.

3. தாராள மனம் கொண்ட துணை ஆசிரியர்கள், ஆசிரியர் குழுவினர். (பத்திரிகைகளில் தான்.)

தமக்கு வேண்டியவர்—வேண்டாதவர், தமக்குப் பிடித்த கொள்கைகளை ஆதரிப்பவர்—ஆதரிக்காதவர், தம் முயற்சிகளை பாராட்டுகிறவர்—பாராட்டாதவர், தம்மை விசேஷமாக கவனிப்பவர்—கவனியாதவர் போன்ற எத்தனையோ விருப்பு வெறுப்புகளைக் கொண்டிருக்கிறார்கள் இந்த இனத்தினர். அவற்றை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, இலக்கியத் தரம், எழுத்தின் நயம் முதலியவைகளையே முக்கியமாகக் கருதும் மனோபாவம் பெற்றவர்கள் தேவை.

4. தாராள நோக்கு உடைய நல்ல பதிப்பகங்கள்.

எழுத்தாளர்களின் 'ஸ்டார் வேல்யு', விளம்பரத் தன்மை

போன்றவைகளையே முதன்மையாகக் கவனிக்கின்றன பதிப்பகங்கள். பிஸினஸ் நோக்கில் 50 சதவிகிதம் இப்படி இருந்தாலும், 50 சதவிகித ஆதரவாவது புது முயற்சிகள், திறமையான எழுத்தாளர்களின் படைப்புகள் முதலியவற்றுக்கு அளிக்கப்படவேண்டும். இப்படிச் செய்கிற Random House, Modern Library, Penguin ஸ்தாபனங்கள் மாதிரி, தமிழ் நாட்டிலும் பதிப்பகங்கள் தேவை.

5. பத்திரிகைகள், புத்தகங்கள் முதலியவற்றை விலை கொடுத்து வாங்கிப் படிக்கக் கூடிய ரசிகர்கள்.

சினிமாவுக்கு 'அஞ்சு, பத்து' செலவு செய்யத் தயாராக இருக்கிறவர்கள் கூட இந்த இனத்துக்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கத் தயாராக இல்லை. இது வருந்தத் தக்க நிலை. இது பெரும் மாற்றம் பெற வேண்டும்.

6. சக எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் படிக்கக் கூடிய எழுத்தாளர்கள்.

தங்கள் எழுத்தைத் தவிர, பிறர் எழுத்துக்களைப் படிக்க விரும்புவதில்லை அநேக எழுத்தாளர்கள். 'அவன் என்னத்தை எழுதிவிடப் போறான்!' என்ற அலட்சிய மனோபாவமும், நம்மைவிட எவன் அத்புதமாகவும் புதுசாகவும் எழுத முடியும்—இல்லை, எழுதுகிறான்?' என்ற 'இமாலயத் தன்னம்பிக்கையும்' கொண்டவர்களே எழுத்துலகத்தில் மிகுதியாக இருக்கிறார்கள். அவர்களுடைய மனப் பண்பில் மாறுதல் தேவை.

7. அப்படிப் படித்துவிட்டு, நல்ல படைப்புகளைக் காண்கிறபோது மன மகிழ்ச்சியோடு பாராட்டக்கூடிய நல்ல ரசிகப் பண்பு.

நம்ம எழுத்தாளர்களிடம் இது ரொம்பவும் குறைவு. தங்களுடைய எழுத்துக்களை மற்ற எழுத்தாளர்கள் படிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிற—ஆசைப்படுகிற—மனோபாவம்தான் இவர்களிடம் காணப்படுகிறது. அதில் மாற்றம் தேவை.

## வல்லிக்கண்ணன்

8. 'படிக்காத மேதை'கள் என்று கர்வப்பட விரும்பாத எழுத்தாள எளிமை.

பிறமொழி இலக்கியங்களை—முக்கியமாக ஆங்கில நூல்களை—படிக்காமல் இருப்பதே ஒரு பெருமை என்றும், தனித் தகுதி என்றும் நம்புகிறவர்கள் எழுத்துலகில் இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை குறைய வேண்டும்.

9. தமிழில் வெளிவருகிற பத்திரிகை எழுத்துக்கள், புத்தகங்கள் முதலியவைகளை படித்துப் பாராமலே தடலடி விமர்சனம் எழுதுகிற விமர்சகர்களின் போக்கில் மாறுதலும், நேர்மையான விமர்சகர்களின் எண்ணிக்கை உயர்வும்.

10 எங்கள் தமிழ் ரொம்ப உயர்ந்தது; அதில் எவ்வளவோ அற்புதங்கள் செய்து விட்டோம்; இதை எல்லாம் உலக முயற்சிகளோடும் சாதனைகளோடும் ஒப்பிடுவதும் அளக்க முனைவதும் மடத்தனம் என ஓங்கிப் பேசுகிற எழுத்தாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் ஞானோதயம்.

இன்னும் பலப்பல பலபல!

## 'சத்திரம் போல்' ஒன்று

எழுத்தாளர்களின் சுதந்திர சிந்தனைகளையும், தீவிரமான கருத்துக்களையும் வெளியிட இன்றையப் பத்திரிகைகள் இடம் தருவது இல்லை. சோதனைகளையும், புது எழுத்தாளர்களின் தரமான படைப்புகளையும் பிரசுரிக்க இன்று பத்திரிகை உலகில் வாய்ப்புகள் இல்லை. ஆகவே, ஒரு புது ஏற்பாடு தேவை. எவருடைய எண்ணங்களையும் ஒலிபரப்ப வசதி செய்கிற பொது மேடையாக அது இருக்க வேண்டும். தெளிவாகச் சொல்லப் போனால் 'சத்திரம் போல்' உதவக் கூடிய புதிய பத்திரிகை ஒன்று தேவை. சத்திரத்துக்கு யாரும் வரலாம். எப்படிப்பட்ட பேச்சுக்களையும் பேசலாம்; கருத்துக்களை அலசலாம். அதிதிகளின் அபிப்பிராயங்கள் சத்திரத்துக்காரரைப் பாதிக்காது; பொறுப்பாளி ஆக்காது. அதே மாதிரி, புதிய பத்திரிகையும் இருக்க வேண்டும். எழுதுகிறவர்கள் அவரவர் எண்ணங்களை தாராளமாக எடுத்துச் சொல்ல இடம் உண்டு. அவை பத்திரிகையின் அபிப்பிராயங்களாகவோ, ஆசிரியர்களின் கொள்கைகளாகவோ கருதப் படமாட்டா. இந்த அடிப்படையில் ஒரு பத்திரிகை தேவை என்று டில்லி நண்பர் ஒருவர் எனக்கு எழுதினர்.

அப்படி ஒரு ஏற்பாடு அவசியம் தேவை என்று தான் எனக்கும் தோன்றுகிறது.

ஆனல், இந்த விதமான புதிய, தீவிர, சோதனையில் ஈடுபடுவதற்குத் தேவையான துணிச்சலும் பொருள் பலமும் என்று ஒன்று கூடுமோ?— யாருக்குத் தெரியும்!

## இப்படியும் செய்யலாம்

உருது மொழி இலக்கியம் வளர்வதற்குப் பாடுபட்ட முப்பது, முப்பத்தைந்து எழுத்தாளர்கள் — கவிஞர்கள், சிறுகதை ஆசிரியர்கள், நாவலாசி

ரியர்கள், கட்டுரை எழுத்தாளர்கள் முதலியோர் — ஒரு இயக்கம்போல் செயலாற்றினர். அவர்கள் வெவ்வேறு ஊர்களில் வசித்த போதிலும், அடிக்கடி ஒரு இடத்தில் கூடிப் பேசி, தங்கள் படைப்புகளை வாசித்து, கருத்து பரிமாறிக் கொள்வது வழக்கம். முக்கிய சந்தர்ப்பங்களில், மக்கள் மத்தியில் சென்று தங்களுடைய கவிதைகள், கதைகள் வகையருவை படித்துக் காட்டுவார்கள்; நடித்தும் காட்டுவார்கள்.

ஐரோப்பிய நாடுகளிலும், ரஷியாவிலும், கவிஞர்கள் மக்கள் மத்தியில் நின்று தங்கள் கவிதைகளை பாடிக் காட்டும் வழக்கம் இருக்கிறது. தங்களுடைய கதைகளையும், நாவலின் பகுதிகளையும் வாசித்துக் காட்டும் ஆசிரியர்களும் உண்டு.

சார்லஸ் டிக்கன்ஸ் உலகம் முழுவதும் சுற்றி, முக்கிய இடங்களில் தன் நாவல்களை உணர்ச்சியோடு படித்துக் காட்டியதாக வரலாறு கூறுகிறது. அவனிடம் நடிப்புத் திறமையும் இருந்தது. அவனது நாவல்களில் எத்தனையோ விதம் விதமான பாத்திரங்கள் நடமாடுகிறார்களே; அதேபோல் அவனும் பலரகமான குரல்களில் பேசும் திறன் பெற்றிருந்தான். அவன் படித்துக் காட்டுகிற நிகழ்ச்சி கூட ஆற்றலோடு நடிக்கப்படும் நாடகம் போல் தான் இருக்கும் என்று ஒரு தகவல் அறிவிக்கிறது.

தமிழ் இலக்கியம் பரவுவதற்கு இத்தகைய முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். ○

---

*சிந்தனை சந்தேகத்தை வளர்க்கிறது. சந்தேகம் ஆராய்ச்சியை வளர்க்கிறது. ஆராய்ச்சி உண்மையை வளர்க்கிறது. உண்மையோ குருட்டு நம்பிக்கைகளை யெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விடுகிறது,* —இங்கர்சால்.

* * * *

*அறியாமையைத் தவிர வேறு இருள் இல்லை. அறிவைத் தவிர வேறு ஒளியில்லை.* —சாக்ரடீஸ்.

## கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்து! புகழ்பெற்ற அரிய நூல்கள்!

''வாசகர் வட்டம்''—புத்தகச் சங்கம் ஆண்டுதோறும் ஆறு சிறந்த நூல்களை வெளியிடுகிறது. ஆண்டுச் சந்தா (6 புத்தகங்களுக்கு தபாற் செலவு உள்பட) ரூ. 26. நூல்கள் தனியாகவும் கிடைக்கும்.

### சமீப வெளியீடுகள் :

| | | | | |
|---|---|---|---|---|
| சாயாவனம் | —சா. கந்தசாமி | ... | 5 | 25 |
| பூனைக்கண் | —ஸ்ரீமதி திரிவேணி | ... | 8 | 00 |
| மண்ணில் தெரியுது வானம் | —நா. சிதம்பர சுப்பிரமணியன் | ... | 7 | 50 |
| ஆத்மாவின் ராகங்கள் | —நா பார்த்தசாரதி | ... | 6 | 00 |
| சிறிது வெளிச்சம் | —கு. ப. ராஜகோபாலன் | ... | 7 | 00 |

### முன் வெளியீடுகள் :

| | | | | |
|---|---|---|---|---|
| அக்கரை இலக்கியம் | —இலங்கை, மலேசியா தொகுப்பு | ... | 11 | 00 |
| அறுசுவை | ஆறு குறுநாவல்கள் | ... | 7 | 00 |
| இதோ தேவன் | 'தேவன்' கட்டுரை, கதைகள் | ... | 5 | 00 |
| வ. ரா. வாசகம் | வ. ரா. | ... | 5 | 50 |
| மறுகதைகள் | அகில இந்திய சிறுகதைகள் | ... | 6 | 00 |
| பூமி எனும் கிரகம் | பூமியின் சரித்திரம் | ... | 5 | 00 |

### புத்தகப் பணிப் பிரிவு

புத்தக அன்பர்களுக்கு இலவசத் தொண்டு: உங்களுக்கு என்ன தமிழ் நூல் வேண்டுமாயினும் எம் ''புத்தகப் பணிப் பிரிவு''க்கு எழுதி வாங்கிக் கொள்ளலாம். இன்றே உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

—விவரங்களுக்கு—

வாசகர் வட்டம், 14, தணிகாசலம் செட்டி ரோடு,
சென்னை - 17

# மொழி பெயர்ப்பு

1883ல் பொஹீமியாவில் பிரேக் நகரத்தில் பிறந்த காஃப்கா 1924ல் காலமானார் நமது தலைமுறையின் அலங்கோலத்தைப் பற்றிய அவரது எழுத்துக்கள் ஒரு தனித்துவமான 'ஆகனி'யோடு யதார்த்தத்தை வெகு நேர்மையாகப் பிரதிபலித்தன. மார்க்ஸீய வாதிகளுக்கு அவரது அக உலகம் சற்று அதிக சிரமம் கொடுத்ததால், அவர்கள் கூசாமல் அவரை பிலிஸ்டைன் கோஷ்டியில் சேர்த்து விட்டார்கள். தமிழில் காஃப்காவின் கதைகள் குறைவாகவே வெளியாகியிருக்கின்றன. காஃப்காவின் சட்டாம்பிள்ளைகள் தாங்கள் தான் என்ற தோரணையில் நடந்துகொள்ளும் சிலரும், அவரது சிருஷ்டிகளை சித்தர்கள் மூடுமந்திரமாக வைத்திருக்கும் தேங்காய்ப்பால், மாங்காய்ப்பால். சங்கதியைப் போல அதை எட்டாத உயரத்தில் வைத்திருக்க முயற்சிக்கிறார்கள். ஓரளவு தமிழ் மரபை அனுசரித்து நான் மொழி பெயர்த்திருக்கும் இந்தக் கதை அவரது ஒப்பற்ற சிருஷ்டிகளுள் ஒன்று.

—மொழி பெயர்ப்பாளர்.

சமீப சில வருஷங்களாக பட்டினிக் கலைஞர்களுக்குக் காட்டப்பட்டு வந்த உற்சாகம் கணிசமாக விழுந்து போயிற்று. முன்பெல்லாம் ஒருவர் தம் சொந்தச் செலவில் அத்தகைய கண் காட்சிகளை ஏற்பாடு செய்யலாம். கண்காட்சி வெற்றியைக் குறித்தும் நம்பிக்கையாக இருக்கலாம். இப்போது அதெல்லாம் நடக்காது.

அது ஒரு காலம். அந்த நாட்களில் பூரா நகரமும் பட்டினிக் கலைஞன் மீது ஓர் ஈடுபாடு கொண்டிருக்கும். அவன் மீதுள்ள பற்று அவனது உபவாச நாட்கள் ஏற ஏற அதிகரித்துக் கொண்டே போகும். ஒவ்வொருவனும் பட்டினிக் கலைஞனை அன்றாடம் ஒரு முறையாவது சந்திக்க விரும்பினான். கடைசிக் கட்டங்களில் பின்னல் தட்டியிட்ட அவனது கூண்டுக்கு முன்பு ஒரு கூட்டம் வழக்கமான வாடிக்கைக்காரர்களைப் போல் உட்கார்ந்திருக்கும்.

சூரியன் காய்கின்ற தினங்களில் கலைஞனின் கூண்டு திறந்த வெளிக்குக் கொண்டு வரப்படும்; குழந்தைகளுக்கு

# பட்டினிக் கலைஞன்

அவனைக்காட்டும் உத்தேசத்துடன், வயதானவர்களுக்கோ அவன் ஒருவித்தைப் பொருள் தவிர வேறில்லை. அது அந்தக் காலத்தின் மெலிஸ் என்பதால் அவர்கள் அவனைக் காண வந்தார்கள்.

குழந்தைகளோ வாய் பிளந்தவாறு, ஒரு பத்திர உணர்ச்சியின் பொருட்டு ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு அவனை வெறித்துப் பார்ப்பார்கள்.

அவன் பரப்பிய வைக்கோலின் மீது, அமர்ந்திருப்பான். ஒரு பீடத்தில் உட்கார்ந்திருக்கும் லேசான மமதை கலந்த இகழ்ச்சியோடு, ஆள் சவம் மாதிரி வெளுத்திருக்க, இறுகப்பிடிக்கும் கருப்புத் துணிகளை அணிந்து கொண்டு, விலா எலும்புகள் துருத்திக் கொண்டு தெரிய, அவன் சில சமயங்களில் மரியாதையோடு தலையசைப்பான், நேர்ப் பார்வையாக, ஏறக்குறைய மூடிய கண்களோடு, எப்போதாவது, உதடுகளை ஈரமாக்கிக்கொள்ள ஒரு சிறிய டம்ளரிலிருந்து தண்ணீரை உறிஞ்சிக் கொள்வான்.

சும்மா வந்து போகும் பார்வையாளர்களைத் தவிர, பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையான கண்காணிப்பாளர்களும் வந்தார்கள். அவர்கள் வழக்கமாகக் கசாப்புத் தொழில் செய்பவர்கள். குறிப்பிடத் தகுந்த ஏதோ காரணத்திற்காகத்தான் கசாப்புக் கடைக்காரர்களே, கண்காணிப்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் மூவர் மூவராக வந்தார்கள். அவர்கள் வசம் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பு பட்டினிக் கலைஞனை இரவிலும் பகலிலும் கண்காணிப்பது. இல்லாவிட்டால் கள்ளத்தனமாக அவன் சாப்பிட்டு விடுவானாம்.

ஆனால் அதெல்லாம் ஒரு மாமூலே ஒழிய வேறில்லை. பொது ஜனங்களைத் திருப்தி செய்வதற்காக அந்த ஏற்பாடு, கண்காட்சி நிர்வாகிக்கு நன்றாகத் தெரியும்; எந்த சூழ்நிலையை முன்னிட்டும், நிர்பந்தத்தினாலும் கூட பட்டினிக் கலைஞன் உபவாச நாட்களில் எதையும் சாப்பிடமாட்டான் என்று. ஒரு கலைஞன் என்ற அவனது கௌரவம் அத்தகைய காரியத்தை அவன் செய்ய அனுமதியாது.

இதையெல்லாம் அங்கு வருகிற ஒவ்வொரு கண்காணிப்

## ஜெர்மன்: காஃப்கா

பாளனும் கிரகித்து விடுவதில்லை. சில சமயங்களில் தங்கள் கடமையை தட்டிக் கழிக்கும் கண்காணிப்பாளர்கள் வந்தார்கள். வேண்டுமென்றே அவர்கள் தொலைவான மூலையில் போய் அமர்ந்து சீட்டு விளையாடினார்கள். அவர்கள் நோக்கம் பட்டினிக் கலைஞன் ஏதாவது சிறு தீனி தின்று கொள்ளட்டுமே என்று அனுமதிப்பதுதான். அந்தக் கூண்டிற்குள் எங்கிருந்தோ அவனுக்கு ரகசியமாக சப்ளை செய்யப்படுகிறது என்று அவர்கள் நம்பினார்கள் போலும்.

பட்டினிக் கலைஞனுக்கு இத்தகைய பேர் வழிகளை விட வேதனை தரக்கூடியது வேறெதுவுமில்லை. அவர்கள் அவனை சொல் கடந்த சோகத்தில் ஆழ்த்தினார்கள். பட்டினி கிடப்பதை அவனுக்கு ஒரு பயங்கரமான கஷ்டமாக்கினார்கள். சில வேளைகளில் இத்தகைய கண்காணிப்பாளர்கள் வரும்போது தன் பலவீனத்தை வெல்வதற்காக அவன் பாடுவான். எவ்வளவு சக்தி உண்டோ அவ்வளவு நேரம். மக்களுக்கு அவர்களுடைய சந்தேகங்கள் எல்லாம் எவ்வளவு அநீதியானவை என்று காட்டுவதற்காக. அதிலும் எந்த பிரயோஜனமும் விளைந்து விடவில்லை. பாடிக்கொண்டே சாப்பிடக் கூடிய ஒரு புத்திசாலித்தனம் அவனுக்கு இருப்பதாக அவர்கள் ஆச்சரியப்படுவார்கள்.

சில கண்காணிப்பாளர்கள் உண்டு. கூண்டிற்கு வெகு அருகாமையில் அமர்ந்தவாறு, எக்ஸிபிஷன் ஹாலின் இருண்ட வெளிச்சத்தில் திருப்தியுறாமல், நிர்வாகி வழங்குகிற டார்ச்சு விளக்குகளை அவன் மீது சுழற்றிக் கொண்டிருப்பார்கள். அவர்களை கலைஞனுக்கு நிரம்பப் பிடிக்கும். அந்த கண்ணைக் கூசும் வெளிச்சம் கூட ஒரு பொருட்டாகத் தெரியாது.

தூக்கம் என்பது எவ்வகையிலும் சாத்தியமில்லை. ஆயினும் லேசான கண் உறக்கத்தோடு அவன் அமர்ந்திருப்பான். மின்னும் வெளிச்சத்திலும் சரி; ஹாலில் சந்தடியும் கூட்டமும் கட்டுங்கடங்காது

**தமிழில்: வையவன்**

பெருகினாலும் சரி, அப்படி ஒரு சாதனை.

மேற்படி கண்காணிப்பாளர்கள் வந்துவிட்டால் அவர்களோடு துளிக்கூட உறங்காது இரவைக் கழிக்க மிகவும் விரும்பினான். அவர்களோடு ஜோக் அடிப்பான். தனது நாடோடி அலைச்சல்களின் கதையைச் சொல்லுவான். பதிலுக்கு அவர்கள் கதைகளை காது கொடுத்துக் கேட்பான், எதெல்லாம் விழித்திருப்பதற்கு உதவுமோ, அதையெல்லாம் செய்வான்.

மீண்டும் மீண்டும் அவர்களுக்குத் தனது கூண்டில் தின் பண்டங்கள் எதுவுமில்லையென்றும், அவர்களில் எவராலும் முடியாத அளவு அவன் பட்டினி இருந்து கொண்டிருக்கிறான் என்பதையும் அவை உணர்த்திக் கொண்டிருக்க உதவின.

காலை தோன்றியதும் அவனது மிக மகிழ்ச்சியான தருணம் வரும். தனது சொந்தச் செலவில் பட்டினிக் கலைஞன் ஒரு திண்டியான சிற்றுண்டியை அந்தக் கண்காணிப்பாளர்களுக்கு வரவழைப்பான். ஜுருராகக் கண் விழித்த ஓர் இரவு நேரத்திற்குப் பின், ஆரோக்கியமான மனிதர்கள் சாப்பாட்டின் மீது எத்தனை பசியோடு பாய்வார்களோ, அப்படி அவர்கள் பாய்வதை மிடுக்கோடு கவனிப்பான்.

இதில் கூட அவர்களைக் கையில் போட்டுக் கொள்ளும் சூது இருப்பதாகக் கருதும் சந்தேகப் பிராணிகளும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் 'நீங்கள் காலையில் எந்தச் சிற்றுண்டியுமின்றி இரவெல்லாம் விழித்திருந்து கண்காணிக்கத் தயாரா என்று கேட்கப்பட்ட போது அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. இருப்பினும் அவர்கள் சந்தேகப்பட்டுக் கொண்டே இருந்தார்கள்.

ஆனால் அதெல்லாம் பட்டினி இருப்பதைக் குறித்து எழுகின்ற, தவிர்க்க முடியாத சில்லறைச் சந்தேகங்கள். உள்ளபடியே இரவிலும் பகலிலும் பட்டினிக் கலைஞன் பக்கத்தில் 'வாட்ச்மேன்' மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கும் ஸ்திதி எவருக்கும் இல்லை. தான் பார்த்தவரையில் பட்டினியானது இடைவெளியின்றி பூரணமாக ஓடிக்கொண்டிருக்கிறது என்று யாரும் நம்ப முடியாது தான்.

ஆனால் அதை கலைஞன் மட்டும் தான் அறிவான். காரணம் அவன் தான் பட்டினி கிடப்பவன். அதே சமயத்தில் தன் உபவாசத்தைக் குறித்து முற்றிலும் திருப்தியுற்ற ஒரே பார்வையாளன்.

அவன் முற்றிலும் திருப்தி யடைந்து விடவில்லை. அதற்கு வேறு காரணம். சிலரால் அவனைக் காண்பதற்கே அருவறுப்பு ஏற்படும் அளவு அவன் மெலிந்திருப்பதற்கு பட்டினி மட்டுமே காரண மல்ல. தன் மீதுள்ள அதிருப்தியினாலும் அவன் அவ்வளவு இளைத்திருக்கலாம்,

ஏனெனில் அவன் மட்டுமே, அந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்தவர்கள் கூட இல்லை, அவன் மட்டுமே அறிவான்; பட்டினி கிடப்பது எவ்வளவு சுலபமானதென்று !

உலகத்திலேயே அதுதான் சுலபமான விஷயம். அதை ஒரு ரகசியமாகக் கூட அவன் வைத்திருக்கவில்லை. ஆயினும் அவன் கூற்றை நம்பத் தான் ஆள் கிடைக்கவில்லை. அவன் சொல்வதைக் கேட்டு மக்கள் அவன் மிகவும் தன்னடக்கம் பாராட்டுவதாகக் கூறினார்கள்.

பெரும்பாலும் அவனை ஒரு விளம்பர வேட்டைக்காரன் என்றோ, முழுக்க முழுக்க ஒரு ஃபிராடு என்றோ தான் குற்றச் சாட்டுகள் வரும். அவனுக்கு பட்டினி மிகவும் சுலபம்; ஏனென்றால் அதை எப்படிச் சுலபமாக்கிக் கொள்வது என்று அவனறிவான் என்று சில அரட்டைப் பேர்வழிகள் பேசிக் கொள்வார்கள்.

இதையெல்லாம் வேறு வழியின்றி அவன் தாங்கிக் கொண்டான். வருஷ ஓட்டத்தில் அதற்குப் பழக்கப்பட்டும் போனான். இருப்பினும் ஒரு நிரந்தரமான அதிருப்தி அவனுக்குள்ளே பிராண்டிக் கொண்டிருந்தது.

தனது பட்டினிக் காலம் முடிக்கப் பெறும் எந்த வேளையிலும் அவன் தன்னிச்சையாகக் கூண்டை விட்டு வெளியே போனது கிடையாது. நிர்வாகி அந்தக் காலக் கெடுவை அதிக பட்சம் நாற்பது நாட்களுக்கு மேல் வைப்பதில்லை. அதற்கு மேல் கலைஞன் பட்டினி கிடக்க அனுமதிக்கப்பட மாட்டான், பிரசித்தி பெற்ற நகரங்களில் கூட அதற்கு மேல் காலகெடு இராது. அதற்கு கன பொருத்தமான காரணம் உண்டு. அனுபவம் கற்றுத் தந்த பாடம் அது.

படிப்படியாக அதிகரித்துக் கொண்டு செல்லும் விளம்பரம்; ஒரு கிளைமாக்ஸுக்குக் கொண்டு போகப்படும் நகரத்தின் உற்சாகம் இதெல்லாம் நாற்பது நாட்களைத் தாண்டினால் நீடிக்காது. போஷகர்களின் தொகையும் போகப் போக குறையும், பொது மக்களின் உற்சாகமும் குன்றி விடும். ஒரு நகரத்திற்கு இன்னொரு நகரம், ஒரு நாட்டிற்கு இன்னொரு நாடு நாட் கணக்

கில் சிறு சிறு வித்தியாச மிருப்பினும், இந்த நாற்பது தான் உச்ச பட்சத் தொகை.

அந்த நாற்பதாவது நாளில் மலர்கள் குவிந்த அவனது கூண்டு திறக்கப்படும். ஆர வாரமான ரசிகர்கள் ஹாலில் நிரம்பி இருப்பார்கள், ஒரு மிலிட்டரி பாண்டு முழங்கும், இரண்டு டாக்டர் கூண்டுக் குள் நுழைந்து பட்டினிக் கலைஞனை எடை போடுவார் கள். அவர்கள் முடிவுகள் ஹாலுக்கு ஒரு மெகஃபோன் மூலம் அறிவிக்கப்படும்.

இறுதியாக இரண்டு இளம் பெண்கள் வருவார்கள். தங் களைத் தவிர வேறு யாரும் இதற்கு தேர்ந்தெடுக்கப்பட வில்லை என்ற மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டே வருவார் கள். அவர்கள் வேலை பட்டி னிக் கலைஞனை கூண்டி லிருந்து சற்றுத் தொலைவில் அமைக்கப் பட்டிருந்த சிறு மேஜைக்கு அழைத்துச் செல் வது. அங்கு அசக்தியான பேர்வழிகளுக்குரிய, எச்ச ரிக்கையோடு தேர்ந்தெடுக்கப் பட்ட உணவு காத்திருக்கும்.

இந்தக் கட்டத்தில் தான் பட்டினிக் கலைஞன் எப்போ தும் கலகம் செய்வான். அந்தப் பெண்கள் அவனைக் கைகொடு த்துத் தூக்குவதற்காக நீட்டும் உதவிக்கரங்கள் தன் எலும்புக் கைகளை ஒப்புவிக்கும் அளவு, அவன் தயார்தான். ஆனால் எழுந்து நிற்க விரும்ப மாட் டான்.

ஏன் இப்போது முடிக்க வேண்டும்? நாற்பதே நாட் களுக்குள்! அவனால் இன்னும் பட்டினியைத் தாங்க முடியும். கணக்கிட முடியாத காலத் திற்கு! ஏன் இப்போதே முடித் துக் கொள்ளவேண்டும்? பட் டினி அதன் உச்ச கட்டச் சிறப்பிற்கு வரும்போது— இல்லை யில்லை இன்னும் அந்த உச்சமான பூரணத்துவத்தை எய்தவில்லை—ஏன் இவர்கள் அவன் பட்டினி இருந்து கொண்டே இருக்கும் கௌர வத்தை அவனிடமிருந்து கொள்ளை யடிக்கிறார்கள்?

எல்லாக் காலத்திலும் சிறப் பான மாபெரும் பட்டினிக் கலைஞனாக அவன்—ஏற்கெ னவே அப்படித்தான் என்றா லும்—தன் எல்லைகளையே தான் வென்று காட்டுவதை ஏன் இவர்கள் தடுக்கிறார்கள்? ஏன், இந்தக் கூட்டம்; அவன் சாதனையைக் கண்டு அதிசயிக்கிற மாதிரி நடிக்கிற கூட்டம், அவன் பால் இவ் வளவு குறைவான பொறுமை யைக் காட்டுகிறது? அவனால் பட்டினியை சர்வசாதாரண மாகச் சகித்திருக்க முடிவ தைப்போல், இவர்கள் ஏன் அவனைப் பொறுமையாகச் சகித்துக் கொள்வதில்லை?

அவன் களைத்துப்போய்க் காணப்படுவான். வைக்கோல்

ஆசனம் அவனுக்குச் சௌ கரியமாக இருக்கும். இப்போது அவனை எழுந்திருக்கச் சொல்கிறார்கள்! சாப்பிடச் சொல்கிறார்கள், சாப்பாட்டு நினைவே அவனுக்குத் தாங்க முடியாத குமட்டலைக் கொடுத்தது.

தன்னோடு கூட வரும் பெண்களுக்குச் காட்டவேண்டிய கண்ணியத்தை உத்தேசித்து அந்தக் குமட்டலை சிரமத்தோடு கட்டுப்படுத்திக் கொள்வான். அந்தப் பெண்களின் கண்களைக் கவனிப்பான். வெளித் தோற்றத்திற்கு அது சிநேக பாவமாக இருந்தாலும் நிஜத்தில் அது குரூரமாகக் காணப்படும். களைப்போடு தலையசைப்பான். மெலிந்த கழுத்தினுல் அந்தத் தலையசைவைத் தாங்க முடியாத நோவு ஏற்படும்.

இப்போது இந்நேரத்தில் வழக்கமாக நடக்கும் அந்தக் காரியம் நிகழும். நிர்வாகி வருவான். மௌனமாக— சங்கீத வெள்ளம் பேச்சை அசாத்தியமாக்கி விடும்— மௌனமாக கலைஞனின் மீது தன் கரங்களை உயர்த்தி வைப்பான்; வானுலகையே இந்த வைக்கோல் புல்லின் மீது விழுந்திருக்கும் தியாகியை வந்து காணச் சொல்லி வரவேற்பு விடுவதைப்போல (கலைஞன் தியாகிதான். முற்றிலும் வித்தியாசமான கோணத்தில்)

பின்பு அவனது மெலிந்த இடையைப் பற்றுவான். எவ்வளவு நுட்பமான வஸ்துவை அவன் கையாளுகிருன் என்று பகட்டிக் கொள்வதற்காக, ஒரு மிகைப்பாடான ஜாக்கிரதையோடு அவன் பற்றுவான். பிறகு கபடமாகக் கலைஞனைக் கொஞ்சம் நடுக்குற வைத்து, கால்களையும் உடம்பையும் லொட லொட வென்று ஆட்டிக் காட்டி பெண்கள் பக்கமாக அவனைத் திருப்புவான்.

இந்நேரம் அந்தப் பெண்கள், அநேகமாக சவம் மாதிரி வெளுத்திருப்பார்கள். இதற்கு மேல் கலைஞன் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்க மாட்டான். அவன் தலை மார்பின் மீது தொடங்கும்; ஏதோ எதிர்பாரா விதமாக உருண்டோடி வந்து அந்தத் தலை அங்கு ஒட்டிக் கொண்ட மாதிரி. அவனது முண்டம் 'போரல்' கூடு மாதிரி இருக்கும். முழங்கால்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கும், பாதங்களோ நிஜமற்றவை மாதிரியும், நிஜமான ஒன்றைத் தேடுவது மாதிரியும் தரையைச் சுரண்டும்.

அவன் கனமாக இல்லாத போதிலும், தன் மேல் விழுந்திருக்கும் அந்த லேசான பாரத்தைத் தாங்க முடியாத

வள் போல் அவள் திணறிய படியே உதவியை எதிர்பார்ப்பாள். இந்த கௌரவம் இப்படிப் பட்டது என்று அவள் கொஞ்சமும் எதிர் பார்க்கவில்லை. கலைஞனிடமிருந்து முடிந்த அளவு ஒதுங்கியிருப்பதற்காக கழுத்தை எட்டச் சாய்த்துக் கொள்வாள். பயனில்லை. அவளது அதிருஷ்டசாலியான சகாவோ அவளுக்கு எந்த உதவியும் செய்யாமல் கலைஞனுடைய கையை மட்டும் தன் நடு நடுங்கும் கரத்தால் சுமந்து கொண்டிருப்பாள். ரசிகர்களின் மகிழ்ச்சி ஆரவாரத்தோடு அவளது கண்ணீரும் சேர்ந்து கொள்கிறது.

முன் கூட்டியே தயாராகக் காத்திருக்கும் இன்னொருவரை நெருங்கித் தன் வேலையை ஒப்புவிக்கிருள். பிறகு உணவு வருகிறது. அதில் கொஞ்சத்தை எடுத்து அரை நினைவோடு இருக்கும் பட்டினிக் கலைஞனுக்கு எக்ஸிபிஷன் அமைப்பாளன் வலுக் கட்டாயமாகச் செலுத்துகிருன். அவனது மயக்க நிலையை கூட்டத்தினர் கவனிக்கவொட்டாமல் செய்ய அவன் ஏகமாகச் சளசளக்கிருன்.

பிறகு ஜனங்களுக்கு ஒரு 'டோஸ்ட்' கூறப்படுகிறது. அது பட்டினிக் கலைஞனுல் அமைப்பாளன் மூலம் கிசுகிசுவென்று சொல்லப்பட்டதைப் போல, காது கொடுத்துக் கேட்டு விட்டு அதை அறிவிப்பதைப் போல, அவன் நடிக்கிருன்.

ஆர்ச்செஸ்ட்ரா முரசுகளை முழக்கி ஒரு மாபெரும் கிளைமாக்ஸைக் கொண்டு வருகிறது. கூட்டம் கலைகிறது. எதைப் பார்த்தாே அதில் அதிருப்தியடையும் உரிமை அங்கு வந்து கூடுபவர்களுக்கு இல்லாமற் போகிறது. எல்லாருக்கும் பரம திருப்திதான். பட்டினிக் கலைஞனைத் தவிர,

எப்போதும் அவன் தான் அதிருப்தியாளன்.

இவ்வாறு இது வருஷக் கணக்காக நடந்து கொண்டிருந்தது. சிறிது உடலைத் தேற்றிக் கொள்வதற்கான குறுகிய இடைக் காலங்களோடு நடந்து வந்தது. கலைஞன் மகத்தான வெற்றியோடு வாழ்ந்தான். உலகத்தால் கௌரவிக்கப்பட்டான்.

ஆயினும் ஓர் இருண்ட துயர் அவனுள் நிறைந்திருந்தது. அதை எவரும் புரிந்து கொள்ளாததால் இன்னும் அது ஆழமாயிற்று.

உண்மையில் ஒருவன் அவனுக்கு என்ன ஆறுதல் தர முடியும்? அவன் எதை விரும்பினுன்? சமயங்களில் ஒரு நல்ல சுபாவமுள்ள ஆசாமி தோன்றி அவனுக்காகச் சற்று

வருந்திவிட்டு, அவனது துயருக்குக் காரணம் சாப்பாடு இல்லாததுதான் என்று விளக்க முயற்சிப்பான். பட்டினிக் காலம் நீளும் நேரங்களில் அது சகஜமானது.

அப்போது கலைஞன் கோபத்தினால் கொதித்தெழுந்து பதில் சொல்லுவான். ஒரு வன விலங்கைப்போல் கூண்டுக் கம்பிகளை ஆட்டியசைத்துச் சுற்றியிருப்பவர்களை நடு நடுங்க வைப்பான்.

அத்தகைய உணர்ச்சிக் கொந்தளிப்பிற்கு, காட்சி அமைப்பாளன் தான் மிகவும் பிரியமாகக் கையாளுகிற ஒரு விசேஷ தண்டனை முறையை வைத்திருந்தான். முதலில் கலைஞனின் சார்பாக கூடியிருக்கும் கூட்டத்திடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வான்.

நன்கு சாப்பிடும் ஆரோக்கியமான மனிதர்களுக்கு, பட்டினியிருப்பது எவ்வளவு எரிச்சலைத் தரும் என்று லேசில் புரியாது என்றும், அப்படிப் புரிந்து கொண்டால்தான் அந்த நடவடிக்கையை மன்னிக்க முடியும் என்றும் அடுத்து அவர்களுக்குக் கூறுவான்.

பின்பு தர்க்க ரீதியாக கலைஞனுடைய இன்னும் பட்டினியிருக்க முடியும் என்ற சவாலை விளக்குவான். அந்த பெருந்தன்மையான முயற்சியையும், பொருட்படுத்த வேண்டிய அவனுடைய சவால் கூற்றையும், கலைஞனின் மகத்தான சுயநல மறுப்பையும் போற்றிப் புகழுவான்.

அடுத்த கணமே அவன், கலைஞனின் சவாலை மௌனமாக முறியடிக்கும் ஒரு முயற்சியில் ஈடுபடுவான். நாற்பது நாளைய உபவாசத்தில் கலைஞன் சாகும் தறுவாயில் இருப்பதுபோல் காட்சியளிக்கும், பழைய புகைப்படங்களை எல்லோருக்கும் காட்டுவான். அவைவிலைக்கும் கிடைத்தன.

கலைஞனால், நிர்வாகி உண்மையை அப்படிப் புரட்டிக் காட்டும் விதத்தை சிறிதுகூட சகிக்க முடியாது. நாற்பதாவது நாளில் பட்டினியை முடித்துக்கொள்ளுகின்ற அதிருப்தியை அதற்கு முற்றிலும் மாறான காரணமாக அவன் திரித்துக் காட்டும் முயற்சி அது.

மீண்டும் இந்த புரியாத்தனம். சர்வதேச ரீதியான புரியாத்தனம். இது வெல்லற்கரியது.

நிர்வாகி கூட்டத்தினருக்கு எதையாவது விளக்கும்போது கலைஞன் ஆவலோடு கூண்டின் கம்பிகளுக்கு அருகில் எழுந்து நின்று அவன் கூறுவதைக் கவனிப்பான். புகைப்படங்கள் பார்வைக்குத் தரப்படும் போதோ, கம்பிகளைப்

பிடித்திருக்கும் கரங்களைத் தளரவிட்டு வைக்கோலில் புதைந்து கொள்வான். இன்னொரு தடவை மறு நிச்சயம் செய்யப்பட்ட ஜனங்கள் தொந்தரவின்றி அவனைப் பார்ப்பார்கள்.

இத்தகைய காட்சிகளைக் கண்டு களித்தவர்கள் சில வருஷங்கள் கழித்து நினைத்துப் பார்க்கும்போது அவனது கொந்தளிப்பிற்கு என்ன காரணம் என்று உணர முடியாது தவித்தார்கள். ஏனெனில் அதன் முன்பு ஒரு மாறுதல் நிகழ்ந்துவிட்டது.

ஒருக்கால் அந்த மாறுதலுக்கு ஆழ்ந்த காரணங்கள் இருக்கலாம். யாருக்கு அதையெல்லாம் துருவிக் கண்டு பிடிப்பதில் உற்சாகம் ?

ஒருநாள் பட்டினிக் கலைஞன், தமாஷ் பார்க்கின்ற கூட்டம், அவனைக் கை விட்டு விட்டு வேறு அதிசயங்களை நாடிப்போய் விட்டதை அறிந்தான்.

கண் காட்சி நிர்வாகி, பழைய ஊக்குவிப்பு அங்கிங்காவது தென்படுகிறதா என்று காண, ஐரோப்பாவின் பாதி தூரத்தை ஒருமுறை மீண்டும் சுற்றிப் பார்த்தான். எல்லாம் வீண், ஏதோ ஒரு ரகசிய ஒப்பந்தம் நேர்ந்த மாதிரி, பட்டினிக் காட்சிகளைப் பற்றிய பக்கா வெறுப்பு அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் பரவியிருந்தது.

வாஸ்தவத்தில் இந்த திரஸ்காரம் திடீரென்று ஏற்பட்டு விடவில்லை. வெற்றியின் போதையில் கலைஞன் கவனிக்கத் தவறிய, மேற்பார்த்து வெல்லத்தவறிய எச்சரிக்கைக் குறி, இப்போது நினைக்கையில், அவ்வப்போது தோன்றியது ஞாபகம் வந்தது. ஆனால் தற்சமயம் காலம் கடந்து விட்டது. ஒன்றும் செய்ய முடியாது.

பட்டினிக் கலைக்கான காலம் ஒன்று மறுபடியும் ஒருதினம் வரும். அது நிச்சயம். ஆனால் அந்த தூர நம்பிக்கை மட்டுமே அவனுக்கு ஆறுதலூட்டி விடவில்லை. கலைஞன் இப்போது என்ன செய்வான்?

ஆயிரக் கணக்கானவர்களால் கொண்டாடப் பெற்ற அவன், சின்னஞ் சிறிய வருஷாந்திர எக்ஸிபிஷன் கூடாரங்களில் ஒன்றில் போய் ஒதுங்க முடியாது. வேறு தொழில் பார்க்கவோ அவனுக்கு வயதாய்விட்டது. மேலும் பட்டினிக் கலைக்கு அவன் தன்னை மூர்க்கமாக அர்ப்பணித்துக் கொண்டிருந்தான். அது முக்கியம்.

ஆகையால் தனது காட்சியமைப்பாளனை—ஒரு பிரமாதமான தொழிலின் கூட்டாளியை—வேலையிலிருந்து நீக்கி

னுன். ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி பார்த்து சம்பளத் திற்கு அமர்ந்து கொண்டான். அவர்களோடுசெய்துகொண்ட ஒப்பந்த ஷரத்துக்களைக் கூட, தன் உணர்ச்சிகள் பங்கமடையக் கூடாதே என்பதற்காக அவன் சரிவரப் படித்துப் பார்க்கவில்லை.

ஒருவருக் கொருவர் மாறு பட்ட, இருப்பினும் ஒன்ருகச் சேர்ந்து தொழில் புரிகின்ற மனிதர்களும், மிருகங்களும் யந்திர சாதனங்களும் நிரம்பிய சர்க்கஸில் இன்னெரு கவர்ச்சிக்குத் தாராளமாக இடம் இருந்தது.

பட்டினிக் கலைஞனுக்குக் கூட இடம் இருந்தது. அவன் சாதனையைக் குறித்து வரம்பு மீறி சவால் விடாத வரையில் அங்கே எந்தப் பாதகமும் இல்லை.

ஆனுல் தற்சமயம் கலைஞன் மட்டுமல்ல; அவனது மிகப் பழைய, பிரசித்தியான அவனது பேரும் இந்த விவகாரத்தில் ஈடுபட்டிருக்கிறது. வயது முதிர்ச்சியிஞல் எவ்விதத்திலும் வீழ்ச்சி பெற முடியாத, விசேஷத் தன்மை பொருந்திய இந்தக் கலையை உத்தேசித்து எண்ணிப்பார்த்தால். முதுமை காரணமாக ஒரு சர்க்கஸில் நாலோடு நாராயணுவாக ஓர் இடத்தை அவன் பிடித்துக் கொண்டது — அதுவும் அவனது சக்தி உச்ச கட்டமாக மேலோங்கி யிருக்கும்போது— சரியானதா என்று சொல்ல முடியவில்லை.

கலைஞன் எப்போதும் போல எவ்வளவு சிறப்பாகப் பட்டினியிருக்க முடியுமோ அவ்வளவு சிறப்பாக இருப்பது குறித்து உறுதி தந்தான். அது நம்பகமான வாக்குதான். ஒரு சலுகை மாதிரி திடீரென்று அவனை அவன் வழியில் போக அனுமதித்துவிட்டால், முதல் தடவையாக அவன் உலகத்தை அவன் மாபெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடுவான்.

ஆனுல் காலப் போக்கு இப்போது பழைய மாதிரி இல்லை. அவன் சாதனைகளை எல்லாரும் மறந்து போனுர்கள். தெரிந்தவர்கள் சும்மா ஒரு புன்னகை பூப்பதோடு சரி.

கலைஞன் என்ன நடக்கிறது என்பதை நன்கு கிரகித்துக் கொண்டான். அவனது கூண்டு சர்க்கஸின் மத்தியில் விசேஷக் காட்சியாக வைக்கப்படாது. மிருகங்களின் லாயத்திற்கு அருகாமையில் கொண்டு போகப்பட்டதைக் குறித்து அவன் ஆச்சரியப் படவில்லை.

கூண்டுக்கு மேலே பளிச் சென்ற வர்ணங்களில் எழுதிய பானர் ஒன்று உள்ளே இருப்பது என்ன வென்று பறைசாற்றியது.

சர்க்கஸ் காட்சிகளில் இடை வேளைகளின் போது ஜனத்திரள் லாயங்களில் இருக்கும். மிருகங்களை வேடிக்கைபார்க்க வந்தது. அப்படி வருகையில் கலைஞனின் கூண்டை கூட்டம் தாண்டிச் செல்வது தவிர்க்க முடியாத விஷயமாயிற்று. சற்று நிற்க வேண்டியும் வந்தது. அப்போது முன்னால் நிற்கிற கூட்டம் ஏன் தாமதிக்கிறதென்று புரியாமல், ஆர்வத்தின் காரணமாக, பின்னாலிருப்பவர்கள் மோதித் தள்ளுவார்கள். அப்படித் தள்ளாமலிருந்தால் ஒரு வேளை, நிற்கிறவர்கள் இன்னும் கொஞ்ச நேரம் தாமதித்திருப்பார்கள். இன்னும் சாவகாசமாக அவனைப்பார்த்திருப்பார்கள்.

அவர்கள் வரவை, அதுதான் அவன் ஜீவன் ஆகையால், பொறுமையின்றி எதிர்பார்த்து நிற்கும் கலைஞன், பின்னால் அதைக் குறித்து அஞ்சும் காரணம் இப்போது விளங்கும்.

முதலில் அவன் ஆவலோடு இடை வேளைக்காகக் காத்திருப்பான். கூட்டம் வரும் ஓசையை மகிழ்ச்சியோடு எதிர்நோக்குவான். போகப் போக, வெகு சீக்கிரமே, உண்மை புலனாயிற்று. அடிக்கடி ஊர்ஜிதப்பட்டது.

அவர்கள் மிருக லாயத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள்; அவனை நாடியல்ல.

அனுபவம், தனக்குத்தானே அவன் கற்பித்துக் கொண்ட சுய ஏமாற்றை முறியடித்தது. அவர்கள் அவனை நாடி வரவில்லை.

தொலைவில் அந்தக் கூட்டம் வரும்வரை அவனுக்கு உவப்பாக இருந்தது. கூண்டை நெருங்கியதும் அவர்கள் போடும் இரைச்சலென்ற சமுத்திரத்தில் அவன் மூழ்கிப் போனான்; அதில் எத்தனை சாபங்கள்! கலைஞனின் கூண்டைப் பார்க்கச் சாவகாசமாக வாருங்கள் என்று முன்னணியில் நின்று அவனைப் பார்ப்பவர்களை வையும் சாபங்கள்.

கலைஞனைக் குறித்த சரியான உணர்க்கைக் குறைவினால் மட்டுமே அவர்கள் அப்படி நெருக்கித் தள்ளினார்கள் என்று சொல்ல முடியாது.

ஒரு கும்பலுக்கே உரிய அசட்டை, அகாரணமான கிளர்ச்சி இதனாலும் அப்படி நடத்தினர். இதனால் அவன் அதிருப்தி அதிகமாயிற்று.

கூட்டம் வழிந்து போன பிற்பாடு, ஒன்றியாக வருகிறவர்களும் உண்டு. அவர்களது சாவகாசத்திற்கு எந்தத் தடையுமில்லை. ஆயினும் அவர்களுக்கு அடுத்த காட்சி ஆரம்பிக்கு முன் போகும் துடிப்பு.

கலைஞனுக்கு எப்போதாவது அதிருஷ்டம் அடிக்கும். குடும்பத்துக்கு தந்தை ஒருவர் தன் குழந்தைகளோடு வருவார். அவனைச் சுட்டிக் காட்டி அவன் சங்கதி என்னவென்று குழந்தைகளுக்கு அவர் விஸ்தாரமாக விளக்குவார். அந்தக் காலங்களிலே, இதே மாதிரி, ஆனால் ஈடு இணையற்ற அளவு பிரமாதமாக நடந்த பட்டினிக் கண்காட்சிகளைத் தான் பார்வையிட்டிருப்பதை அவர்களுக்குத் தெரிவிப்பார்.

பள்ளியிலும் சரி, வாழ்க்கையிலும் சரி, அந்தக் குழந்தைகளுக்குப் போதுமான பக்குவம் கிட்டியிராது. அவர்கள் ஒன்றும் விளங்காமல் சும்மா அவனை வெறித்துப் பார்ப்பார்கள்.

பட்டினிக் கலையைப் பற்றி அவர்களுக்கு என்ன புரியப் போகிறது? எனினும் ஊன்றிக் கவனிக்கும் அந்த விழிகளின் பிரகாசம் நம்பிக்கை நிறைந்த புதுயுகம் ஒன்று வரத்தான் போகிறது என்று கலைஞனுக்கு உணர்த்தும்.

அம்மாதிரி வேளைகளில் கலைஞன், தன் கூண்டு மட்டும் லாயங்களுக்கு அருகாமையில் இல்லையென்றால் நிலைமை எவ்வளவோ மேலாக இருக்கும் என்று சமாதானமடைவான்.

நிற்க, மிருக லாயங்களிலிருந்து துர்நாற்றம் கிளம்பியது. இரவில் அவை அமைதியின்றித் தவித்தன அவற்றுக்கு இரை போடுவதற்காக மாமிசத் துண்டங்களைத் தூக்கிச் சென்றார்கள். சாப்பாட்டு வேளையில் அவை காது செவிடாகும்படி கூக்குரலிட்டன.

இவையெல்லாம் அவனை மிகவும் மனம் நோக வைத்தன. நிரந்தரமான சோகத்தில் ஆழ்த்தின. ஆயினும் அவனது உணர்ச்சிகளை யாரும் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. அவனும் நிர்வாகத்தினரிடம் அதைக் குறித்து புகார் செய்ய முயலவில்லை.

பார்க்கப் போனால் மிருகங்களுக்கு ஒருவிதத்தில் அவன் கடமைப்பட்டிருந்தான். அவைகள் தாம் அவனுக்கு பார்வையாளர்களை வரவழைக்கின்றன. அவர்களிலே அவனுக்கான ரசிகர்களும் ஓரிருவர் இருந்தனர்.

புகாரின் மூலம் தான் ஜீவித்திருப்பதை அவன் உணர்த்தினால், எங்கே போய் அவனைக் கிடத்துவார்களோ, அதை யார் சொல்ல முடியும்? சரியாகப் பார்க்கப் போனால் மிருகலாயங்களுக்கும் சர்க்கஸின் உணவுப் பொருள் வைத்திருக்கும் ஸ்டோர் ரூமுக்கும் போகும் வழியில் ஓர் இடைஞ்சலாகவே கருதப்படுவான். உள்ளபடியே அவன் ஒரு சிறிய இடைஞ்சல் தான்.

நாளாவட்டத்தில் அந்த இடைஞ்சலின் உறுத்தும் சக்தி பொருட்படுத்த முடியாத அளவு குன்றிப் போயிற்று.

நவீன யுகத்தில் பட்டினிக் கலைஞனை ஒவ்வொருவரும் பார்வையிட வேண்டும் என்று மக்களைக் கட்டாயப்படுத்தவா முடியும்? அது அவர்கள் இஷ்டத்திற்கு விடப்பட்ட விஷயமாயிற்று. அப்படி அவர்கள் இஷ்டத்திற்கு விட்டதால் அவனது அஸ்தமனம் ஆரம்பமாயிற்று.

பரிபூரணத் திறமையோடு அவன் பட்டினியிருக்கட்டுமே! மக்கள் சகஜமாக அவனைத் தாண்டிப் போனார்கள். இனி எதுவும் அவனைக் காப்பாற்றாது. யாருக்காவது அந்தக் கலையைக் குறித்து விளக்கிப் பாருங்களேன். ஊ ஹூம், ஈடுபாடு இல்லாத அவனால் அதைக் கிரகிக்கவே முடியாது.

நாளாவட்டத்தில் கூண்டுக்கு மேலே கட்டியிருந்த கவர்ச்சியான 'பானர்' அழுக்கடைந்தது. ஒழுங்கின்றி சீர் குலைந்தது. கடைசியில் கிழிந்தும் போயிற்று. யாருக்கும் அதை மாற்றத் தோன்றவில்லை.

அவனது உபவாச நாட்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் சிறிய போர்டு ஒன்றும் கூண்டின் மேலே இருந்தது. ஆரம்பத்தில் ஒவ்வொரு நாளும் அதில் காணும் நம்பரை அக்கறையோடு மாற்றி வந்தார்கள். முடிவில் வாரக் கணக்காகக் கூட அது மாற்றப்படவில்லை. அதைக் கவனிக்க வேண்டியவர்களுக்கு இந்தச் சின்ன பொறுப்புக்கூட பெரிய அலுப்பைத் தந்தது.

எனவே கலைஞன் முன்பு கனவு கண்டதுபோல், எவ்வித தலையீடு மின்றி காலவரையற்றுப் பட்டினி கிடந்தான். யாரும் அவன் பட்டினிகிடந்த நாட்களைத்தான் கணக்கிடவில்லை.

யாருமே, கலைஞன் உட்பட யாருமே, அந்த சாதனை எவ்வளவு மகத்தானது என்று அறியவில்லை. அவனது உள்ளமோ வேதனையால் கனத்தது.

எப்போதாவது ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு கவலையற்ற மனிதன் அங்கே நிற்பான். போர்டிலே பழைய நம்பரே இருப்பதைக் கண்டு இது ஒரு பெரிய மோசடி என்று சொல்லம்பை வீசுவான். ஆனால் அது ஒரு முட்டாள் தனமான பொய். வயிற்றோடு பிறந்த துர் அகங்காரமும், பட்சபாத மற்ற வக்கரிப்பும்தான் அத்தகைய பொய்யை ஈன்றெடுக்க முடியும்.

ஏனெனில் மோசடிசெய்வது கலைஞனல்ல. நாணயமாக அவன் தன் கடமையைச் செய்து வந்தான். அவனுக்

குரிய அங்கீகாரத்தைத் தராமல் உலகம்தான் அவனை மோசடி செய்து கொண்டிருந்தது.

என்னவாக இருந்தால் என்ன? தினங்கள் பாட்டுக்குக் கழிந்தன. இறுதியில் அதற்கும் ஒரு முடிவு வந்தது.

ஒரு முறை சர்க்கஸ் மானேஜர்களில் ஒருவன் அந்தக் கூண்டைக் கவனித்தான். இவ்வளவு பிரயோஜனமான கூண்டை ஏன் வைக்கோலைப் போட்டு வீணாக நிறுத்தி வைத்திருக்க வேண்டும் என்று பணியாட்களைக் கூப்பிட்டுக் கேட்டான்.

யாருக்கும் பதில் சொல்லத் தெரியவில்லை. ஒருவன் மட்டும் அந்த நம்பர் போர்டைப் பார்த்தான். பட்டினிக் கலைஞனின் ஞாபகம் வந்தது.

வைக்கோலுக்குள்ளே நீண்ட கழிகளை விட்டுத் துழாவினார்கள். கலைஞனைப் பிறகு உள்ளே கண்டார்கள்.

'இன்னுமா நீ பட்டினி இருக்கிறாய்? அட பகவானே, எந்தக் காலத்தில் முடிக்கப் போகிறாய்?' என்று கேட்டான் மானேஜர்.

'என்னை மன்னியுங்கள். நீங்கள் எல்லோருமே' என்று கிசுகிசுத்த குரலில் கூறினான் கலைஞன்.

அவனுக்கு 'மறை' கழன்று விட்டது என்று பணியாளர்களுக்கு சமிக்ஞை செய்வது போல தலையைத் தொட்டுக் காட்டிவிட்டு மானேஜர் தொடர்ந்தான்.

'நிச்சயமாக, நாங்கள் உன்னை மன்னிக்கிறோம்!'

'நீங்கள் எல்லாம் எனது பட்டினிக் கலையைப் போற்ற வேண்டும் என்று நான் எப்போதும் தவிப்போடு விரும்பினேன்.'

மானேஜர் அவனுக்குத் தயவு புரியும் குரலில் கூறினான்.

'நாங்கள் அதைப் போற்றுகிறோம்!'

'ஆனால் நீங்கள் அதைப் போற்ற வேண்டியதில்லை' என்றான்.

'அப்படியா, ரொம்ப நல்லது! நாங்கள் அதைப் போற்றமாட்டோம். ஆனால் நாங்கள் அதை ஏன் போற்றக் கூடாது?' என்று குறுக்கிட்டான் மானேஜர்.

'ஏனென்றால் நான் பட்டினி இருக்க வேண்டியது தான். அதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை' என்றான் கலைஞன்.

'அந்த வார்த்தைகளைக் கூர்ந்து கவனியுங்கள்' என்று தன் பரிவாரத்திடம் கூறிவிட்டு மானேஜர் தொடர்ந்தான் 'ஏன் உனக்கு வேறு வழியில்லை?'

'ஏனென்றால்' என்று கூறியவாறே, தனது இளைத்த தலையைச் சற்று உயர்த்தித் தான் கூறும் ஒரு வார்த்தை

கூட வீணுய் விடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு மானேஜரின் காதுகளை நோக்கி ஒரு முத்தத்திற்குக் குவிவதுபோல் தன் உதடுகளைக் குவித்தான்.

'ஏனென்ருல், எனக்குப் பிடித்த எந்த சாப்பாட்டையும் என்னுல் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி நான் கண்டு பிடித்திருந்தால், என்னை நம்புங்கள்; நான் இத்தகையசலசலப்பை ஏற்படுத்தியிருக்க மாட்டேன். உங்கள் எல்லாரையும் போல என் வயிற்றை நிரப்பி இருப்பேன்.'

அவைதான் அவனது கடைசி வார்த்தைகள். ஆனுல் அந்த தீட்சண்ணியமான விழிகளில், தற்சமயம் பெருமை எதுவுமற்ற, இன்னும் அவன் பட்டினியாகத்தான் இருக்கிருன் என்ற உண்மை தெளிவாய்த் தெரிந்தது.

'நல்லது, இனி எல்லாவற்றையும் சுத்தம் செய்யுங்கள்' என்ருன் மானேஜர்.

அவர்கள் கலைஞனை அந்த வைக்கோல் குவியலோடு சேர்த்துப் புதைத்தார்கள்.

காலிக் கூண்டிற்குள்ளே ஓர் இளம் சிறுகதையைக் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

நீண்ட காலமாக கவனிப்பாரற்றிருந்த அந்தக் கூண்டில் ஒரு வன விலங்கு திரியும் காட்சி, ஒரு மந்த உள்ளத்திற்குக் கூடப் புத்துணர்ச்சியூட்டிற்று.

அந்த வன விலங்கிற்கு எந்தக் குறைபாடும் இல்லை. அதற்கு எவ்வகையான உணவு தேவையோ அதைக் குறித்த காலத்தில் தாமதமின்றி வேலையாட்கள் கொண்டு வந்து போட்டார்கள். அது தன் சுதந்திரத்தை இழந்து விட்ட மாதிரி கூடத் தோற்றமளிக்கவில்லை.

கட்டுமஸ்தாகத் திமிறிக் கொண்டு நிற்கும் அந்த உடம்பு தன் சுதந்திரத்தையும் கூடவே சுமந்து கொண்டு நடமாடுவதுபோல் தான் தோன்றிற்று. ஆம், இரையைக் கிழிக்கும் அதன் பற்களுக்கடியில் தான் எங்கோ அந்த சுதந்திரம் இருக்க வேண்டும்.

உயிர் வாழ்வதில் தனக்கு இருக்கின்ற மகிழ்ச்சியைத்தன் தொண்டையின் மூலம் பயங்கரமாக அது வெளிப்படுத்தும் போது, நடுங்காமல் எவராலும் அங்கே நிற்க முடியாது. இந்தத் தயக்கத்தையும் அவர்கள் தாண்டினுர்கள். கூண்டைச் சுற்றிக் கூடினுர்கள். அங்கிருந்து போக மனசின்றி வெகு நேரம் நின்ருர்கள்.

———

# * சோமோஸா மைதானத்தில்
# சோமோஸா சிலையை
# சோமோஸா திறக்கிறார்

என் பொருட்டு மக்கள் இந்த சிலை எடுப்பதாய்
நான் நம்பவில்லை

உத்தரவு கொடுத்தது யாரென உங்களை விட
எனக்குத் தெரியும்

வரலாற்றில் இடம்பெற இது உதவுமெனவும்
நான் நம்பவில்லை

மக்கள் ஒருநாள் இதை உடைத்தெறிவர்
எனக்குத் தெரியும்

நான் செத்தபின் நீர் எனக்கு சிலை எடுக்க
மாட்டீர்

என் நாளில் என் நினைவாய் நான் இதை
முடிக்கவில்லை

நீங்கள் இதை வெறுக்கிறீர்
எனக்குத் தெரியும்

நான் சிலை எடுத்ததும் அதற்காகவே.

—எர்னஸ்டோ கார்டினல்
தமிழில் ஆர். சுவாமிநாதன்

* சோமோஸா—தென்னமெரிக்க சர்வாதிகாரி

MC FUNDS

# MOOLANGUDI CHIT FUNDS (P) LTD.

1/63, Luz Church Road, Mylapore

MADRAS-4 Phone : 76584

*ANNOUNCES*

## THEIR NEW CHIT SERVICES

| Group | Amount | No. of Months | No. of Members | Monthly Subscription |
|---|---|---|---|---|
| LTA | Rs. 50,000 | 50 | 50 | Rs. 1,000 |
| LTE | Rs. 20,000 | 40 | 40 | Rs. 500 |
| LTC | Rs. 10,000 | 40 | 40 | Rs. 250 |
| LTF | Rs. 1,000 | 40 | 40 | Rs. 25 |
| | | | | Maximum Bid 25% |
| LTJ | Rs. 45,000 | 30 | 30 | Rs. 1,500 |
| STE | Rs. 10,000 | 20 | 20 | Rs. 500 |
| STF | Rs. 5,000 | 20 | 20 | Rs. 250 |
| STG | Rs. 2,500 | 20 | 20 | Rs. 125 |
| STH | Rs. 1,000 | 25 | 25 | Rs. 40 |
| | | | | Bid unlimited |

*May we solicit your kind patronage please.*

G. JAGADISAN,

*Foreman.*

# பின்னைக்கு

வாழ்க்கையின் நெறிகளை, சமுதாயக் கோட்பாடுகளைப் பற்றித் தங்கள் சிந்தனைத் திறன் பாற்பட்ட புதிய நோக்குகளைச் சொல்லச் சென்றவர்களைப் பற்றிய அறிமுகம் இது. தத்துவம் என்பதைத் திட்ட வட்டமாக ஒரு குறுகிய வட்டத்தினுள் அடக்கப் பார்ப்பது இயலாத காரியம். சமுதாயத்தின் மனப்புரட்சியை தனி மனிதனின் எண்ண விளைவை பரிணும முறையில் பாதித்த நவீன வாழ்க்கையின் அடிப்படைச் சித்தாந்தங்கள் எனத்தகும் கருத்துக்களின் பரிமாறல் இது.

—ஆசிரியர் குழு

# ஸ்பினோஸா

'நான் எண்ணுகிறேன். ஆகவே நான் இருக்கிறேன்', டெகார்ட்டேவின் இந்த வாக்கியங்கள் அவ்விளைஞனின் மனதில் ஆழப் பதிந்தன. அவன் தனக்காக, தானாகவே எண்ணலானான். மனிதனின் தனித்வ உணர்ச்சியே அவனை மற்றவர்களிடமிருந்து மாறுபட்டவனாக்குகின்றது. சமுதாயத்தில் வாழும்போது கூட்டுப் பொறுப்புணர்ச்சிக்கு நம்மை உள்ளாக்கிக் கொள்ள வேண்டியதாயிருந்தாலும் தனித்வ உணர்ச்சியில்லையேல் மனிதனின் சிந்தனை வளர வாய்ப்பில்லை.

தன்னுடைய சிந்தனையில், அறிவின் விழிப்பில், அவன் செய்த விசாரணை ஞான உலகின் அற்புதக் காட்சிகளை அவன் காண உதவிற்று. ஆனால் அதே காரணத்திற்காக இந்தப் புவி உலகில் அவன் எந்த வகுப்பாருள் பிறந்தானோ அவர்கள் அவனைத் தம் ஜாதியினின்றும் பிரஷ்டம் செய்தனர்.

பரூக்ஸ்பினோஸா (Baruch Spinoza—1632—1677) யூத குலத்தில் பிறந்தார். இளம் வயது முதலே நூல்களைப்படிப்பதில் ஆர்வமிருந்து, பற்பல துறைகளைப் பற்றிப் படித்து அறிந்தார். ஐரோப்பாவின் சமுதாயச் சூழ்நிலை யூதர்களுக்கு அவ்வளவாகச் சாதகமாக இல்லை. அதனால் தாம்குடியேறிய வெவ்வேறு நாட்டின் அரசியல், சமுதாய உடன்பாடுகளை மேற்கொண்டு வாழ வேண்டியவராயினர். தங்கடைய மதம் அழிந்துவிடக் கூடாது என்பதற்காக, புற உலக வாழ்க்கையில் எவ்வித கலக்கமும் இன்றி அன்றைய கிறிஸ்துவ சமுதாயத்தின் விதிமுறைகளுக்குத் தம்மை உட்படுத்திக் கொண்டனர்.

இளைஞன் ஸ்பினோஸா யூத மத குருமார்களின் நூல்களைப் படித்ததோடல்லாமல், கிறிஸ்துவ விஷயத்தையும், சமய நெறி அடியார்களின் உரைகளையும் படித்தான். அவனுள் எழுந்த வழிப்புணர்ச்சியும், சித்தாந்தப் பார்வையும் தான் கற்றது கேள்விக்குரியது என்ற உணர்ச்சியை உண்டாக்கின. சமுதாயச் சட்ட திட்டங்களைப் புறக்கணித்தான். ஏன்? எதற்காக? எவ்வாறு? என்ற ஐயப்பாடுகளை உரக்க சிந்தித்தான். அவனுடைய சிந்தனைக் குரல் யூதசமூகத்தை உலுக்கிற்று. வியாபாரிகளான அவர்கள் தம் இனத்தில் தோன்றிவிட்ட இம்மாதிரியான அறிவு

முடிக்கவே தோன்ருமல் நிறுத்தி விட்டதால், பாற்கடல்தான் எல்லாக் கதையிலும் நீளம் என்று நினைப்புத் தட்டிற்று, அப்போது. அப்புறம், படித்து படித்துப் முடிவு என்பதே பிரமை என்று ஆன பிறகு, எல்லாக் கதையுமே ஓரே நீளந்தான் என்று தொட்டுக் கோடி காண வேண்டியிருக்கிறது. படிக்கிறதோடு நின்ருல் தானே கதை முடியும்?

நான் பிரசுரத்துக்காக எழுதாததால் எழுத்தாளன் இல்லையென்று சொல்ல முடியாது. ஆனுல், மற்றவர்களுடைய எழுத்து என்னை நிரப்ப முடியாதபோது எனக்காகவே எழுதித் தள்ளிக் கொள்ளும் போதில் நான் ரசிகன் என்று எனக்கு நானே சொல்லிக் கொள்ளுவேன். ஊர்ப் பொது ஆற்றில் குளிக்காவிட்டாலும், வீட்டுக் கிணற்றில் நம்மை சுத்தம் செய்துகொள்ள முடியாதோ? செத்துப் போனுல் இரண்டும் ஒன்று தானே?

சாவுக் கோட்டுக்கு முன்னுல்தான் என்னுடையது என்றும் உங்களுடையது என்றும் பிரித்துக் கொள்ள முடியும். சாவு சுலபமாக வருகிறவனுக்கு அடுத்தவனுடைய சொத்தெல்லாம் தன்னுடையதுதான். தரங்கிணி உங்களுக்கு மட்டுமேயல்லாமல் எனக்கும் தான் தங்கை. வயதைப் பற்றிய கவலை இங்கே இல்லை. சாவுக்குப் பிறகு யாருக்கும் வயது இல்லை. தரங்கிணி உங்கள் ராகமானுல் எனக்கு அதே முடிவில் இன்னெரு ராகமாகி விட்டுப் போகிருள்.

4-11-'68

நேற்று காலையில் விட்ட சொல்லை, மறுநாள் இரவில் பிடிக்கிறேன். ஒன்று, ஒன்று, ஒன்று என்று ஒவ்வொரு கனவாய் முடித்து, கடைசியில் ஏகாவோடு பின் அட்டையை மூடியாயிற்று. உங்கள் திருப்திப்பட, ஒரோரு சமயத்தில் உங்கள் கனவுகளை என் கனவுகளாய்க் கண்டுகொண்டு சிறு சிறு தவங்களைச் செய்தாயிற்று.

எல்லாம் முடிந்து விட்ட பின், மௌனமாய் பேச்சொழிந்து — பேச்சழித்து—எனக்கும் உங்களுக்கும் பாலமாய்ப் பேனுவைக் கையில் எடுத்து, தாளில் வைக்கிறேன்.

இருந்தாலும், நேற்றிருந்த வேகமெல்லாம் இப்போது இல்லாமல் அழிந்து போனதால், சொல்ல வந்தவற்றைச் சொல்ல மனமும் திறமுமின்றி, கடிதத்தை முடித்து விடத் துடிக்கிறேன்.

எழுதிவிட்டதால் உங்களுக்கு அனுப்பியாக வேண்டும் என்ற நியதிக்கும் உட்படத் துணிகிறேன். —ராஜு

[ருத்ர. வேங்கடவன், 'மாதவ்யம்'' 54, தலைவிரித்தான் சந்து, மேலமாசி, மதுரை-1.]

### வாசகர் 2

திரு. லா. சா. அவர்கட்கு!

புலியின் உள்ளிருந்து பார்க்கிறீர்கள். எங்களைப் போன்ற சிலர் ''மேலேறிச் சவாரி செய்'' என்ற நினைப்பிலேயே அமிழ்ந்து, செத்த கூட்டின் வாடை கூட, புலியின் வரிவரிக் கோட்டையும் சொடேரெனச் சொடுக்கும் வாலையும், தமிழகத்தின் மிகப்பெரிய ஒரு 'அண்ணனையே' விழுங்கி விட்ட பெருந்திமிரில் சுட்டெரிக்கும் விழிக் கோளங்களையும், கண்டவுடன் அஞ்சி ஓடுகின்றன. ('புத்ர' வைத்தான் தான் குறிப்பிடுகிறேன்)

சில நாட்களுக்குமுன் மதுரை வாசகர் பேரவை 'அம்மா வந்தாள்' 'அமுதமாகி வருக' 'கோகிலா என்ன செய்து விட்டாள்' 'ஒரு புளிய மரத்தின் கதை' 'தயா' ஆகியவற்றை படைப்பிலக்கியத் திறனய்வுக்கு எடுத்து, அலசி, வாசகர்களின் உள்ளக் கருத்தைப் பகிர்ந்து, தி. ஜானகிராமனின் 'அம்மாவந்தாளு'க்கு முதலிடம் தந்ததைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள் என எண்ணுகிறேன்.

அதுபோது, சில அவசரக்காரர்கள், நுனிப்புல்லில் சப்புக் கொட்டுபவர்கள், நினைப்பின் குருதி கெட்டத்தில் தோய மறுப்பவர்கள் 'லா. ச. ராவில் என்ன இருக்கிறது?'' 'படைத்தவன் கருத்தை படிப்பவன் முற்றும் உணர்ந்து அனுபவிப்பதுதான் படைப்பிலக்கியத்தின் இலக்கணம்' 'வார்த்தைப் பதறல்' 'சொல்லலங்காரம்' 'தேவையற்ற பரவலான பல கோணப் பரிமாணம்—என்றெல்லாம் விமர்சித்த கொடூரத்தின் தாக்குதல் தான்...இந்த மடல் என்னலாம்.

1. எழுதப்படுபவைகள் மனிதப் படைப்பின் முழுமைக்கும் பயன் தரும்; தரவேண்டும்; —என்ரு உருவாக்கப்படுகின்றன?

2. புரிய மறுப்பவனுக்கும், பாதிப்புகளின் வீச்சில் தோய மறுப்பவனுக்கும் (இயலாதவனுக்கும்) என்ன சொல்கிறீர்கள்?

3. தங்கள் படைப்பில் சிறந்ததென உங்கள் உள்ளத்தை நிறைத்தது எது?

4. 'புத்ர–11' ஐ விரைவில் வெளியிட்டு எங்கள் வேட்கையைத் தணிவிப்பீர்கள் அல்லவா?

(ஒன்றுமே, ஒன்றிலுமே இல்லாத இந்த 'நான்' எப்படி இவ்வளவு பெரிய 'ஜாம்பவானிடம் துணிந்து கேள்விகளை கேட்டுவிட்டு, பதில் வந்து கண்ணைத் திறக்கும் என்று எண்ணியிருக்கிறேன் என நினைத்தால்...)

ஆனல் ஒன்று மட்டும் நிச்சியம். உங்களை யாராவது சாகும்போது, வெறுமை என

யும் கலந்த வியாபாரம். வெங்காய சாம்பாரின் மணத்தின் முன் வேப்பம்பூ ரசம் இருக்கிற இடம் தெரியாதுதான். ஆழந்தெரியாதவர்களின் கவனத்தில் ஒரு வேப்பம்பூவாக இருந்துகொண்டு வரும் நீங்களோ அல்லது உங்களது எழுத்து வன்மையோ ஒரு படி உயரம்தான் என்னைப் போன்றவர்களுக்கு. அதுவும் என்றைக்கும்! நீங்கள் ஊட்டும் தீபாவளி மருந்தின் உயர்வே தனி!

எனக்கு உங்களைப் போல் எழுத வராது. ஆனால் உங்கள் 'பாணி'யை நான் நமஸ்கரிக்கிறேன். தங்களுடைய மற்ற படைப்புகள் புத்தக வடிவில் வெளியிடப் பட்டிருக்குமாயின் அது கிடைக்குமிடமும் விலையும் எனக்கு எழுதுவீர்களென நம்புகிறேன். உங்களிடம் வெளியில் கிடைக்காத பிரதிகள் இருக்குமானல் தயவு செய்து அனுப்பவும். (வி.பி.பி. மூலம்)

எனது மனமார்ந்த வணக்கங்கள்,

தங்கள் அன்புள்ள
R. கிருஷ்ணன்
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா
தார்வார்

x x x



லா. ச. ரா.

என்னுடைய ரசிகனை வாசகனில் மட்டும் நான் தேடவில்லை. ரசிப்பவர்கள் அவர்களில் மட்டும் இல்லை. தன்னைத் தானே தேடிக்கொண்டு Emotional feeling ல், படிக்காமல் சொல்பவர்களை நான் ஏற்றுக் கொள்வதில்லை. சிந்தனையால் தூண்டப்பட்டவர்கள் அத்தனை பேரும் என்னுடைய வாசகர்கள் தான். என்னுடையதை படிப்பவர்களை மட்டும் நான் என் வாசகர்கள் என்று பிரித்துப் பார்க்கவில்லை. அவர்கள் தெரிந்தும் தெரியாமலும் இருக்கிறார்கள். புரிஞ்சுண்டவன் பாராட்டுவான். புரிந்தவனே எனது ரசிகன். கடிதம் எழுதுபவனை மட்டும் எனது ரசிகன் என்று சொல்லிவிட முடியாது. வாழ்க்கையை ரசிக்கத் தெரிந்தவர்கள் அத்தனை பேரும் ரசிகர்களே. இந்த வாசகர்களை நான் சந்தித்ததும் இல்லை. பதிலும் எழுதிய

தில்லை. கடிதப் போக்குவரத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. இந்த மாதிரி விசாரங்கள் இலக்கியம் தவிர மற்றதில் தான் போய்முடிகிறது.

இப்படிப்பட்ட கடிதங்கள் இப்போது பழக்கப்பட்டு விட்டது. ஆரம்பத்தில் கடிதங்களால் ஏற்படும் மனக் கிளர்ச்சியின் விளைவாக எனக்கு பீதியே ஏற்பட்டது. கடிதங்கள் பாராட்டுக்களோடு நிற்கவில்லை. நான் எந்த ஆழத்திற்குச் சென்றேனோ அதையும்விட ஆழமாக வாசகன் எதிரொலிக்கும்போது, இவ்வளவு ஆழத்தில் சென்றேனா என்ற பயம் எனக்கு ஏற்படுகிறது.

எழுத்து இலக்கியத் தரம், வாழ்க்கை இலக்கியத்தரம் இந்த இரண்டில் வாழ்க்கை இலக்கியத் தரத்தைப் புரிந்து கொண்டிருக்கிறார் இத்த ராஜு. மகாத்மா, வாழ்க்கை இலக்கியத் தரத்தை நன்கு புரிந்து கொண்டவர். வாழ்க்கையைப்பற்றிய நல்ல கவிதா நோக்கு இவருக்கு இருக்கிறது.

வாழ்வுக்கும் எழுத்துக்கும் இடையே வேறுபாடில்லை என்பதைப் புரிந்து கொண்டு என் எழுத்தில் தன்னை புரிந்து கொண்டிருக்கிறார் திரு கிருஷ்ணன்.

திரு. நடராஜன் ஒரு நல்ல இலக்கிய ரசிகர் என்றுதோன்றுகிறது.

திரு. சுப்பிரமணியம் கேள்விகள் கேட்கிறார். கேள்வி கேட்பவர் என் ரசிகர் இல்லை. என் எழுத்தில் என்ன Total Impression ஏற்பட்டது என்பதுதான் தேவை. கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் எல்லாம் சமாதானங்களே. அதனால் கேள்வி கேட்காமல் இருப்பதே நல்லது.

எழுதப்படுபவைகள் மனிதப் படைபுக்கள் முழுமைக்கும் பயன்தரும் — தரவேண்டும் என்று உருவாக்கப் படுவதில்லை.

புரிய மறுப்பவனுக்கும், பாதிப்புகளில் தோய மறுப்பவனுக்கும் என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டிருக்கிறார் சுப்ரமணியம். இது நல்ல கேள்வி. புரிய மறுப்பவனைப் பற்றிக் கவலையில்லை. ஏன் என்றால் அவன் மறுப்பதிலிருந்தே அவன் புரிந்து கொண்டுவிட்டான் என்ற ரகசியம் நமக்குப் புரிந்து விடுகிறது.

இயலாதவன் பற்றி என்ன சொல்வது. புரிவது இரண்டு வகைப்படும். மூளை வழியே புரிவது ஒருமுறை. நாக்கு ருசியைப் புரிந்துகொள்வது மாதிரி இது. ஹிருதய பூர்வமாகப் புரிவது என்பது மற்றொரு வகை. Intellectual ஆக இருந்தால் அழுத்தமாகப் புரிந்து கொள்வான். அதல்லாதவனுக்கு கிளர்ச்சி

யாவது (disturbance) முதலில் இருக்கும். தெளிவு பிறகு தோன்றும். இயலாதவன் என்ற நிலையே கிடையாது.

என் எழுத்தில் சிறந்தது எது என்று கேட்டிருக்கிருர். இது ஒரு உண்மையான எழுத்தாளன் பதில் தருவதற்கான முறையான கேள்வியல்ல.

புத்ர தொடர்ந்து வருவது நிச்சயம். முடியும் வரை எழுதுவேன். தானுகத் தன் முடிவை அது அடையும் வரை புத்ரவை எழுதுவேன். இரண்டாம் பாகத்துக்கு மேலும் கூட அது தொடரக் கூடும்.

என் எழுத்தின் மூலம், ரசிகர்கள் என்ன பயன் பெற்ருர்கள் என்பது அவர்களைப் பொறுத்தது. ஆனுல் நான் பயன் பெறுகிறேன். பயன் என்ற சொல்லை நான் 'சப்ஜக்டி'வாகச் சொல்கிறேன். 'சால்வேசன்' தேவையில்லை. அனுபவம் உண்டு. பயன்-பலன் ஒன்றும் இல்லை. என்னுடைய கணிப்பில் வாசகர்கள் அந்த அனுபவத்தைப் பெறத்தான் செய்கிருர்கள்; பெற வேண்டும்.

வாசகன் எழுத்தாளன் யாராலுைம் சரி; ஒரு எழுத்தைப் படிப்பதன் மூலம் எந்த வாசகனுக்கும் ஒரு அனுபவம் ஏற்படுகிறது. அனுபவத்தின் மூலம் வாசகனின் பாத்திரத்திற் கேற்ப அவனவனில் ஒரு ரசவாதம் ஏற்படுகிறது. அதுவே அவர்களின் பலனே, பயனே அனுபவமோ-எனக்குத் தெரியாது.

சில சந்தர்ப்பங்களில் நான் படைப்பாளி என்ற முறையில் கண்ட அனுபவத்தை விட உயர்ந்ததாக, ஒரு வாசகனின் அனுபவம் இருக்கலாம். அந்த மாதிரி நேர்வது அவன் பாக்கியம். என் தகுதிதான் என்னிடம் அமைகிறது.

வாசகர்களின்எதிரொலிகள் கேட்கமகிழ்ச்சிதான். ஆனுல் சில 'அம்மியூஸ் மெண்டா'க இருக்கிறது. புரியாதவன் தான் புகழ்வான்.

வாசகர்களின் எதிரொலிகளை வைத்து எனது எழுத்துக்களை நான் என்றும் பாதிக்கவிட்டதில்லை. என் எழுத்து என் விதி. அது முடியும்போது தானுக இதுவும் முடியும்.

என் எழுத்தின் நடை இப்படி அமைந்ததற்குக்காரணங்களைக் கேட்கிருர்கள். Western Literature அதிகமாகப் படிப்பதும், சங்கீத ஈடுபாடும் இதற்குக் காரணங்களாக இருக்கலாம். நான் உங்களோடு பேசிக் கொண்டிருக்கும் போதும் இலக்கியம் செய்துகொண்டு தான் இருக்கிறேன். சொற்களின் விளைவுகள் மகத்தானவை. ஒரே சொல் ஒரு இடத்தில் சாப

மாக ஒலிக்கும். பிரிதோர் இடத்தில் மந்திரமாக ஆகி விடும். நான் மிகவும் உணர்ச்சி வசப்பட்டவன். நீங்கள் இவைகள் எல்லாவற்றையும் ஸ்வரஸ்தாரமாகவே பார்க்கலாம். 'சைகாலஜி', 'ஃபிலாசபி' இரண்டும் வாசகர்கள் காண வேண்டிய ஒன்று. நான் சௌந்தர்ய உபாஷகன்.

தமிழ்வாசகர்களைப் பற்றிய நிறைவு எனக்கு உண்டு. அவர்களைப் பற்றி பரிபூரண நம்பிக்கையும் எனக்குண்டு. பதிப்பாளர்களின் குறுக்கீடு இல்லாமலிருந்தால் இந்த நிலை இன்னும் உயரும்.

வாசகனைவிட எழுத்தாளன் உயர்ந்தவனாக என்றுமே இருந்தது கிடையாது. இருவரும் ஒரே நிலையில் இருக்கிறார்கள்.

தமிழ்மொழியின் வளர்ச்சி என்பது, கலாச்சாரம் பண்புக்கு ஏற்பத்தான் தரத்தில் உயர முடியும். இதில் எனக்கு இப்போதைய நிலை திருப்தியாக இல்லை.

[லா.ச.ரா. வின் இந்த பதில் அவர் சொல்லச் சொல்ல எழுதப்பட்டது. அதனால் இந்த நடையில் அவருடைய பேச்சு நடையும் விழுந்திருக்கிறது. இதில் பிரசுரமாகியிருக்கும் கடிதங்கள் லா.ச.ராவுக்கு அவருடைய வாசகர்கள் எழுதியவற்றிலிருந்து லா.ச.ரா. வினாலேயே தேர்ந்தெடுக்கப்பட்டவை —நிர்வாக ஆசிரியர்]

---

**அடுத்த இதழில்**

# எங்கோ—
# யாரோ—
# யாருக்காகவோ...

ஜெயகாந்தன் எழுதும் சிறுகதை

# உரத்த சிந்தனை

முதல் இதழின் உரத்த சிந்தனைப் பகுதியில் கேட்கப்பட்டிருக்கின்ற கேள்விகளில் பல ஆசிரியர் குழு நண்பர்களாலும் என்னோடு மிக நெருக்கமாக இருப்பவர்களாலும் கேட்கப்பட்ட கேள்விகள். ஆதலால் ஒரு குறிப்பிட்ட மாதிரியிலேயே இவைகள் அமைந்து விட்டிருக்கின்றன. பலதரப்பட்ட கேள்விகளும், அதற்குரிய பலதரப்பட்டபதில்களும் பின்வரும் இதழ்களில் இடம் பெறும் என்று நம்புகிறேன். கேள்விகளை மனம் விட்டு எது பற்றியும் கேட்கலாம். ஆனால் அது சிந்தனையைத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும்.

—ஆசிரியர்

கே: இலக்கியத்தில் பிரச்சாரத்தின் இடம் என்ன?

ப: பிரச்சாரமில்லாத இலக்கியமே கிடையாது. பிரச்சாரங்களும் இலக்கியமாவதுண்டு. இலக்கியங்களும் பிரச்சாரமாவதுண்டு. முன்னது சிறப்பு. பின்னது வீழ்ச்சி.

ஏசுநாதரும், ராம கிருஷ்ண பரம ஹம்ஸரும், உபநிஷத்துக் கதைகளைச் சொன்னவர்களும் தங்கள் பிரச்சாரத்தையே இலக்கியமாக்கியதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆழ்ந்த ஞானம் இலக்கியத்திற்கு புறம்பானதல்ல. இசை மேதையான பீதோவனும், தியாகையரும் கூடப் பிரச்சாரம் செய்தார்கள் என்பது அடிப்படையான உண்மைதான்; எனினும் அந்த அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு அவர்கள் எழுப்பிய கலை மாளிகைகள் மகத்தானவை. ஏன்? பிகாசோ கூடப் பிரச்சாரம்தான் செய்கிறான். ஆனால் இந்த பிரச்சாரகர்கள் கலைப் பிரச்சாரகர்கள் ஆவார்கள்.

கலைஞன் ஒரு பிரச்சாரகனே. கலைஞன் பிரச்சாரம் செய்தால் அவன் பிரச்சாரத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் கூட அவனை விட்டுப் போக முடியாது. ஆனால், இந்தக் கேள்வி ஏன் வருகிறது? கலைஞர்கள் அல்லாதவர்கள் பிரச்சாரம் செய்வதனால் வருகிறது. அந்தப் பிரசாரத்தையே அவர்கள் கலை என்று வற்புறுத்துவதனால் வருகிறது.



கே: இலக்கியத் தரம் பத்திரிகைத் தரம் இரண்டும் ஒன்றிணைய முடியாதா?

ப: முடியாது என்பது அல்ல; கூடாது. பத்திரிகை என்பது இலக்கியத் தரத்திற்காக மட்டும் நடத்தப்படுவது அல்ல. இலக்கியப் பத்திரிகைகள் மட்டுமே இலக்கியத் தரமாக அமையலாம். மேல் நாடுகளில் விஞ்ஞானத்திற்கென்றும், மருத்துவத்திற்கென்றும், செய்திகளுக்கென்றும், பொழுதுபோக்குக்கென்றும் பத்திரிகைகள் உண்டு. எப்பொழுதாவது பல்சுவை கருதி இலக்கியத் தரமும் தலை காட்டிடினால் இலக்கிய அபிமானிகள் மகிழலாமே தவிர, அந்தந்தப் பத்திரிகைகளின் ஒரிஜினாலிடி கெடும் அளவுக்கு அதிலே இலக்கியத் தரம் வரவேண்டு

மென்று இலக்கிய அபிமானிகள் வற்புறுத்தலாகாது. இலக்கிய வாதிகள், சில 'இஸ' வாதிகள் மாதிரி எல்லாவற்றிலும் தங்கள் முகத்தையே தரிசிக்க ஆசைப்படும் வெறியர்கள் (Fanatics) ஆகிவிடலாகாது. பத்திரிகைகள் பத்திரிகைக்கென்று தாங்கள் வகுத்துக்கொண்ட நிலையில் தான் நிற்க வேண்டும்.

ஆனல் இந்தக் கேள்வி ஏன் வருகிறது? இங்கே பத்திரிகைகள் ஆரம்பிக்கிறவர்கள் எல்லாருமே இலக்கியத்தை உய்விக்க என்று கட்டியம் கூறிக் கொள்வதனுல் வருகிறது. வேறு நோக்கங்களை வைத்துக் கொண்டு இலக்கியப் போர்வை இட்டுக் கொள்வதனுல் வருகிறது.

கே: மதம் ஒரு அபினியா?

ப: இல்லை. லெனின் சொன்னுரே, மார்க்ஸ் சொன்னுரே, என்று கேட்காதீர்கள். மதத்தின் பெயரால் அபினி விநியோகிக்கப்பட்டதைக் குறித்து அவர்கள் அப்படிச் சொல்லி இருக்கலாம். ஆனல் இன்று அப்படிச் சொன்னவர்களின் பெயராலேயே அபினி விநியோகிக்கப்படுகிறது. எனவே அந்தத் தத்துவங்களையோ மதத்தையோ அபினி என்று சொல்வது சரியாகாது. ஏசுநாதரை அபினி வியாபாரி என்று லெனினே, மார்க்ஸோ யாரும் சொன்னதாக நான் கேள்விப்படவில்லை. ராம கிருஷ்ண பரம ஹம்சரும் விவேகானந்தரும், மகாத்மா காந்தியும் இங்கு அபினி வினியோகித்ததாக நாம் உணரவில்லை. கிறிஸ்துவ மதம் இந்தியாவிற்கு வினியோகித்தது அபினி அல்ல; கல்வி.

மதமொரு அபினியல்ல. மதத்தின் பெயரால் 'அபினி' வினியோகிக்கப் பட்டதுண்டு. மார்க்ஸிஸத்தின் பெயராலும் அது வினியோகிக்கப்படுகிறது. வினியோகிக்கப் படுகின்ற அந்த விஷத்தைதான் தடுக்க வேண்டுமே தவிர, எதன் பெயரால் வினியோகிக்கப்படுகிறதோ அதையே எதிர்த்து நிற்பவர்கள் இன்னெரு அபினி மயக்கத்திற்கு ஆளாகி நிற்பவர்கள்.

ஓரிடத்தில் டால்ஸ்டாய் சொல்லியிருக்கிருன், உலகத்தின் எல்லா ஒழுக்கக் கேடுகளுக்கும் சங்கீதம் தான் காரணமென்று. இது எந்த தொடர்பில் எந்தப் பாத்திரத்தில் எப்போது சொல்லப்பட்டது என்பதைக் கொண்டு பார்க்க வேண்டுமே தவிர, சங்கீதத்தை ரசிக்கிறவர்கள் எல்லாம் ஒழுக்கக் கேடுள்ளவர்கள் என்பது பேதைமையாகும்.

டால்ஸ்டாயை இலக்கிட மேதையாக ஏற்றுக்கொண்யவர்கள் எல்லோரும் சங்

கீதத்தை எதிர்த்து சண்டைக்குக் கிளம்பிவிடக் கூடாது. ஆனால் இந்தக் கேள்வி ஏன் எழுகிறது?

பிறநாடுகளில் பிறநாட்டறிஞர்கள் எழுதியவற்றையெல்லாம் நம்மவர்கள் படிப்பதனாலும், ஆனாலும் ஆழ்ந்து படிக்காததனாலும் எழுகிறது.

**கே: இரக்கம் காட்டுவது, பெறுவது இவற்றில் சிறந்தது எது?**

—*மிஸ் திலகா, ஈரோடு.*

ப: இரக்கம் என்ற சொல்லுக்கு பொருளே இல்லாத நிலையை எய்துவதே உயர்ந்த நிலை. இரக்கம் என்பதே இரங்கத் தகுந்த ஒன்றை சார்ந்த உணர்வு. இரங்கத் தகுந்த இடத்தில் இரக்கம் காட்டாமல் இருப்பது கொடுமை. இரங்கத் தக்க நிலைமையை என்றும் நிலையாக வைத்துக்கொண்டிருப்பது அதனினும் கொடுமை. எந்த நிலையிலும் நம்மைக் கண்டு இரக்கம் கொள்ளும் அளவுக்கு நம்மை இறக்கிக் கொள்ளாமல் இருப்பது வாழ்க்கை.

**கே: இலங்கை இலக்கியங்கள் பற்றி தங்கள் கருத்தென்ன?**

ப: நான் விமர்சகனல்ல. நல்ல கதைகளும் மோசமான கதைகளும் இலங்கையிலும் உண்டு. எனக்கு வாய்த்துள்ள இலங்கை எழுத்தாள நண்பர்கள் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்கள். இங்கேயுள்ள கம்யூனிஸ்டு நண்பர்கள் எப்படி எழுதுகிறார்களோ அப்படித்தான் அவர்களும் எழுதுகிறார்கள்.

**கே: சில அரசியல் வாதிகள் எழுத்தாளர்களுக்குக் கதைக்கரு (Theme) தந்து கதை எழுதச் சொல்லுகிறார்களே அதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?**

ப: நானறிந்த வரை நண்பர் பாலதண்டாயுதத்தைத் தவிர வேறு யாரும் இந்தக் காரியத்தில் இறங்கவில்லை. இதைப் பற்றி என் கருத்தை அவரிடம் நான் நேரில் தெரிவித்துள்ளேன். இலக்கிய ஆசிரியரை மதிக்கிற அரசியல் வாதிகள் இந்தக் காரியத்தைச் செய்யாமல் இருப்பது உசிதம் என்கின்ற கருத்து எனக்கு அதைப் படித்ததும் ஏற்பட்டது. தங்கள் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு ஒரு கட்சிப் பணியாக அப்படியொரு தீம் (Theme) கொடுத்துக் கதை எழுதச் சொல்லலாம். பொதுவாக இப்படி தீம் (Theme) தருவதின் மூலம் பிள்ளையார் பிடிக்கக் குரங்காகத்தான் முடியும். இலக்கியத்திற்கும் லாபமில்லாமல் அவர்கள் கட்சிக்கும் லாபமில்லாமல் போய்த் தொலையும். இன்னும் பார்த்தால் அவர்

களின் எதிரிகளுக்கே அது பயன்படும். திரு பாலதண்டாயுதம் தந்திருக்கிற அந்தக் குறிப்பிட்ட தீமை (Theme) வைத்து கம்யூனிஸ்டு எதிர்ப்புக் கதையும் எழுத முடியும்.

கே: எழுத்தாளனின் சமூகப் பொறுப் பென்ன?

ப: எழுத்தாளனின் சமூகப் பொறுப்பு, தார்மீகப்பொறுப்பு, குடும்பப் பொறுப்பு, சொந்தப் பொறுப்பு எல்லாமே எழுத்து ஒன்றுதான்.

கே: பூர்ஷ்வா என்ருல் என்ன ?

ப: இதிலே என் விளக்கம் அல்ல முக்கியம். பூர்ஷ்வா என்ற பிரென்சு வார்த்தைக்கு ஓர் அர்த்தம் உண்டு. அந்த வார்த்தையைப் புரிந்து கொள்ள என்சைக்ளோபிடியா (Encyclopaedia) வைப்பருங்கள்.

கே: 'இஸ' விமர்சனம் என்று 'ஞானரதம்' குறிப்பிடுவது எதை ?

ப: இஸம் என்று நான் குறிப்பிடுவது எல்லா இஸத்தையும் தான். விமர்சனம் என்பது விமர்சனமாக இருக்க வேண்டுமே தவிர ஒரு இஸத்தை வற்புறுத்தும் விமர்சனமாக இருப்பது இலக்கிய விமர்சனமாகாது. விமர்சகர்கள் ஒரு இஸத் தின் பார்வையுடையவர்களாக இருப்பதில் ஆட்சேபனை இல்லை. ஒரு ரியலிஸ்டோ, ஒரு நேசகர லிஸ்டோ, ஒரு நிகிலிஸ்டோ, ட்ராட்ஸ்கியிஸ்டோ ஒரு சோஷலிஷ்டோ, மாவோயிஸ்டோ, ஒரு ஹிந்துயிஸ்டோ, காந்தியிஸ்டோ, நேருயிஸ்டோ, ஒரு கேபீடலிஸ்டோ, ஒரு மார்க்ஸிஸ்டோ இலக்கியத்தை எப்படி அணுகுவது என்பது இலக்கியப் பிரச்சனை அல்ல; அந்தந்த இஸங்களின் பிரச்சனை அது. இந்த இஸ்டுகள் இலக்கிய விமர்சகர்களாக இருக்கலாகாது என நான் கருதவில்லை. ஆனல், இந்த இஸப் பிரச்னையை ஒவ்வொரு இலக்கியத்தின் மீதும் சுமத்துகிறவன் இலக்கிய விமர்சகனுகமாட்டான். அது இலக்கிய விமர்சனமும் ஆகாது. அவன் 'இஸ' விமர்சகன் ஆவான். அது இஸ விமர்சனமாகும்.

கே: கோபம், அகங்காரம், ஆசை, பந்தபாசம் இவைகள் ஏது மற்ற வாழ்க்கையை உங்களால் ரசிக்க முடியுமா ?

ப: முடியும், விவேகம் மட்டுமிருந்தால். அது குறையும் பொழுதுதான் இவை யாவும் வருகின்றன. அது எவ்வளக்கெவ்வளவு குறைகிறதோ அவ்வளக்கவ்வளவு மேற்சொன்ன பண்புகள் தலை எடுக்கின்றன.

கே: தாமஸத்தில் அழுந்திக் கிடப்பவன், சாத்வீகத்தில் லயித்திருப்பவன், ஆகியவர்களிடையே உள்ள வெளிப்படையான வேறுபாடுகளை வரையறுக்க முடியவில்லையே ஏன்?

ப: வெளிப்படையான வேறுபாடுகள் அவ்வளவு முக்கியமானதல்ல. விளைவுகளே முக்கியம். விளைவுகளை வைத்துத்தான் இது சத்துவ குணமா தாமஸ குணமா என்று கவனிக்க இயலும். விளைவுகளை வைத்துத்தான் எதுயோகம் எது தூக்கம் என்றும் கணிக்க முடியும். ஸ்திதப்ரக்ஞனும், சித்த சுவாதீனமில்லாதவனும் ஒரே மாதிரி காணப்படுவார்கள். அறியாமை, ஸ்திதப்பிரக்ஞர்களைச் சித்த சுவாதீனம் இல்லாதவர்களாகவும் சித்த சுவாதீனமற்றவர்களை ஸ்திதப்பிரக்ஞர்களாகவும் கண்டு மயங்கும். தன்பொருட்டு ஹிம்ஸையைத் தவிர்க்க வேண்டி அகிம்ஸை பேசுபவனும், பிறர் பொருட்டு ஹிம்ஸையைத் தவிர்க்க வேண்டி அகிம்ஸை பேசுபவனும் ஒரே பாஷைதான் பேசுவார்கள். ஆனால் முன்னவன் கோழை; பின்னவன் வீரன். கையிலே துப்பாக்கி ஏந்தி வீரனாக நின்றவன் துப்பாக்கியில் குண்டு தீர்ந்தபிறகு இரு கைகளையும் தூக்கிப்பணிகின்ற கோழையாகவும் மாறுவான்.

அவனுடைய வீர உருவம் வெறும்வேஷம். கைகள் இரண்டையும் எப்போதுமே விரித்துக்கொண்டு துப்பாக்கி ஏந்திய சைனியத்தின் முன்னால் கூட நிதானமாக நியாயம் பேசுகிறவனே வீரன்—இவன் எப்போதுமே வீரன். எனவே வெளித்தோற்றங்கள் அல்ல, விளைவுகளின் தன்மைகளை வைத்தே தாமசம்—சத்துவம் இரண்டையும் கணிக்க இயலும். *

---

ஞானரதம்—2-ல்

தத்துவ உலகிற்கு தமிழ் அளித்த மூலதத்துவங்கள்

—தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் தொடர்கட்டுரை ஆரம்பமாகிறது.

மற்றும்

'அ-கஹானி'— கதையில்லாத கதை
சரஸ்வதிராம் நாத்தின் தமிழாக்கம்

வாசகன்யார்— எழில் முதல்வனின் ஆய்வு

இன்னும் பல......

“ஞானரதத்தை இவ்வகையில் தொடங்கிய தங்களுடைய உயர்ந்த எண்ணங்கள் வெற்றி பெற திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார். குன்றக்குடி




“மற்றவர்களை விட ஜெயகாந்தன் அதிகம் சாதிக்க முடியும், என்பது என் நம்பிக்கை. இரண்டுகாரணங்கள். இதுவரை Receptive ஆக இல்லாதவர்கள் ஜெயகாந்தன் சொல்கிறார் என்றால் காது கொடுத்துக் கேட்கத் தயாராக இருப்பார்கள். மக்களுக்குப் பிடிக்காதவற்றைச் சொன்னால் கூட, ஜெயகாந்தன் சொல்வதால் அதில் ஏதோ இருக்கவேண்டும் என்று சிந்திக்க வாவது செய்வார்கள். மக்களுக்கு எட்டாத விஷயங்களை, அவர்களுக்குப் பிடிக்காத விஷயங்களை, அம்மக்களிடையே ஒரு நெருங்கிய இடம்; ஸ்தானம் வகிப்பவர்கள் மூலம் தான் சொல்ல வைக்கவேண்டும். இல்லையெனில் அவ்விஷயங்களை மக்களுக்கு எட்ட வைப்பது கடினம். ஞானரதம் இக்காரணங்களால் வெற்றியடையும் என்பதில் எனக்கு சந்தேகம் இல்லை.”

வெ. சுவாமிநாதன் — புதுடில்லி-22

“ஜெயகாந்தனை ஆசிரியராகக் கொண்ட ஒரு இலக்கியப் பத்திரிகையைப் பற்றிக் கனவு கண்டு கொண்டிருந்தேன். என் மனோரதம் நிறைவேறிற்று. முதல் இதழைப் பார்க்கவும் படிக்கவும் துடிக்கிறேன்”

கி. ராஜ நாராயணன் — இடைசெவல்

“நண்பர் ஜெயகாந்தனை ஆசிரியராகவும், ஆற்றலும் ஆர்வமும் கொண்ட அன்பர்களை ஆசிரியர் குழுவினராகவும் கொண்டு, புதுமை, மாத இலக்கிய இதழ் ஒன்றை வெளியிடத் திட்டமிட்டிருப்பது ரொம்ப சந்தோஷம் தருகிறது.

வல்லிக்கண்ணன் — ராஜவல்லிபுரம்

“ஞானரதம் வெளிவர இருப்பதை அறிந்து மகிழ்கிறேன் சிரத்தையோடு இலக்கியப் பணிபுரிவதற்கு இன்னும் ஒரு பத்திரிகை வருவது நல்லதுதான்.”

நா. பார்த்தசாரதி — சென்னை-2

"மதிப்பிற்குரிய ஜெயகாந்தன் அவர்களை ஆசிரியராகக்கொண்டு வெளிவரவிருக்கும் "ஞானரதம்" பத்திரிகையின் தோற்றம்—அல்லது ஜனனம், ஒரு சுத்தமான இலக்கிய ஏடாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "இஸ" விமர்சக சட்டாம்பிள்ளைகளிடமிருந்து இலக்கியத்தைக் காக்கப் போராடும் என்ற குறிப்பு ஒரு துணிகரமான சவால் என்றே நினைக்கிறேன்.

"மகரிஷி" சேலம்-7

"ஞானரதம் இரண்டாவது 'மணிக் கொடியாக' இருக்க வேண்டும் என்பது அவா"

வி. எம். முத்துராமலிங்கம் M.A. சேலம்-7

"புதிய பத்திரிகையின் உதயம்பற்றி எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. ஜெ. கா. வின் எழுத்தாலும் உங்களது திறமையான நிர்வாகத்தாலும் ஞானரதம் அமர்க்களமாகப் பவனிவந்து இலக்கிய உலகின் காளான்களையும் புல்லுருவிகளையும் நசுக்கி எறியும் என்று திடமாக நம்புகிறேன்.

வே சபாநாயகம், பி. எஸ்ஸி. பி. ரடி. ஆசனூர்

தமிழகத்துச் சிறு கதை வேந்தன் திரு. ஜெயகாந்தன் அவர்களைச் சாரதியாய்க் கொண்டு தமிழகத்து இலக்கிய பாட்டையிலே தங்களது ஞானரதம் வெற்றி உலா வரவிருப்பதை அறிய மிக மகிழ்கிறேன். வருக வருக என வரவேற்கிறேன்.

இரா. சுந்தரவரதன் சேலம்–1

"ஞானரதம் தொடர்ந்து நிற்காமல் ஓடவேண்டும் என்று விரும்புகிறேன்."

சு. இராசாமணி B.A. சேலம்-7

"நானும் எனது நண்பர்களும் கடந்த ஓரண்டு வருடங்களாக திரு. ஜெயகாந்தனை ஆசிரியராகக் கொண்டு ஒரு மாத இலக்கிய இதழ் வெளி வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம்"

ந. ஜெகநாதன் பொள்ளாச்சி

"ரதத்துக்கு, நவீனகார், ஸ்கூட்டர், லாரி போல 'ஆக்சிடண்ட்' கிடையாது. தங்கு தடையின்றி, பிறருக்குக் குந்தகம் விளைவிக்காமல் செல்லக் கூடியது. ஆகையால் "ஞானரதம்" பெயர் மிகவும் பொருத்தமானது."

R. ஜானகி சென்னை-33